REGD. NO. M. 4302



S. 122-50 TM


கல்கி
ALKI
ஜனவரி 15, 1950

டயபெப்ஸின்



ஆகாரம் சரியாக ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்த்ததுதான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப்பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் தக்ஷணமே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.

யூனியன் டிரக், கல்கத்தா

ஏஜண்டுகள்: அப்பா அண்டு கோ., மதராஸ்
மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

UNION DRUG. CALCUTTA

ஆஸ்துமா சளி ஒரே நாளில் அகற்றப்படுகிறது

மெண்டாகோ கண்டு பிடிக்கப்பட்டது முதல் மூச்சுத் திணறி, கபான இழுப்புடனும் ஆஸ்துமாவினால் யாரும் அவதியுற வேண்டாம். மெண்டாகோவை உபயோகித்தால் இன்ஜக்ஷனும் கெடுதலான புகையும் வேண்டாம். ருசியற்ற இரு மெண்டாகோ மாத்திரைகளை ஆகாரத்துடன் சாப்பிட்ட 10 நிமிஷத்தில் உடலிலுள்ள சளி உடனேயே கரைகிறது. சுலபமாக மூச்சு விடலாம். நரம்புகளுக்கு விச்ராந்தி கபானப் பைக்கு தன்மை. விருவிருப்பு ஏற்படும்.

சிசுவைப்போல் அயர்ந்த நித்திரை

ஆஸ்துமாவினால் அவதியுறும் ஆயிரக்கணக்கானவர்கள் முதன் முதலில் மெண்டாகோவை உட்கொண்டு சுகமடைந்தனர். இரவே ஆழ்ந்த நித்திரை செய்தனர் என்றும் கூறுகின்றனர். திட ஆரோக்கியமாகவும் 5 முதல் 10 வருஷம் இளமை யடைந்ததாகவும் உணர்ந்தனர். காரணம் ஆஸ்துமாவினால் ஏற்படும் இடையூறுகளை மெண்டாகோ இயற்கையில் தவிர்க்கிறது. (1) சளியையும் கோழையையும் இளக்குகிறது. (2) கபான மார்க்கத்திலுள்ள சிறு தசைகளுக்கும் பலம் அளிக்கிறது. (3) தேகத்திற்கு விருவிருப்பையும் ரத்தபுஷ்டியையும் அளிக்கிறது.

ஐந்து வருஷமாக ஆஸ்துமா இல்லை

சுலபமாக சுவாசிக்க சக்தியளித்து சுகமான நித்திரையையும் உண்டாக்குகிறது. ஆஸ்துமா அண்டாமல் தேகத்தைப் பண்படுத்துகிறது. ஜே. ஆர். என்பவர் எழுதுகிறார்: "ஆஸ்துமாவினால் என் உயிரே போய் எடையிலும் 40 பவுண்டு குறைந்து விட்டது. இழுப்பு, இருமல், மாரடைப்பு, தூக்கமே இல்லை. சாவைத்தான் எதிர்பார்த்தேன். மெண்டாகோ முதல் இரவிலேயே எனக்கிருந்த பிடிப்பை விடுவித்தது. கடந்த இரண்டு வருஷங்களாக ஆஸ்துமாவே இல்லை. மிஸஸ். ஏ. டபிள்யூ. எழுதுகிறார்: "கடந்த 25 வருஷமாக எனக்கு ஆஸ்துமா உண்டு. மெண்டாகோவை உபயோகித்ததிலிருந்து இரவில் நல்ல தூக்கம். பிறபாடு ஆஸ்துமா உண்டாகவே இல்லை." மிஸஸ். ஜீ. ச. வி. எழுதுகிறார்: "மெண்டாகோவைப் பற்றிக் கேள்விப்பட்ட நன்னாளை வாழ்த்துகிறேன். கடந்த 35 வருஷங்களாக இராத் தூக்கத்தையே அறியாத என்போன்ற ஏழைகளுக்கு ஆண்டவன் அளித்த அமிர்தம் மெண்டாகோவே. தூக்கமின்றி ஆஸ்துமாவினால் உருகிப் போகிறேன். இந்த கஷ்டங்களை யெல்லாம் இப்போது மறந்து விடவேண்டும் என்று உணருகிறேன்."

கைமேல் காணும் பலன்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதுமே ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிசீக்கிரத்தில் போஷணை உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்திரவாதத்தின் கீழ் மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து நிச்சயியுங்கள். மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தியளிக்காவிடில் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

Mendaco

மெண்டாகோ

● ஆஸ்துமா ● மார்ச்சளி நோய் ● ஹே ஜ்வரம் இவற்றை நிவர்த்திக்கிறது

Edited. Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119. Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras


"க்ருஷன்"
எனது கீல் வாதத்தைச் சீக்கிரம் நிறுத்தியது
KRUSCHEN SALTS
கீல் வாதத்தின் கொடிய வலியினால் தாக்கப் படும்வரை சர்மா மிகுந்த சுறுசுறுப்பாகவே தன் வேலைகளை நன்கு செய்து வந்தான்.
"என்னால் வேலையே செய்ய முடியாதபடி அவ்வளவு மோசமானதாக இருந்தது. வேலைக்கே போக முடியாமலிருந்தது; வேலையை இழந்து விடுவேனோ என்றும் பயந்தேன். ஒரு சிநேகிதர் "க்ருஷன்" ஸால்ட்டைச் சாப்பிட்டுப் பார்க்கும்படி சொன்னார். ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்து உடனே குணம் தெரிந்தது. நான் இப்போது கீல்வாதத்தினால் சிரமப்படாமலிருப்பதுமன்றி எனது வேலைகளை முன்னைவிட நன்கு செவ்வனே செய்ய முடிகிறது. இவ்வுணர்ச்சியை நிரந்தரமாகச் செய்யத் தினந்தோறும் தவறாமல் ஒரு சிறு அளவு க்ருஷன் சாப்பிடுகிறேன்."
கீல் வாதத்தின் சித்திரவதையிலிருந்து சீக்கிரமே குணமடைய விரும்பினால் இப்பொழுதே க்ருஷன் சாப்பிட ஆரம்பியுங்கள். க்ருஷனில் உள்ள முக்கியமான ஆறு உப்புக்கள் உங்கள் ரத்தத்தைச் சுத்தம் செய்து, மூத்திரக் காய்களை இயற்கைப் பிரகாரமே வேலை செய்யத் தூண்டுகின்றன. ரத்தத்தில் சேர்ந்துள்ள விஷப் பொருள்களை வெளியேற்றவும் இவை உதவுகின்றன. அதனால் உங்களது வலிகள், பிடிப்புகள், அகலுவதோடு கூடத் தவறாமல் தினந்தோறும் ஒரு சிறு அளவு "க்ருஷனை"த் தொடர்ந்து சாப்பிட்டுவரின் அவ்வலிகள் அநேகமாய் உங்களை மறுபடியும் பாதிக்காது.
இன்றே "க்ருஷன்" வாங்குங்கள். மஞ்சள் பெட்டியில் ரூ. 1¼க்கு எல்லாக் கெமிஸ்டுகளிடமும் மற்றுமுள்ள எல்லாக் கடைகளிலும் விற்பனையாகின்றன.
நீங்களும் அந்த "க்ருஷன்"
உணர்ச்சியைப் பெறலாம்
KSID. 6

இருமல் ஜலதோஷம் இவை களை கவனிக்காமல் அசிரத்தை யாக இருந்தால் பின்னால் தொல்லைகள் பல நேரலாம்



இவைகள் அனேகமாக நிமோனியா, ப்ளூரஸி, ஆஸ்துமா, க்ஷயம் முதலிய ரோகங்கள் பிடிக்க அறிகுறிகளாக இருக்கும். இருமலும் ஜலதோஷமும் வராமல் இருக்க முன் ஜாக்கிரதையுடன் இருங்கள். ஒருவேளை இவை பிடித்து விட்டால் தாமதியாமல் உட்கொள்ள வேண்டிய மருந்து

கஸபின்

•

இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும் இன்றியமையாத சஞ்சீவி

•

தயாரித்த முறை அங்கீகரிக்கப்பட்டது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா : பம்பாய் : கான்பூர்

ஏஜண்டுகள் :

என். தேராய் கௌண்டர் & கோ.

41, பந்தர் தெரு :: சென்னை



நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம்பிறை வடிவாகக் கட்டினாலும் சரி—கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல் இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்க மாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும் கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங் கூந்தலைப் பெறுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் ஒருங்கே அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயனசாலை

கிராஸ் கட் ரோடு, கோயமுத்தூர்



நல்லாடை அணிந்த ஆண்கள் பளபளப்பான பாதரக்ஷைகளை அணிகிருர்கள்

நன்கு பாலிஷ் செய்யப்பட்டு, நன்கு பாதுகாக்கப்பட்ட பாதரக்ஷைகள்தான் நாகரிக தோற்றமளிக்கவல்லது. உயர்ந்த மெழுகுகள் அதிக அளவில் சேர்க்கப்பட்ட கீவி பாலிஷ் பாதரக்ஷைக்கு நன்கு விரும்பமளிக்க உதவி புரிகிறது. சீக்கிரமாக பளபளப்பளிக்கிறது. தோல் வெடிக்காமல் மென்மையாக இருக்கச்செய்கிறது. ஈரப்பட்டாலும் கெடாமல் காக்கிறது. கண்ணாடிபோல் தோலை பளபளப்பாகச் செய்வதால் தூசி படிய விடுவதில்லை. கீவியால் பாலிஷ் செய்யப்பட்ட பாதரக்ஷைகள் அதிக நாள் உழைக்கும், பார்வைக்கும் மிக அழகாக இருக்கும்.

கீழ்க்கண்ட வர்ணங்களில் கிடைக்கும் :- கீவி டார்க்டான், ப்ளாக், டான் லைட் டான், ப்ரௌன், மஹாகனி, ட்ரான்ஸ்பேரண்ட் (நியூட்ரல்) வர்ணத்திலும், மிலிட்டரிகளுக்கான நிறத்திலும் கிடைக்கும்.

கீவி

பாலிஷ் செய்யும்போதே போஷாக்களிக்கிறது



விநியோகஸ்தர்கள் :- ஆர். ஏ. குட்லெர் & கோ. 3. வி. ராஜம் முதலியார் ரோட், சேப்பேக் போஸ்ட், சென்னை.

T149TM.


டால்டாவில் செய்த
குலாப் ஜாமுன்கள்
1 பவுண்டு சர்க்கரையில் நீர்க்க பாகு
தயாரித்து அதில் சில துளிகள் பன்
னீர் ஊற்றி சூடாகவைத்திருக்கவும்.
1 அகப்பை மைதாமாவில் அல்லது
குவாக்கிழங்குமாவில் 1 தேக்கரண்டி
டால்டாவை தேய்க்கவும். ½ பவுண்டு
திரட்டுப்பாலை பொடிசெய்து அரித்து
மைதாமாவுடன் நன்றாய் கலக்கவும்.
சிறிதளவே ஜலம் சேர்த்து கலவை
யை நன்றாக பிசைந்து கெட்டியாகச்
செய்து கொள்ளவும். பிசைந்த மா
வை சிறிய நீண்ட உருண்டைகளாக
பிடிக்கவும். டால்டாவை சூடாக்கி
மிதமான சூட்டில் பொரிக்கவும்.
குலாப் ஜாமுன்கள் சுற்றிவர சிறு
சிவப்பானதும் தனியாக எடுத்து,
வடித்து, பிறகு சூடான பாகில்
ஊறவைக்கவும்.
குடும்பத்திற்கு
ஊட்டமளிக்கின்றன!
மூளைக்கு விசேஷமான உணவுகள் எவை?
இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—
அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1
HVM. 93-172 TM
DALDA
VANASPATI

ஆம்பூர் ஹிந்து ஹைஸ்கூல் கட்டிட நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

அவர்கள் உதவும் சங்கீதக் கச்சேரி

●

சங்கீத ரத்ன ஸ்ரீ சௌடய்யா	...	வயலின்
ஸ்ரீ கல்பாத்தி ராமநாதன்	...	மிருதங்கம்
ஸ்ரீ ஆலங்குடி ராமச்சந்திரன்	...	கடம்

21 - 1 - 1950 சனிக்கிழமை மாலை 5 - 30 மணிக்கு

ஆம்பூர் ஹிந்து ஹைஸ்கூல் காம்பவுண்டில் விசேஷமாக அமைக்கப்பட்டிருக்கும் விஸ்தாரமான பந்தலில்

டிக்கெட்டுகள்: ரூ. 200, 100, 50, 25, 10 & ரூ. 5/-

டாக்டர் C. நாதமுனி நாயுடு
கரஸ்பாண்டெண்ட்

ஒலி பெருக்கி ஏற்பாடு: திருச்சி ரேடியோ சேல்ஸ் அண்டு சர்வீஸ்


உலகப் பிரசித்தி பெற்ற ஜாம்பக் உபயோகிப்பதால்

வெட்டுக்காயம், சிராய்ப்பு, சீகோத்த புண், வெக்காடு

ஆகியவை அபூர்வமாக ஆறுகின்றன.

காயங்களுக்கும் சரும வியாதிகளுக்கும் உலகப் பிரசித்தி பெற்ற கிருமி நாசனக் களிம்பான ஜாம்பக் தான் சிறந்த நிவாரணி. அதிலுள்ள தைல மருந்துப் பொருள்கள் சருமத்தால் நேரடியாக உறிஞ்சப்படுவதால் அதன் ஆற்றும் தன்மை பன்முறை துரிதமாகவும் பயன்படக்கூடியதாகவும் ஆகிறது. கெடு விளைவிக்கப்பட்ட செல்லிய தோலுக்கு ஹிதமளித்து, விஷக் கிருமி சேர்ந்து அழுகிய சருமத்தை ஆற்றி, வேறெந்த கிருமி நாசனியையும்விட ஜாம்பக் தான் எளிதில் சொஸ்தப் படுத்துகிறது. மிருகக் கொழுப்பு கலப்பற்றது என்பதற்கு உத்தரவாதம்.





எப்பொழுதும் உபயோகியுங்கள்

Zam-Buk

NO. 3.

ஆறுதலளித்து குணமாக்கும் கிருமிநாசனக் களிம்பு

போகுமிட மெல்லாம்
பொங்கலோ பொங்கல்!

வருஷத்துக்கு ஒரு நாள் வருகிறது
சங்கராந்திப் பொங்கல்!

ரத்னகுமார் விஜயம் செய்யும்
இடங்களில் எல்லாம் தினம் தினம்
பொங்குகிறது பரவசப் பொங்கல்!



14—1—50 முதல்

பெங்களூர் - சாரதா, சிடி டாக்கீஸ்

ராபர்ட்சன்பேட் - கே டாக்கீஸ்

மற்றும் தென்னாட்டின் முக்கிய நகரங்களி
லும் வெற்றிகரமாக நடைபெறுகிறது

ரத்னகுமார்

கூடிய சீக்கிரம்

சென்னை பிரபாத்துக்கு வருகிறது

★

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு

முருகன் டாக்கி பிலிம் கம்பெனி, மதுரை-பெங்களூர்-வேலூர்



ன்றும் குறையாத இன்பமளிக்கும்
அபூர்வ சித்திரம்
ஜெமினியின்
அபூர்வ
சகோதரர்கள்
இப்பொழுது சென்னை பிரபாத், வெலிங்டன் இரு தியேட்டர்களிலும்
மற்றும் — இந்தியா முழுவதும் நடைபெறுகிறது

தியர் நியமிக்கப்படுவது இதுவே முதன் முறை. இலங்கையிலுள்ள மற்றெல்லா தொழிற் சங்கங்களைச் சேர்ந்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையையும் விட இலங்கை இந்தியர் காங்கிரஸ் லேபர் யூனியன் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்தும், தொழிலாளர்களுக்கு ஒரு காங்கிரஸ் தலைவர் பிரதிநிதியாக நியமிக்கப்படுவதை மற்றவர்கள் இதுவரை ஆட்சேபித்து வந்தார்கள். இது காரணமாகச் சென்ற முறை ஜினிவாவில் நடந்த மகாநாட்டுக்குத் தனிப்பட்ட ஒருவரையும் அனுப்பாமல் தங்களுடைய சொந்தப் பிரதிநிதியையே சர்க்கார் அனுப்பினர். இம்முறை இந்தியர் காங்கிரஸிடம் தொழில் மந்திரி நியாயமாக நடந்து கொண்டிருக்டிருக்கிறார். பிரபல காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ பெரி சுந்தரம் ஸர் பாரன் ஜயதிலகா மந்திரி சபையில் தொழில் மந்திரியாயிருந்தார். இப்பொழுது செனட் சபை உப தலைவராக இருக்கிறார்.

விடாமுயற்சியின் பலன்

இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் மிகவும் மோசமாயிருப்பதைப் பற்றிப் பார்லிமெண்டில் இந்திய அங்கத்தினர் ஸ்ரீ எஸ். தொண்டமான் பலமுறை புகார்செய்தும் அதற்கு இதுவரை அரசாங்கம் செவி சாய்க்காமலிருந்தது. ஆயினும் ஸ்ரீ தொண்டமான் விடாப்பிடியாகத் தோட்டத் தொழிலாளரின் சுகாதாரத்தைக் கவனிக்கும் கமிட்டியில் திரும்பவும் வற்புறுத்தியதின் பயனாக பிரஸ்தாபக் கமிட்டி சில புதிய சட்ட திட்டங்களை இயற்றியிருக்கிறது. அந்தச் சட்டங்கள் விரைவில் நடைமுறைக்கு வருமானால் கால்நடைக் கொட்டில்களைப் போலத் தொழிலாளர் வீடுகளைத் தோட்ட முதலாளிகள் இனி கட்ட முடியாது. புதிய சட்ட திட்டங்கள் இனிமேல் கட்டப்படும் வீடுகளை மட்டும்தான் கட்டுப்படுத்துமே தவிர, ஏற்கெனவேயுள்ள மோசமான வீடுகள் தொடர்ந்து இருக்கவே செய்யும். ஆகையால் பழைய வீடுகளையும் திருத்தியமைக்குமாறு வற்புறுத்தினால் தொழிலாளருக்கு அதிக நன்மை ஏற்படும்.

அற்ப உரிமைக்கும் ஆபத்து

இலங்கையிலுள்ள இந்தியர் ஒவ்வொருவரும் பர்மிட் இல்லாமல் அரிசிக் கூப்பன் புத்தகத்தைத் தபாலாபீஸில் காண்பித்து மாதம் இருபத்தைந்து ரூபாய் வரையில்



சாதகம் செய்யும் பெண்மணி:— 'தெள்ளத் தெரிந்ததய்யா உமது கள்ளத்தனமெல்லாம்!'

மணியார்டர் செய்வதற்கிருந்த உரிமை டிஸம்பர் 31-ம் தேதியுடன் ரத்தாகிறது. இந்த விதமாக இதுவரை சராசரி ஒரு லட்சம் இந்தியர் மாதந்தோறும் இந்தியாவிலுள்ள தங்கள் குடும்பங்களுக்கு மாதம் இருபத்தைந்து ரூபாய் வீதம் மணியார்டர் செய்து வந்தனர். இவர்களில் சுமார் இருபத்தெட்டாயிரம் பேர்களுக்கு மட்டுமே பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருப்பதாயும், மற்றவர்கள் ஜனவரி முதல் தேதியிலிருந்து பணம் அனுப்ப முடியாதென்றும் செலாவணி இலாகா அறிவித்துள்ளது.

பெரும்பாலோர் உண்மையில் பணம் அனுப்பவேண்டிய அவசியம் இல்லாதவர்களென்றும், ஆகையால்தான் அவர்கள் பர்மிட்டுகள் பெற நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லையென்றும் கண்ட்ரோலர் கூறுகிறார். ஆனால் இவர்களைக் கேட்டால் இந்தியாவுக்கு அனுப்பிய 29-ம் நம்பர் பாரம் திரும்பி வரவில்லையென்றும், ஆகையால்தான் பர்மிட்டு வாங்க முடியவில்லையென்றும் புகார் செய்கிறார்கள். முன்பெல்லாம் செலாவணி இலாகாமீது பொது ஜனங்கள் புகார் செய்ததுபோக இப்பொழுது 29-ம் நம்பர் பாரத்தை உடனே திருப்பியனுப்பாமல் தாமதப்படுத்தும் தென்னிந்திய கலெக்டர்கள்மீது ஜனங்கள் புகார் செய்கின்றனர்.


அழுத பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும் என்பதைப்போல ஜனங்கள் செய்யும் புகார்கள் வீண்போகவில்லை. முன்போலில்லாமல் இந்திய கலெக்டர்கள் 29-ம் நம்பர் பாரங்களை இப்பொழுதெல்லாம் சீக்கிரத்திலேயே திருப்பியனுப்பிக் கொண்டிருக்கிறார்களாம்.

இந்தியப் பெண்மணியின் வெற்றி

ரஜனி

கொழும்பு, டிஸம்பர் 30.

இவ்வாரம் இலங்கையின் பழம் பெரும் நகரமான அனுராதபுரத்தில் நடந்த அகில இலங்கை பௌத்த காங்கிரஸில் டாக்டர் ஜி. பி. மலலசேகரா நிகழ்த்திய தலைமைப் பிரசங்கம் விசேஷமாகக் குறிப்பிடத் தகுந்தது. சிங்கள மன்னர்களின் காலத்தில் தர்ம த்வீபம் என்று புகழ்பெற்று விளங்கிய இலங்கையின் இன்றைய நிலைமைக்கு வருத்தம் தெரிவித்து, இவ்வளவுக்கும் அரசாங்கத்தின் கலால் கொள்கைதான் மூல காரணமென்று அவர் கூறினார். "இன்றுள்ள ஜனப் பிரதிநிதித்துவ அரசாங்கம் யாருடைய சம்மதத்தின்பேரில் சாராய உற்பத்திச் சாலைகளைச் சொந்தத்தில் ஏற்படுத்தி நடத்தி வருகிறது? நமது பெயரால் நடக்கும் அரசாங்கம் மதத்துக்கும் கலாசாரத்துக்கும் தேசிய கௌரவத்துக்கும் விரோதமான காரியங்களைச் செய்வது பலமாக கண்டிக்கத் தக்கது" என்று அவர் முழங்கினார். மதுவிலக்கு விஷயத்தில் சர்க்கார் சர்வஜன வாக்கெடுப்பு நடத்திவிட்டு மறுவேலை பார்க்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார். டாக்டர் மலலசேகராவின் காரசாரமான பிரசங்கம் இலங்கையில் மதுவிலக்குப் பிரசாரகர்களுக்கு ஒரு புதிய ஊக்கம் அளித்துள்ளது.



இருவரும் :—என் ஸார்! உங்களைத் தான் டாக்டர் சர்க்கரையைச் சேர்க்கக் கூடாது என்று சொல்லி விட்டாரே! உங்கள் ரேஷன் கார்டை எங்களுக்குக் கொடுத்து விடுங்கள்!

காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி

இம்முறை நடந்த கொழும்பு முனிசிபல் சபைத் தேர்தலில் இலங்கை இந்தியர் காங்கிரஸுக்கு ஒரு பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. புறக்கோட்டை வார்டில் பல வருடங்களாகத் தொடர்ந்து அங்கத்தினராயிருந்து வரும் ஜனாப் எம். எப். கனி என்பவருடன் போட்டியிட இ. இ. காங்கிரஸ் கொழும்பு ஜில்லாக் கமிட்டித் தலைவி ஸ்ரீமதி அயிஷா ராவூப்பை காங்கிரஸ் அதிகாரபீடம் அபேட்சகராக நிறுத்தியது. ஜனாப் கனி வெகு தீவிரமாகப் பிரசாரம் செய்தும் கூட ஸ்ரீமதி அயிஷா ராவூப் ஓராயிரத்துக்கு மேற்பட்ட அதிக வோட்டுக்கள் பெற்று வெற்றியடைந்தார். முனிசிபல் தேர்தலில் காங்கிரஸ் பிரவேசிப்பது இதுவே முதன் முறை யென்றும் முதல் முயற்சியே மகத்தான வெற்றியளித்துள்ளது திருப்தியைக் கொடுக்கிறதென்றும் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீ கே. ஜீ. எஸ். நாயர் கூறினார்.

தேர்தல்களெல்லாம் முடிந்த பிறகு முனிசிபல் அங்கத்தினர்கள் மீது சுமத்தப்பட்ட லஞ்சக்குற்றச் சாட்டுகளைப் பற்றி விசாரணைக் கமிஷனரின் தீர்ப்பு வெளியாயிற்று. அத்தீர்ப்பின்படி ஸ்ரீமதி அயிஷா ராவூப்புடன் போட்டியிட்ட ஜனாப் கனியும் நகர மேயர் ஸ்ரீ ஆர். எப். எஸ். டி. மெல்லும் மற்றும் எட்டுப் பேர்களும் லஞ்சக் குற்றவாளிகள் என்றும், அவர்கள் அடுத்த ஐந்து வருட காலத்துக்கு ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்ள யோக்யதை அற்றவர்கள் என்றும் கமிஷனர் தீர்ப்பளித்தார்.

நியாயமாக நடந்து கொண்டார்

சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தின் ஆசியப் பகுதி மகாநாடு ஜனவரி பதினாறாம் தேதி மலைநாட்டில் நுவரேலியா என்னுமிடத்தில் ஆரம்பமாகிறது. இம்மகாநாட்டுக்கு இலங்கைத் தொழிலாளர்களின் பிரதிநிதியாக செனட்டர் பெரி சுந்தரத்தைத் தொழில் மந்திரி நியமித்திருக்கிறார். இலங்கையிலுள்ள சகல தொழிலாளர்களுடைய பிரதிநிதியாகவும் ஓர் இச்

தது. என் பிடில் பெட்டி 'மைக்'கை நிலைபெயர்த்தது. மிருதங்கத்தின் ஒரு புறத்தில் படவே 'பம்'மென்றதோர் நாதம் கிளம்பியது. 'மைக்'கும் கீழே சாய்ந்தது. இத்தனை சத்தங்களும் சேர்ந்து ஒரு தீர்மானம் கொடுத்து ஓய்ந்தாற்போல் இருந்தது. இந்த அற்புதக் காட்சியைக் கண்டு மகாஜனங்கள் புரிந்த கரகோஷம் கொட்டகையையே பிளந்து விடும் போலிருந்தது!

நான் சமாளித்து எழுந்து பிடிலும் கையுமாக 'மைக்'முன் மறுபடியும் அமர்ந்தேன். இதற்குள் நான்கு நிமிஷம் ஆகிவிட்டது. கருவியை ஒருவாறாகச் சேர்த்தேன். 'பந்துவராளி: ராக ஆலாபனம்' எனச் சபையோருக்குத் தெரிவித்துவிட்டு வாசிக்கலானேன். சபையினிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. சிலர் தலையை அசைத்தனர். 'த்க'க் கொட்டினர் வேறு சிலர். 'ஆகா' என்று ஹாஹாகாரம் செய்தனர் ஒரு சாரார். 'பேஷ்' என்றும் 'சபாஷ்' என்றும் சிலர் மாற்றி மாற்றிப் பிரயோகம் செய்தனர். அவ்வாறு ரசிகர்கள் பலவாறாகப் பரவசமாகிக் கூறிய மொழிகள் என் உத்சாகத்தைத் தூண்டியது. ராகத்தை ஸ்வானுபூதியோடு வாசிக்கலானேன். மெய்மறந்து வாசித்ததன் பயனாக, என் அங்கசேஷ்டைகள் தாமாகவே உச்சத்தையடைந்தன. ராகத்தை முடித்துக் கடிகாரத்தைப் பார்த்தேன். இரண்டு நிமிஷம்தான் பாக்கி இருந்தது, என் நிகழ்ச்சி முடிவதற்கு. 'மத்யமாவதி' ராகத்தின் களையை இலேசாகக் காட்டி, 'வாழிய செந்தமிழ்' ஆரம்பித்தேன். திரை திடீரென இறங்கிற்று. 'மைக்'கும் உடனடியாக அகற்றப்பட்டது. 'மைக்' இல்லாததையோ, திரை விழுந்ததையோ, அல்லது அப்பொழுது எழுந்த பலத்த கரகோஷத்தையோ நான் பொருட்படுத்தாது மங்கள கீதம் முழுவதும் வாசித்துத் தீர்த்தேன்.

இந்த விழாவுக்குத் தலைமை வேண்டாமா? நமது பண்பாட்டு இலாக்கா மந்திரி கனம் இயலிசை நாடகனார்தான் தலைமை வகித்தார். அவர் நிகழ்ச்சி முடியும் வரை இருந்து விட்டுக் கடைசியாகப் பேசுகையில் "இன்று நடந்தேறிய நிகழ்ச்சியின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையில் சிறந்தது. ஆனாலும் எல்லாவற்றிற்கும் சிகரமாக விளங்கியது பிடிலை ஏந்தி நமக்கு நகைச் சுவையை அள்ளிவிட்ட பன்னிகொண்டான் அவர்களின் நடிப்பே. 'பந்துவராளி' என்று சொல்லி அன்னார் 'பூரி கல்யாணி' வாசித்தது ஒன்றே போதும். அன்னாருக்குத் தக்கதோர் பட்டமளிக்கத் தனிவிழா கொண்டாடுவோம்."

தலைவர் இவ்வாறு பேசி வாய் மூடுமுன், சபையோர் பிரமாதமாகக் கரகோஷமிட்டு ஆரவாரித்தனர்.

நான் சற்றுத் திகைத்தேன்!

'மேடையும், திரையும்,' 'ஒலியும், ஒளியும்' என்ற வாரப் பத்திரிகைகள் என் உருவத்தை மூவர்ண அட்டைப் படத்தில் தாங்கி அந்த வாரம் வெளிவந்தன. என் நடிப்புத் திறமையை வெகுவாகச் சிலாகித்து ஹாஸ்யத்தின் சிகரத்தை நான் பிடித்து விட்டதாக நீண்ட புகழுரைகள் எழுதி யிருந்தன. நிகழ்ச்சித் தொகுதியின் இறுதியில் வர வேண்டிய 'வாழிய செந்தமிழ்' கீதத்தை நான் வாசிக்க ஆரம்பித்ததும், உடனே திரை இறங்கியதும், பிரமாதம் எனப் பாராட்டி யிருந்தார்கள் அதன் ஆசிரியர்கள்.

இவை போதாது என்று நான்கு நாட்களுக்கப்பால் எனக்கு விசித்திரமான கடிதம் வந்தது. 'வெள்ளித் திரை அரசு' எனக் கருதப்படும் பிலிம்சந்த் திரவியம் பாயிடமிருந்துதான் வந்திருந்தது அந்தக் கடிதம். தாம் எடுக்கவிருக்கும் அடுத்த படத்திற்குப் பிரதம 'காமடியனாக' நான் நடிக்க வேண்டுமென்றும், கூடிய சீக்கிரத்தில் என்னை நேரில் கண்டு சந்திப்பதாகவும் அதில் எழுதி யிருந்தது.

நான் திகைப்புக் கடலில் மூழ்கி மூச்சுத் திணறித் தத்தளித்தேன்!!

நன்றா யிருந்ததே!



கணவன் :—இன்றைக்குச் சமையல் ரொம்ப நன்றாயிருந்ததே! யாராவது உன் தோழி விருந்துக்கு வருவதாயிருந்தாளோ?

மனைவி :—இல்லை, இல்லை. இன்று சமையல்கார அம்மாளின் மாப்பிள்ளை சாப்பிட வந்தான்!

ஆண்டு விழாவில்...

டி.எஸ்.ஆர்.



அன்று எங்கள் சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம். ஆண்டு விழாக்கள் திமிலோகப்படும் இந்தக் காலத்தில் ஒரு பத்தாவது ஆண்டு விழா கிடைத்தால் அதைச் சும்மா விட்டு விடுவோமா?

முதலில் ஒரு விழா நிர்வாகக் குழு அமைத்தனர். அந்தக் குழுவில் நான் ஒரு இடம் பெற்றிருந்தேன். நான் எவ்வாறு அதில் இடம் பெற்றேன் என்று எனக்கே முதலில் விளங்கவில்லை. நான் இரண்டு மூன்று வருஷங்களாகப் பிடில் வாத்தியம் பயின்று வருகிறேன். ஓரளவு தேர்ச்சியும் பெற்றிருக்கிறேன். இதை அறிந்துதான் அவர்கள் என்னை நிர்வாகக் குழுவில் சேர்த்திருக்க வேண்டும்.

அன்று இரவு கதம்ப நிகழ்ச்சி ஒன்று நாங்கள் நடத்தினோம். 'சாணக்யன் அல்லது சரணம்' என்ற ஓரங்க நாடகம் நிகழ்ச்சியில் சேர்த்திருந்தோம். அதில் தர்பார் காட்சி ஒன்று உண்டு. அதற்கு மேடை 'ஸெட்டிங்' தயார் செய்யப் பத்து நிமிஷத்திற்குமேல் ஆகும் என்றார்கள். அது எனக்குத் தக்க வாய்ப்பாக உதவியது. அந்த இடைவேளையில் என் பிடில் 'கச்சேரி'யைப் புகுத்திக் கொண்டேன். கச்சிதமாக மூன்று 'உருப்படிகள்' பொறுக்கி, முன்கூட்டியே ஒருமாதமாக, அசுர சாதகம் பண்ணி வைத்திருந்தேன்.

குறித்த நேரத்தில் என் கச்சேரி ஆரம்பமாயிற்று. ஒருபுறம் கடம் கனகராஜய்யரும் மற்றொரு புறம் மிருதங்கம் மீனாட்சி சுந்தரமும், எதிரே கனம் 'மைக்' அவர்களும் அவர்களுக்கு முன்பாக நானும் வீற்றிருந்தோம். வில்லை எடுத்துப் போடுமுன் ரோசனத்தால் தேய்ப்போமே என எண்ணினேன். (நான் என்ன, பக்கா வித்வான்களுக்குப் பின் வாங்கினவனா, பூர்வாங்கமின்றி வாத்யத்தை ஆரம்பிக்க?) பிடில் பெட்டியில் ரோசனக் கட்டி தென்படவில்லை. பின் எனது பரந்த வெற்றிலைச் செல்லத்தைத் திறந்து ஆராய ஆரம்பித்தேன். பயனில்லை.



கடைசியாக என் சட்டைப் பையைச் சோதனை யிட்டதில் ரோசனக் கட்டி அகப்பட்டது. அதை எடுத்துச் சம்பிரதாயமாக வில்லைத் தேய்த்துச் சுருதி சேர்க்க ஆரம்பித்தேன். ஷட்ஜமக் கம்பி கொஞ்சம் மக்கர் செய்தது. அதை முடுக்கினேன். கம்பி 'பட்'டென்று தெறித்து இரண்டாகத் தொங்கிற்று. உடனே 'கிரீன் ரூமை' (பௌடர் பூசும் அறையை) நோக்கி ஓட்டமெடுத்தேன். முன் ஜாக்ரதையாக 'ஸ்டெப்னி' ஒன்று கொண்டு வந்திருந்தேன். 'ஸ்டெப்னி'யாவது? என்று நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். இத்தகைய ஆபத்துக்களில் உதவுவதற்காக முன் எச்சரிக்கையாகக் கையோடு கொண்டு வந்திருந்த மற்றொரு பிடிலைத்தான் சொல்லுகிறேன்!

டென்னிஸ் வீரர்கள் பெரிய பந்தயங்களில் ஆடிவிட்டுத் திரும்புவதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் கையில் குறைந்து நான்கு 'பாட்'டுகளாவது இருக்கும். அவை நான் அறுந்து அலங்கோலமாகக் காட்சி யளிக்கும். 'ஐயோ, பாவம்! ஏன் இவ்விதம் அறுந்த மட்டைகளைச் சுமக்கிறார்கள்?' என்று நான் அங்கலாய்த்தது உண்டு. இன்றுதான் அதன் மர்மம் எனக்கு விளங்கிற்று.

பிடில் பெட்டி கையிலிருந்த வண்ணம் மேடையின் முன்னே வந்து நின்று, "சீமாட்டிகளே, கனவான்களே, சொல்லாது கொள்ளாது திடீரென மேடையை விட்டகன்ற பிழைக்கு வருந்துகிறேன். தங்கள் மனமார்ந்த மன்னிப்பைக் கோருகிறேன்" என்று சொல்லித் தலை வணங்கினேன். தலை வணங்கிய வண்ணம் பிடில் பெட்டியும் கையுமாகப் பின் நகர்ந்தேன். மைக்குடன் இணைக்கப்பட்ட 'வயர்' (கம்பி) காலைத் தடுக்க அப்படியே மல்லாந்து மேடை மேலே சாய்ந்தேன்.

கனகராஜ அய்யரின் கடத்தை உராய்ந்து கொண்டே என் தலை அவரது பருத்த மடிமேல் அமர்ந்

யோகி சுத்தானந்தர் "இனிய தமிழ் இலக்கணம்" என்ற புதுமைச் சுவை மலிந்த ஒப்பற்ற நூல் எழுதியருளியுள்ளார். அதிலே F, Z பற்றிக் குறிக்கும்போது ப, ஜ என்ற எழுத்துக்களின் முன்னால் ஆய்த எழுத்தைப் போட்டுக்கொண்டால் நமக்குத் தேவையான ஒலி கிடைக்கும் என்கிறார். அவர் சொல்கிறபடி Ford, Photo, Facism, Phone முதலிய ஆங்கிலச் சொற்களை ஃபோர்டு, ஃபோட்டோ, ஃபாஸிஸம், ஃபோன் என எழுதமுடியும். தவிர Coffee, Graph, Africa என்ற சொற்களையும் காஃபி, க்ராஃப், ஆஃப்ரிகா எனவும் எழுதலாம். அதேபோல Zamir, Zilla, Zanzibar என்பவற்றை ஃஜமீன், ஃஜில்லா, ஃஜான்ஃஜிபார் எனக் குறிக்கலாம். இந்த முறையை ஒப்ப யோகியார் தமது புதுமை இலக்கண நூலின் கண் "ப, ஜ முன் ஆய்தம் F, Z ஆகும்" என்ற நவீன சூத்திரமும் யாத்துள்ளார். இதையே நாமும் கொள்ளலாம்.

அல்லது, தேவையான இரு ஆங்கில எழுத்துக்களை அப்படியே கையாண்டு விடலாம். குறில், நெடில், உயிர் மெய்க் குறிகளை முன்னும் பின்னுமாகச் சேர்த்துக் கொண்டு விடலாம். உதாரணமாக :

F Fா Fி Fீ Fு Fூ
Fெ Fே Fை Fொ Fோ Fௌ

Z Zா Zி Zீ Zு Zூ
Zெ Zே Zை Zொ Zோ Zௌ

இவ்வாறு கையாண்டுவிட்டால் விஷயம் மிக எளிதாகி விடும். இந்த முறை தமிழுக்குப் புதிதல்ல! ஜ, ஸ, ஷ, ஹ என்ற வடமொழிக் கிரந்த எழுத்துக்களை நமதாக்கிக் கொண்டிருக்கிறோம் அல்லவா? அதேபோலத் தான் இதுவும்!

மதுரை
29-12-49 வி. ஜி. சீனிவாசன்

○●○

★ இளம் பாடகர்கள்

தற்கால சங்கீத உலகில் பெயர் சொல்லிக்கொண்டு வெளிக் கிளம்புவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பல வருஷங்களாகச் சிக்ஷை பெற்று, சாதகம் செய்து கச்சேரி செய்ய முன் வந்தால், அவர்களை "இளம் பாடகர்கள்" என்று சபாக்காரர்கள் அலட்சியம் செய்கிறார்களே தவிர, ஆதரித்துக் கச்சேரி கொடுப்பதில்லை. ஆனால் தங்களுக்கு யார் கச்சேரியைக் கேட்க விருப்பமோ அவர்கள் கச்சேரியையே ஒரு சபா மாற்றி மறு சபாவில் வைத்து விடுவார்கள். தெய்வாதீனமாய் ஒரு இளம் பாடகன் ஒரு சபாவில் பாட ஏற்பாடு நடந்தால், அந்த ஒரு பக்கம் பெரிய பாடகர்களைக் கேட்கும் அன்பர்களும் சங்கீத விமர்சனக்காரர்களும் கூடிப் பத்து நிமிஷமும் கூட உட்கார்ந்து கச்சேரியைக் கேட்க மாட்டார்கள். அவன் பாடும் ஒவ்வொரு அடியிலும் 'ஸ்ருதி இல்லை, லயம் இல்லை, பாடும் வழி தப்பு, கனைப்பு, விறுவிறுப்பு இல்லை, இமிடேஷன்! சாரீரம் மட்டம்!' என்று சங்கீத உலகில் வழங்கி வரும் பல வார்த்தைகளைக் கொட்டிப் பேசிக்கொண்டிருப்பார்கள். சங்கீதம் கேட்பவர்களையும் கேட்க விடாமல் செய்து, பாடகனையும் கீழே தள்ளப் பார்ப்பார்கள்.

சரி, கச்சேரி செய்து பிரகாசிக்க வழியில்லை என்று டியூஷன் சொல்லிப் பிழைக்கலாம் என்றால் அதிலும் எத்தனையோ இடைஞ்சல்கள். ஒவ்வொரு கிரகஸ்தரையும், முக்கியமாகப் பாடம் சொல்லிக் கொள்ளும் பெண்களுடைய தாய்மார்களையும் திருப்தி பண்ணிவிட்டுப் பிறகுதான் பாடம் சொல்லவேண்டியிருக்கிறது. வாத்தியார் வந்ததும், "உங்களுக்கு எத்தனை உருப்படி பாடம்? சபாவில் கச்சேரி செய்திருக்கிறீர்களா? ரேடியோவில் உங்கள் பெயர் வருமோ?...அவா ... பிளேட்டில் கொடுத்த அந்தக் கீர்த்தனம் பாடம் உண்டோ?" என்று சரமாரியாய்க் கேட்கப் படும் கேள்விகளுக்குப் பதில் கூறியாக வேண்டும். பிளேட்டில் கொடுத்த கிருதியைப் பாடம் சொல்லிக் கொடுத்தால் "பல்லவியில் இரண்டு சங்கதி விட்டுப் போய் விட்டது. அனுபல்லவியில் உருட்டல் சங்கதி உங்கள் பாடத்தில் இல்லை" என்று உடனே அதற்கும் குறை சொல்லி விடுவார்கள். சிக்ஷையான பெண் ரேடியோவில் 'ஆடிஷன்' கொடுத்து, "சாரீரம் மைக்குக்குச் சரியில்லை" என்று கடிதம் வந்து விட்டால், இந்தப் பாட்டு வாத்தியார் அன்றோடு டிஸ்மிஸ்!

ஸ்ரீ ராம நவமி, ராதா கல்யாணம், தியாகராஜ உற்சவம் என்று ஆசீர்வாதக் கச்சேரிகளுக்கு மனுப்போட்டால் அதற்கும் எத்தனையோ இடையூறுகள். அப்படியானால் சங்கீதத்தில் ஈடுபட்டு முன்னுக்கு வர விரும்பும் எங்களை யார் ஆதரிப்பது?

நாகப்பட்டினம்
31—12—49 | வி. அனந்தராமன்

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ "பிரைவேட் வாத்தியார்" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ என். வி. துரைசுவாமிக்கும், "இளம் பாடகர்கள்" என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ வி. அனந்தராமனுக்கும் ரூ. 12-8-0 விதம் பிரித்து வழங்கப்பட்டது.

வட்ட மேஜை

★ பிரைவேட் வாத்தியார்

1–1–50 தேதி 'கல்கி' இதழ் வட்ட மேஜைப் பகுதியில் ஸ்ரீமதி ஆர். சரோஜா என்னும் ஹைஸ்கூல் மாணவி எழுதிய "சுய புத்தி" என்னும் கடிதம் பார்த்தேன்.

சென்ற சில ஆண்டுகளாக "பிரைவேட் டியூஷன்" உபாத்தியாயர் தொழில் நடத்தி வருபவன் என்ற முறையில் ஓரிரண்டு வார்த்தைகள் கூறவும் விரும்புகிறேன்.

டிசம்பர் மாதம் நடத்தப்படும் அரை வருடப் பரீட்சையில் மார்க்குகள் குறைவாக வாங்கும் மாணவர்கள் உடனே எம் போன்றவர்களைத் தேடி வருவார்கள். அவர்களை அடுத்த பெரிய பரீட்சையில் பாஸ் செய்து வைக்கும் பாரம் எம்மைச் சார்ந்தது.

இந்நிலையில் நாங்கள் அவர்களை எப்படிப் பரீக்ஷையில் பாஸ் செய்விப்பது? பாஸ் செய்விக்கா விட்டாலோ எங்கள் பிழைப்புக்கே ஹானி விளைந்து விடும். இவர்களைக் கிரமப்படி பாடம் போதித்துச் 'சுயபுத்தி'யைக் கொண்டே தேர்ச்சி பெறச் செய்ய ஒரு வருடம் உழைத்தால் கூடப் போதாது.

நான் போதித்து வந்தது சமஸ்கிருதப் பாடம். கொச்சி சமஸ்தானத்தில் மூன்றாவது பாரத்திற்கு, சமஸ்கிருதப் பாட புத்தகத்தில் உள்ள வசன பாடங்களுக்குப் புறம்பாக ஐம்பத்தாறு சுலோகங்கள், பதினாறு டிரான்ஸிலேஷன்கள் (மொழி பெயர்ப்பு) படித்தாக வேண்டும் மாணவர்கள்.

சர்க்கார் பரீக்ஷைக்கு இந்தப் பதினாறு டிரான்ஸிலேஷனிலிருந்துதான் ஒரு பகுதி தரப்படும்; வேறு வராது. இதே போல் முன் சொன்ன ஐம்பத்தாறு சுலோகங்களிலிருந்தே ஏதாவது மூன்று சுலோகங்கள் தந்து அர்த்தமும் 'அன்வய'மும் எழுதச் சொல்வார்கள். டிரான்ஸிலேஷன் பகுதிக்கு இருபதும், சுலோகப் பகுதிக்குப் பதினைந்தும்—சில வருடங்களில் பதினெட்டும் மார்க்குகள். ஆகவே ஒரு மாணவன் மேற்படி டிரான்ஸிலேஷனையும் சுலோகங்களின் அர்த்தத்தையும் சரியாக எழுதினாலே போதும் பாஸ் மார்க்குக் கிடைத்து விடும். பாட புத்தகத்தைத் திறந்து கூடப் பாரா விட்டாலும் பாவமில்லை; பரீட்சையில் தேறி விடுவான்!

ஆகவே நாங்கள் கையாண்ட முறை இது தான். எங்களுக்கு இருக்கும் மூன்று மாத அவகாசத்தில் டிரான்ஸிலேஷன்களையும் சுலோகங்களின் 'அன்வயம்' அர்த்தம் முதலியவற்றையும் சில முக்கியமான கேள்விகள் அவற்றின் பதில்கள் யாவற்றையும் நாங்களே எழுதிக் கொடுத்து, எழுத்துக்கு எழுத்துத் தவறாமல் 'குண்டுரு' ஏற்றுவோம். 'டிராமா ரிஹர்ச'லைப் போலத் தினமும் ஒரு எழுத்துக் கூடப் பிறழாமல் ஒப்புவிக்கச் செய்வோம். இதனால் எனது மாணவர்களில் ஒரு வருடம் கூட ஒருவன் கூடத் தோல்வியடைந்ததில்லை! நூற்றுக்கு நூறு எனது சப்ஜக்டில் பாஸ்! இவை யாவும் முற்றிலும் உண்மை.

என்னைப் பொருத்த வரையில் நான் இம் முறையைப் பின்பற்றியது புகழை விரும்பியுமல்ல; பெருமையை விரும்பியுமல்ல. கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காகத்தான்! "சக்ஸஸ் காண்பி"க்கச் செய்யாவிட்டால் மாணவர்கள் எம்மைத் தேடி வரமாட்டார்கள் அல்லவா!

ஆகவே, பையன்களின் அறிவு வளர்ச்சியை விட எப்படியாவது பரீக்ஷை தேறுவதே முக்கியக் குறிக்கோளாகக் கொள்ளுமாறு நிர்ப்பந்த நிலை ஏற்படுகிறது. "சுய புத்தி"யைக் கொண்டு அறிவு வளரச் செய்வதே முக்கியமாயின் இத்தகைய பரீக்ஷைகளையே ஒழித்துவிட வேண்டும்.

பல்மனேர்
31—12—49

என். வி. துரைசுவாமி

○●○

F - Z பற்றி

சென்னையில் அண்மையில் நடைபெற்ற 'தமிழ் வளர்ச்சிக் கழக' மகாநாட்டிலே தமிழன்பர் பலர் கூடினர்; தமிழ் எழுத்துக்களில் செய்யவேண்டிய மாறுதல்கள் பற்றித் தீர்மானம் நிறைவேற்றினர்.

மகாநாட்டிலே F. Z எனும் இரு ஆங்கில எழுத்துக்களுக் குரிய குறிகளை அமைக்க வேண்டியதும் தேவை என்று கொள்ளப் பட்டது. புதுவையிலே தமிழ்த் தவம் புரியும்

தேசங்களையும் கண்டங்களையுமே சுவீகரம் பண்ணுவதற்கான சாம்ராஜ்ய வெறி கொண்டவர்களாய்க் கொடும் போர் புரிகிறார்கள் என்பது நாம் காண்கிற காட்சி.

கம்பரும் அப்படியே கண்டார் ஆயிரம் வருஷத்துக்கு முன்பு.

இப்போது பாடலைப் பார்க்கலாம்:

ஏழிசைக் கருவிலீற்-
றிருந்த(து) என்னினும்,
சூழ்இருந் திசைகளைத்
தொடரும் தொல்கொடி,
வாழிய உலகெலாம்
வளைந்து வாயிடும்
ஊழியின் அந்தகன்
நாவின், ஓங்கவே.

[ஏழிசைக் கருவி ஈற்று இருந்தது என்னினும்: ஏழு சுரங்களையும் (ச ரி க ம ப த நி ஆன சுரங்களும்) வெளியிடுவதற்கான யாழை எழுதியிருந்த போதிலும்; சூழ்இரும் திசைகளை: சூழ்ந்த பெரும் எட்டுத் திசைகளையும் தானே; தொடரும் தொல்கொடி: தொட்டு வீசுவதாகத் தோன்றும் சாம்ராஜ்யத்தின் அடையாளமாக வந்துள்ள கொடியானது; வாழிய உலகெலாம்: யுகம் யுகமாக வாழ்ந்து வருகிற உலகத்தை வெல்லாம் (பேரண்டத்தை எல்லாமே); வளைந்து வாயிடும்: அப்படியே வளைத்து வாயில் போட்டு விழுங்கி விடும்; ஊழியின் அந்தகன் நாவின்: ஊழிக் காலத்திலக் காணும் எமனது நாக்கைப் போல; ஓங்கவே: நீண்டும், மடங்கியும், சுழன்று கொண்டும் இருந்தது—கொடி.)

சாமான்யமாக அரசர்களுடைய கொடி பயத்தை உண்டுபண்ணக் கூடிய அடையாளங்களையே எழுதியனவாய் இருக்கும்.

சிம்மம், புலி, கழுகு, போர் முரசு, வில், ஈட்டி முதலியவைகளை எழுதியனவாய் இருக்கும். லக்ஷ்யம் மக்களை பயமுறுத்துவது தானே.

இதற்கெல்லாம் மாறாக ராவணனது கொடியில் இதத்தையும் இன்ப வாழ்க்கையையும் எடுத்துக் காட்டும் யாழை எழுதியிருந்தது.

கொடியில் எழுதியிருந்தது யாழாய் இருந்தாலும் ராவணன் செலுத்தி வந்த அதிகாரத்தைப் பார்த்தால் உலகத்தில் யாரும், எந்தத் தேசமும் அஞ்சி அடங்குவதாகவே இருந்தது. அவனுடைய அதிகாரம் வெகு தூரத்தில் உள்ள தேசங்களையும் அடக்கி ஆட்டிக் கொண்டிருந்தது.

இதைக் குறிப்பதற்காகவே, உலகங்கள் எல்லாம் ஊழிக் காலத்தில் நிர்மூலம் ஆகும்போது எமனுடைய நாவானது எப்படி நாலா திசையையும் வளைக்குமோ அதுபோல் இருந்தது ராவணனது கொடி ஆடியது என்கிறார் கம்பர்.

வெகு அழகான பயங்கர பாவம் கொண்டது செய்யுள்.

∴

சாம்ராஜ்ய வெறி என்று ஒன்று இருந்து பல்லாயிர வருஷமாக உலகத்தைக் கஷ்டப்படுத்தி யிருக்கிறது. இன்றும் நம்மைக் கஷ்டப்படுத்துகிறது. என்றுதான் யாழின் அமைதியான ஒலி அரசியல்க் கொடியிலிருந்து வருமோ? கம்பரால்ச் சொல்ல முடியவில்லை. அதற்குக் கடவுள்தான் சொல்ல வேண்டும்!



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

279. கொடியா? எமனது நாவா?

ராமனும் வானர சேனையும் கடலைக் கடந்து இலங்கை வந்து சேர்ந்ததும், சமாதானத்துக்கு வழி ஏதேனும் உண்டா என்று பார்க்க அங்கதன் ராவணனிடம் தூது போனான்.

ராவணன் மனம் திரும்புவதாக இல்லை, அவனது மூர்க்கத்தனம் அப்படியேதான் இருக்கும் என்பதைத் தெரிந்துகொண்டு திரும்பி வந்துவிட்டான் தூதுபோன அங்கதன்.

"அரக்கனது தலைபோனால் ஒழிய மூர்க்கத்தனம் போகாது" என்றும் சொல்லிவிட்டான் ராமனிடம்.

யுத்தம் ஆரம்பிக்க வேண்டியதுதானே இனி. இப்போது போர்க்களத்துக்குப் போகிறோம்.

ராவணனுடைய படைகள் அணி வகுத்து ஒன்றன்பின் ஒன்றாக நிற்கின்றன.


அப்படியே வானர சேனைகளும் முன் அணிகள் பின் அணிகள் என்று வரிசைப்படுத்தி நிற்கின்றன.

யுத்தத்துக்கு இரண்டு பக்ஷத்தாரும் தயாராய் நிற்கிறார்கள்.

இந்த நிலையில் ராவணன் வருகிறான்.

அவன் வருவதை அவனுடைய தேரில் கட்டிய கொடி எடுத்துக் காட்டுகிறது.

அபூர்வமான பண் பாட்டையும் அமைதியையும் குறிப்பதற்கான இசைக் கருவி யாழைக் கொடியில் அழகாய் எழுதியிருக்கிறது. குறியீடும் லக்ஷ்யமும் அப்படியிருக்கிறது. ஆனால் செயல் அந்தக் குறியீட்டோடு ஒத்ததாக இருக்கிறதோ என்றால், அதுதான் இல்லை!



இந்த விஷயத்தை, அதாவது ஆயிரம் வருஷத்துக்கு முன் கம்பர் அனுபவித்த விஷயத்தைப் பார்க்கும்போது இன்று நடக்கிற அரசியலுக்கு ஒத்தவாறாகவே இருந்திருக்கிறது என்பது நமக்குத் தெரிகிறது.

'உலக சமாதானம் என்றும் மனுஷ வர்க்கத்துக்கு அமைதி வரப்போகிறது என்றும்' பறை சாற்றிக்கொண்டே வல்லரசுகள் போர் தொடங்குகின்றன

ஏதோ ஒன்று தடுத்தது. அங்கு விழுந்து விட்டான். உடனே எழுந்திருக்க அவனால் முடியவில்லை. அவனைத் தூக்கி விடவும் அந்தச் சிறுமிக்குச் சக்தி இல்லை, கலக்கமும் சோர்வும் கலந்த மருட்சியுடன் விழித்தாள்.

பிறகு மெள்ள சமாளித்துக் கொண்டு அவனே எழுந்தான். 'திரும்பி விடலாமா' என்று ஒரு கணம் அவன் மனம் எண்ணியது. அதற்கு வயிறு இடங்கொடுக்கவில்லை. ஊருக்குள் சென்றால், பசிக்கு ஆகாரமும் குளிருக்கு ஒண்டிக் கொள்ள ஒரு திண்ணையும் கிடைக்காதா, என்ற சபலம் அவனை முன்னால் உந்தித் தள்ளியது. ஆனால், உடல் வர வர அதிகமாக விறைத்துக் கொண்டிருந்தது. பேத்தியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மெள்ள நடந்து சென்றான்.

அந்தகாரத்தின் நடுவே 'மின்மினிப் பூச்சி' போல் தெரியும் விளக்குகள் வீடுகளைச் சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தன. எல்லா வீட்டுக் கதவுகளும் மூடித் தாளிடப் பட்டிருந்தன. கதவு திறக்கும் சப்தமும் எச்சில் இலை விழும் சப்தமும் மறுபடி கதவை மூடும் சப்தமும் சற்றைக்கொருதரம் கேட்டுக் கொண்டிருந்தது. தெருத் திண்ணையில் சுருட்டிக் கொண்டு படுத்திருக்கும் நாய்கள் கூட எச்சில் இலையைத் திரும்பிப் பார்க்கவில்லை.

கிழவன் தெருவில் வந்து கொண்டிருந்தான். ஒரு வீட்டின் கதவு திறக்கப் பட்டது. அதன் வாசற்படியில் போய் நின்றான். "அம்மா தள்ளாத கிழவன்... குழந்தை அறியாத பொண்ணுங்க... ரெண்டு நாளாகப் பட்டினி...ஒருவாய் சோறு போடு, அம்மா! புண்ணியமுண்டு" என்று கெஞ்சினான்.

கதவைத் திறந்து கொண்டு வந்தவன் திரும்பிப் பாராமலே, 'படா'ரென்று தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றான்.

மற்றொரு வீட்டிற்குச் சென்றான். அங்கேயும் இரந்து கெஞ்சினான். அங்கிருந்து, "போடா போ...வேலையற்ற தடியா ... இந்த அடை மழையிலும் காற்றிலும் கூட இந்த உபத்திரவம் சகிக்கலையே..." என்ற பதில் வந்தது.

இது போல் வீடு வீடாக ஏறி இரந்தது தான் கண்ட பலன். ஒரு வாய்ச் சோற்றுக்கு வழி இல்லை. உடலும் மனமும் சோர்ந்து போய் ஒரு வீட்டு வாசலில் உட்கார்ந்து விட்டான். பாவம், பேதைச் சிறுமி பேசாமல் நின்றிருந்தாள்.

சிறிது நேரங்கழிந்த பிறகு சுய நினைவு பெற்றவன் போல் எழுந்தான். இந்த உலகத்தைப் பற்றி அவனுக்கு நன்றாகத் தெரியும். அதற்காக அவன் வருந்தவில்லை. தன் பசி, சோர்வு, குளிர் இவைகளைப் பற்றிய கவலையும் இல்லை. தன்னையே நம்பி இருக்கும் உலக மறியாத அந்தக் குழந்தை...அதன் கஷ்டங்களுக்கு யார் பொறுப்பு?...

குழந்தைக்கு இதெல்லாம் புதிராக இருந்தது. 'மழை, காற்று, குளிர், இடி, மின்னல் இவை ஒன்றுக்கும் அசையாத வீடுகள்; எச்சில் இலையில் சிதறிக் கிடக்கும் சோறு; கவலையற்ற வாழ்வு...இதெல்லாம் அவர்களுக்கு. நாம் மட்டும் ஏன் இருக்க இடமின்றி உண்ண உணவின்றி, கந்தைகளைக் கட்டிக்கொண்டு தவிக்க வேண்டும்?' எவ்வளவு யோசித்தும் இது அந்தக் குழந்தைக்குத் தெரியவே இல்லை.

தன்னுடன் கஷ்டப்படும் அந்தக் குழந்தையை நினைக்கும் போது அவன் கண்களில் நீர் தளும்பி நிற்கும். அதனுடைய பால் வடியும் முகத்தைப் பார்க்கும்போது அவனுக்கு ஓ என்று வீறிட்டு அழலாமா என்று தோன்றும். அதனுடைய தாயைப் பற்றியும் தந்தையைப் பற்றியும் நினைவு வரும். அவர்கள் இன்று இருந்தால் எவ்வளவு அருமையாக எடுத்துக் கொஞ்சி வளர்ப்பார்கள். ஆனால் அதன் விதி இந்தப் பஞ்சையுடன் மழையிலும் குளிரிலும் திண்டாட வேண்டியிருக்கிறது. பாவம்!—இவ்வாறு என்ன என்னவோ நினைத்தான். கடைசியில் 'நினைத்துப் பயன் என்ன?' என்ற முடிவுக்கு வந்து, குளிருக்கு அடக்கமாக எங்காவது ஒரு திண்ணையில் படுக்கலாமென்று அவளுடன் புறப்பட்டான்.

இவர்கள் வருவதைப் பார்த்துத் திண்ணையில் படுத்திருந்த நாய்கள் குரைக்க ஆரம்பித்தன. அதைக் கண்டு பயந்து சிறுமி அழ ஆரம்பித்தாள். இந்தச் சத்தம் கேட்டு வீட்டிலுள்ளவர்கள் இவர்களை விரட்டினார்கள்.

கடைசியில் ஒரு பாழடைந்த வீட்டுத் திண்ணை காலியாகக் கிடந்தது. ஓட்டுக் கூரை சரிந்து தொங்கிக் கொண்டிருந்தது. கீழே உடைந்த ஓடுகளின் குவியல்கள் கிடந்தன. மழை வித்தியாசமின்றி, நடுத் தெருவைப் போலவே அங்கும் சொரிந்து கொண்டிருந்தது. அதனாலேயே அங்கு நாய்கூட ஒதுங்கவில்லை. ஏதோ இதுவாவது கிடைத்ததே என்று அவர்கள் அங்கே ஒதுங்கினார்கள்.

இருக்கிற இடத்தில் உடலைச் சுருட்டிக் கொண்டு படுத்தார்கள். நேரம் செல்லச் செல்ல உடல் தானாகவே நீண்டு கொண்டது. மழையும் குளிரும் முன் போலவே இருந்தது. ஆனால் அவர்கள் நன்றாகத் தூங்கினார்கள், முடிவில்லாமல் தூங்கினார்கள். மழையும் குளிரும் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை!

எல்லோரிடமும் ஒரு வித வெறுப்பு ஏற்பட்டது அவனுக்கு.

ஒருவர்பின் ஒருவராக, பிள்ளை, பெண், மனைவி, மருமகள் எல்லாரும் போய் விட்டார்கள். இத்தனையும் பார்த்துக் கொண்டு, 'திருஷ்டி பரிகாரம்' போல் அவன் இன்னும் உயிருடன்தானிருக்கிறான். அந்த மரண தேவதைக்கு ஏனோ இவனிடம் வரத் துணிய வில்லை. ஆனால் இப்போது அவனுக்குச் சாக இஷ்டமில்லை. தன் பேத்தியை அனாதையாகச் செய்ய இஷ்டமில்லை. அதற்காகவே தன்னை வைத்திருப்பதாக எண்ணினான். கடவுளுக்கு அதை முன்னிட்டு நன்றியும் செலுத்தினான்.

பசியின் உகப்பலால் அவன் சிந்தனை தடைப்பட்டது. இரண்டு நாளாகவே வயிறு காலியாகவே கிடக்கிறது. வெளியிலே புறப்படவே முடியவில்லை. அந்தக் குழந்தையும் நேற்று சாப்பிட்ட பழஞ்சோற்றுடனிருக்கிறது. இன்று தனக்குச் சரியாக அதுவும் முழுப்பட்டினி. எப்படியாவது வெளியில் கிளம்பி ஆகாரத்திற்கு வழி தேடத் தீர்மானித்தான்.

"அம்மா...செல்வி...வயிறு பசிக்குதா?" என்றான். சலனமற்ற அவள் உள்ளத்திலிருந்து 'உம்' என்று பதில் வந்தது.

"ஊருக்குள் போய் எதினாச்சும் ஆகாரம் கிடைக்குதான்னு பாக்கலாம், வரயா?" என்றான்.

குழந்தை வெளியுலகத்தைப் பார்க்கும் ஆசையுடன் அடக்கமான அந்த இடத்திலிருந்து எழுந்து நின்றாள்.

தன் மேல் மூடியிருந்த கந்தைகளில் சிலவற்றை எடுத்து அவளுக்குப் போர்த்தி விட்டான். அவளும் அவன் கையைப் பிடித்துக் கொண்டு புறப்படத் தயாரானாள். கையில் பிடித்திருந்த ஊன்றுகோலும் அவனைப் போலவே தள்ளாடிக் கொண்டிருந்தது.

எங்கும் ஓரே இருள் கவிந்திருந்தது. வழியை மறைந்திருந்த பரந்த நீர்த் தேக்கத்தில் காற்றில் முறிந்து விழுந்த மரங்கள் சில குலைந்து கிடந்தன. மேலும் மரங்கள் முறிந்து விழும் பயங்கர ஓசை நடு நடுவே கேட்டது. அடிக்கடி ஒரு மின்னல் இருளைக் கிழித்துக் கொண்டு சென்றது.

இந்த வேளையில் அவர்கள் தட்டுத் தடுமாறி எத்தனையோ இடங்களில் இடறி விழுந்து கொண்டு சென்றனர். கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல் வெட்டி மறைந்ததும் முன்னை விடப் பெரிய அந்தகாரம் சூழ்ந்தது. அந்த இருளில் மெல்ல நடந்தபோது கிழவன் காலை

கஷ்டமும் கட்டமும்!



"ஆமாம் ஸ்வாமி! இவர்கள் எல்லாரும் எதற்காக இப்படிக் கஷ்டப் படுத்திக் கொள்கிறார்கள்?"

"கஷ்டமாவது ஒன்றாவது? 'காணாமலே காதல்' என்னும் டாக்கியில் கதாநாயகனும் கதாநாயகியும் ஏகாந்தமாகக் காதல் பாட்டுப் பாடும் கட்டத்துக்கு ஆர்செஸ்ட்ரா ஒத்திகை நடக்கிறது!"



மழையும் குளிரும்

புஷ்பா வரதன்



மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. காற்று, "உஸ் உஸ்" என்று சுழன்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தது. மரங்களின் பேயாட்டத்தினால் உண்டான பெரும் சத்தம் மிகவும் பயங்கரமாயிருந்தது. இரண்டு நாட்களாக எந்த ஜீவனும் தன்னிருப்பிடத்தை விட்டு வெளியே தலை நீட்டவில்லை. இதற்குள் உலகம் எத்தனை மாறுதல் அடைந்திருக்குமோ என்பதைப் பார்க்க வேண்டுமென்ற ஒரு ஆவல் அடைபட்டுக் கிடக்கும் உள்ளங்களில் இலேசாக உதித்தது. ஆனால் வெளி யுலகத்தின் பயங்கரச் சூழ் நிலை அந்த ஆசையை அமுக்கி விட்டது.

ஊர்க்கோடியில் ஒரு குடிசை. மேலே மூடியிருந்த கூரையைக் காற்று சிறிது சிறிதாகச் சுவீகரித்துக்கொண்டு வந்தது. மிகுதியான ஒன்றிரண்டு மூங்கில்களும் ஊசலாடிக் கொண்டிருந்தன. கீழே தரையில் வெள்ளப் பிரவாகம். நாற்புறத்துச் சுவர்களும் சரிந்து விழச் சமயம் பார்த்திருந்தன.

வாசலின் எதிர்ப்புறத்து மூலையில் காற்றுக்குத் தெரியாமல் சிறிதளவு கூரை தங்கி யிருந்தது. அதன் கீழ் கயிறுகள் அறுந்து 'தொட்டில்' போல் தொங்கும் கட்டில் ஒன்று கிடந்தது. அதில்தான் அந்தக் கிழவனும் அவன் செல்லப் பேத்தியும் உட்கார்ந்திருந்தார்கள். மேலிருந்து கொட்டும் மழைத் தண்ணீரும் காற்றிலும் அடிக்கும் சாரலும் அவர்களைத் தெப்பமாக நனைத்து விட்டன. பல கந்தல் துணிகளும் கிழிந்த சாக்குகளும் அவனுடலை மூடியிருந்தன. அதிலிருந்துகூட மழை நீர் சொட்டிக் கொண்டிருந்தது.

குளிர் தாங்காமல் அவன் தேகத்தி லிருந்த உரோமங்கள் சிலிர்த்தன. அவனுடைய மெலிந்து நீண்ட உடலும், கூனிக் குறுகி ஒடுங்கி நடுங்கிக் கொண்டிருந்தது. கை கால்கள் உணர்ச்சி இழந்து கட்டைபோலாயின. பாதாளத்திலிருக்கும் அவன் கண்கள், சூழ்ந்துள்ள பயங்கரத்தையும் இருளையும் காணச் சகியாது மூடிக் கொண்டிருந்தன.

இந்த நிலையிலும் தன் செல்லப் பேத்தியை விடவில்லை. இரு கால்களுக்கு மிடையில் வைத்து மார்பால் மூடி மறைத்துக் கொண்டிருந்தான். குளிருக்கு அடக்கமாக அந்த இடத்தில் அமைதியாக உட்கார்ந்திருந்தான் அந்தச் சிறுமி. அவளால் வேறு என்ன செய்ய முடியும்?...பாவம்!

கிழவனுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை: தொடர்பில்லாத பல சிந்தனைகள் சோர்வுற்ற அவன் உள்ளத்தில் நடமாடின. தெளிவில்லாத யோசனைகள் எல்லாம் உரு இல்லாமல் மறைந்தன. கசந்து போன தன் வாழ்க்கையை நினைக்கையில்

காலக்ஷேபம்

நல்ல பேரம்!

“தேங்காய் என்ன விலை?”

“நல்ல தேங்காய் ஓரணா; உடைந்த தேங்காய் அரையணா.”

“அப்படியானால் எனக்குப் பன்னிரண்டு தேங்காய்கள் உடைத்துக் கொடு!”

★

சரிதான்!

ஒரு ரயில்வே உத்தியோகஸ்தரை ஜூரியாகப் போட்டிருப்பதாக உத்தரவு வந்தது. உடனே அவன் நியாயாதிபதியைத் தனியாக அணுகி, தான் ஜூரியாக இருக்க முடியாதென்றும், தனக்கு ஆபீஸில் வேலை அதிகம் இருப்பதாகவும் சொன்னான்.

நீதிபதி:—நீர் இல்லாவிட்டால் ஆபீஸ் வேலை நடக்காது என்பது உமது எண்ணமா?

உத்தியோகஸ்தர்:—வேலை நடந்துவிடும். ஆனால் அது அவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதுதான் என் எண்ணம்.

★

என்ன வேண்டும்?

ஏரோப்ளேன் டிரைவர் ஒருவர், தாம் ஏரோப்ளேனில் புறப்படுவதற்குத் தயார் செய்து கொண்டிருந்தார்.

டிரைவர் (தம் சின்னப் பிள்ளையைப் பார்த்து):—கண்ணு, நான் இப்பொழுது ஆகாசத்திலே போகப்போகிறேன். உனக்கு என்ன வாங்கிக்கொண்டு வரட்டும்?

கண்ணன்:—என் காற்றாடி நாலு நாளைக்கு முன்னால் அறுந்துக் கொண்டு பறந்து போய் விட்டது. எங்கேயாவது பறந்து கொண்டிருந்தால் பிடித்துக் கொண்டுவா, அப்பா!

★

சந்தேகம்!

மோட்டார் டிரைவர் (விபத்துக்கு ஆளாகிப் பின் சுய நினைவு வந்தவுடன்):—நான் எங்கே இருக்கிறேன்?

டாக்டர்:—ஆறாம் நம்பர் அறையில் இருக்கிறீர்!

டிரைவர்:—ஜெயிலிலா, ஆஸ்பத்திரியிலா?

சபாஷ்!

பெரியவர்:—வீட்டிலே உன் செல்லப் பெயர் என்னடா, குழந்தை?

சிறுவன்:—எனக்குத் தெரியாது, மாமா!

பெரியவர்:—என்னடா தெரியாது? உன் தாயார் சமையல் ஆனதும் உன்னைச் சாப்பிடக் கூப்பிடும்போது எப்படியடா கூப்பிடுவாள்?

சிறுவன்:—என்னை அம்மா சாப்பிடக் கூப்பிடுவதே இல்லை. நான்தான் சமையல் உள்ளேயே இருக்கிறேனே!

★

வாஸ்தவம்!

மனைவி:—நாம் வேலைக்காரியை அனுப்பி விட்டால் அண்டை அயலில் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்!

புருஷன்:—வேலைக்காரி போன பிறகு அவர்கள் பேசிக் கொள்ளுவதுதான் நமக்குத் தெரியப் போவதில்லையே!



ஜோதிடர்:—என்ன அப்பா! உன் கை ரேகைப் பிரகாரம் நீ தொட்டதெல்லாம் நன்றாய் விருத்தியாகுமே! ஆமாம், நீ என்ன வியாபாரம் செய்கிறாய்?

மற்றவன்:—பால் வியாபாரம் செய்யறேனுங்க!

சங்கீதத்தில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பதற்காக எத்தனை கச்சேரிகளுக்கு உன்னை அழைத்துப் போயிருப்பேன்! நம் குடும்பத்துக்கே கெட்ட பெயர் ஏற்படும்படியாக நடந்து கொண்டுவிட்டாயே!" என்று பொரிந்து தள்ளி விட்டான் சம்பந்தம்.



அண்ணாவினுடைய பேச்சைக் கேட்டதும் சுசீலாவுக்கு இன்னும் அதிகமாகச் சிரிப்பு வந்தது. ஆனால் அதை அடக்கிக் கொண்டு விடுவிடு என்று உள்ளே போய் மறு விநாடி திரும்பினாள். "அண்ணா, இதற்குத்தானா மௌனவிரதம் எடுத்துக் கொண்டு பிரமாதப்படுத்தி விட்டாய்? விஷயம் தெரியாமல் கோபித்துக் கொள்ளுகிறாயே! அந்த ஸில்க் ஜிப்பாக் காரரின் கடிதம் இதுதான். நீயே பார்த்துக் கொள்!" என்று சொல்லி விட்டு ஒரு சிறு கடிதத்தைக் கொடுத்தாள் சுசீலா.

சம்பந்தம் மனக் கொதிப்புடனும் பரபரப்புடனும் பொங்கி வரும் ஆவலை அடக்கிக்கொண்டு அதை வாங்கிப் பார்த்தான். அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தது தெரியுமா? "தயவு செய்து 'தூண்டிற் புழுவினைப் போல்' என்ற பாட்டைப் பாடவும்" என்று எழுதியிருந்தது.

"சுசீலா, நான் விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் உன்மேல் சந்தேகப்பட்டு மனசை அனாவசியமாகக் குழப்பிக் கொண்டு விட்டேன். அர்த்தமற்ற வீணான வேதனைக்கும் உள்ளானேன். உன் மனசையும் ரொம்ப வேதனைக்குள்ளாக்கி விட்டேன். நடந்ததை மறந்து மன்னித்து விடு!" என்றான் சம்பந்தம். அவன் குரலில் இரக்கம் தொனித்தது.

சுசீலா சிரித்துக்கொண்டே, "அண்ணா, நான் உன்னை மன்னிப்பதாவது! நடந்ததை நான் எப்பொழுதோ மறந்து விட்டேன்! நீதான் பாவம், மனசை ரொம்ப அலட்டிக் கொண்டு விட்டாய்!" என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தாள்.

சம்பந்தமும் சிரித்தான்.

"சுசீலா, இன்று நுங்கம்பாக்கம் சபையில் கச்சேரி இருக்கிறதே, ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ?" என்றான் சம்பந்தம்.

"ஓ, பேஷாய் ஞாபகம் இருக்கிறது!" என்று சொல்லிவிட்டுச் சுசீலா உள்ளே போனாள்.

அன்று மாலை நுங்கம்பாக்கத்தில் சுசீலாவின் கச்சேரி நடந்தது. வழக்கம் போல் அந்த ஸில்க் ஜிப்பாக்காரன் முன் வரிசையில் உட்கார்ந்திருந்தான். கச்சேரி முடியும் தருணத்தில் சுசீலா சில துக்கடாக்கள் பாடினாள். அந்த ஸில்க் ஜிப்பா ஆசாமி "ஆசை முகம்" என்று சுசீலாவைப் பார்த்துப் பலமாகச் சொன்னான். உடனே சம்பந்தத்தின் முகம் விகாரமடைந்தது. அந்த ஸில்க் ஜிப்பா ஆசாமியை எரித்துவிடுகிறவன் மாதிரி பார்த்தான். ஆனால் அடுத்த நிமிஷம் சுசீலா முகத்தில் குறும்புச் சிரிப்புடன் அவனைப் பார்த்து, ".........மறந்து போச்சே!" என்று பாட்டைத் தொடங்கியதும் சம்பந்தம் அடைந்த குதூகலத்துக்கு எல்லையே கிடையாது.

"சபாஷ்!" என்று வாய்விட்டுச் சொல்லி, சுசீலாவை ஒரு வெற்றிப் பார்வை பார்த்தான். உடனே சபையோர்களின் முகபாவத்தையும் கவனமாகப் பார்த்தான்; அத்துடன் விட்டு விடாமல் அந்த ஆசாமியின் மீது ஒரு ஏளனப் பார்வையைச் செலுத்தினான்.

கச்சேரி முடிந்து வீட்டுக்கு வந்ததும் சம்பந்தம் சுசீலாவைப் பார்த்து, "சுசீலா, இன்றைக்கு அந்த ஸில்க் ஜிப்பாக்காரன் மண்டையில் நன்றாய் அடித்தாய்! அந்த அயோக்கியப் பயலுக்கு என்ன அத்தனை துணிச்சல்! அவன் 'ஆசை முகம்' என்று கேட்டதும் நீ 'மறந்துபோச்சே' என்று பாடியது பிரமாதம்! சபையிலுள்ளவர்களும் அதைப் பாராட்டிக் கைதட்டினார்கள்!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

சுசீலா சிரித்தாள். 'நானாகச் சமயத்துக்கேற்பப் பாடவில்லை, அது பாரதியார் பாட்டு' என்று சொல்லி அவள் அண்ணாவின் சந்தோஷத்தைக் கெடுக்கவில்லை.

திரம் தாங்க முடியவில்லை. "சபை நடுவில் பலர் அறியக் கடிதம் எழுதவாவது! என்ன துணிச்சல் அவனுக்கு! இவளுந்தான் ஆகட்டும்—அந்தக் கடிதத்தை அவ்வளவு அக்கரையோடு வாங்கி எல்லோரும் பார்க்கப் படிக்கிறாளே! ஆகா! பெண்களையே நம்பக்கூடாது!" என்று நினைத்து வேதனைப்பட்டான்.

கச்சேரி முடிந்து விட்டது. சுசிலாவும் சம்பந்தமும் வீடு திரும்பினர். சம்பந்தம் வழக்கம்போல் கலகலப்பா யில்லாதது சுசிலாவுக்கு என்னவோ போலிருந்தது. ஒருவேளை நேரம் ஆகிவிட்டபடியினால் களைப்படைந்து விட்டாரோ என்று நினைத்து அவள் அதுபற்றி அவனை ஒன்றும் கேட்கவில்லை.

மறுநாள் பொழுது விடிந்ததிலிருந்து சம்பந்தம் ஒரு மாதிரி இருந்தான். சுசிலாவும் அதை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. அதற்கு மறுநாளும் அவன் கலகலப்பா யில்லாமற் போகவே அவளுக்கு மனசு நிலை கொள்ளவில்லை. சின்னஞ் சிறு குழந்தையா யிருக்கும்போதே தாய் தந்தையரை இழந்த சுசிலாவுக்கு அவள் அண்ணன் சம்பந்தம்தான் தாயும் தந்தையுமா யிருந்து அவளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தான். தன்னை அவ்வளவு அன்பாக வளர்த்துச் சங்கீதமும் சொல்லி வைத்த அருமை அண்ணாவுக்கு இப்பொழுது என்ன கஷ்டம் நேர்ந்தது! தன்னிடம் கூடச் சொல்ல முடியாதபடி அத்தகைய மனக் கஷ்டம் எதுவாயிருக்கலாம் என்று எண்ணிச் சுசிலா மனம் புழுங்கினாள்.

சம்பந்தம் தன் மனக் கஷ்டத்தை வெளி விடாமற் போகவே சுசிலா தானாகவே இதுபற்றி அவனைக் கேட்டு விடுவது என்று தீர்மானித்து அவனிடம் போனாள். சுசிலா வந்ததைப் பார்த்தும் பாராதவனைப்போல் சம்பந்தம் ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"அண்ணா!"

பதிலில்லை.

"அண்ணா!"

இப்பொழுது சுசிலாவின் குரலில் அழுகையும் கலந்து தொனித்தது. சம்பந்தம் புத்தகத்தை மூடிவிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தான். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

"அண்ணா! என்ன இப்படி திடீரென்று மாறிவிட்டாய்! என் மேல் என்ன கோபம்? இரண்டு மூன்று நாட்களாக என் பக்கமே திரும்பாமலிருக்கிறாயே! நான் என்ன தவறு செய்தேன்? நீ அந்தத் தவறை எடுத்துச் சொன்னால் நான் திருத்திக்கொள்ள மாட்டேனா? உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். என்னோடு பேசாமல் என்னை இப்படி வதைக்காதே!" என்று விம்மி அழுது கொண்டே சுசிலா சம்பந்தத்தின் காலில் விழுந்து விட்டாள்.

சம்பந்தத்தின் மனம் கரைந்துவிட்டது. அவளை அப்படியே தூக்கியெடுத்து அவள் கண்களில் பெருகிவந்த கண்ணீரைத் துடைத்தான். ஆனால் அவன் முகம் மட்டும் எப்போதும் போலில்லை.

"அண்ணா!" என்று அழைத்தாள் சுசிலா.

"சுசிலா, அன்று கச்சேரியில் உன்னையே விறைக்க விறைக்கப் பார்த்துக் கொண்டிருந்தானே, ஒரு சில்க் ஜிப்பாக்காரன், அவன் யார்? அவன் உனக்கு ஏதோ ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தானே, அது என்ன? எனக்குத் தெரியலாமா?" என்று சம்பந்தம் கடுகடுப்புடன் கேட்டான்.

உடனே சுசிலாவின் அழுகை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. ஆனால், அதற்குப் பதிலாகக் 'கட கட' வென்று சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

"சுசிலா, உனக்கு விளையாட்டா யிருக்கிறதா? உன்னைக் குழந்தைப் பருவத்திலிருந்து எடுத்து வளர்த்த நான் உனக்காக என்ன பாடு பட்டிருப்பேன், தெரியுமா? நீ ஆறு வயதுக் குழந்தையாயிருந்தபோது கீழே விழுந்து அடிபட்டுக் கொண்டு பலமாக அழுதாய்! அப்பொழுது நமது பக்கத்து வீட்டில் ஒரு பாட்டு வாத்தியார் குடியிருந்தார். அவர் என்னிடம் ஓடோடியும் வந்து 'உங்கள் தங்கைக்கு நல்ல சாரீரம் இருக்கிறது. எடுத்த எடுப்பில் முகாரி ராகம் ரொம்ப சுகமாக, பாவ பூர்வமாக வருகிறது. அவளுக்குச் சங்கீதம் சொல்லிவையுங்கள். உங்களுக்குப் பிரிய மிருந்தால் நானே அவளுக்குச் சொல்லித் தருகிறேன்!' என்றார். நான் சம்மதம் தெரிவித்து அவரையே உனக்குப் பாட்டு வாத்தியாராக அமர்த்தினேன். அப்புறம் உனக்குச்



ஸ்யமாக வெற்றிலை போடுவதில் ஈடுபட்டிருந்தான்.

"மாமா! நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்..." என்று ஆரம்பித்தாள்.

"என்ன செங்கமலம்! உனக்கு உதவி செய்யாமல் நான் யாருக்குச் செய்யப் போறேன்?—சொல்லு; என்னால் முடிந்தால் செய்கிறேன்" என்று உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினான் சிங்காரம்.

"எனக்கு அவசரமா மூந்நூறு ரூபாய் வேணுங்க. இன்னும் ஆறு மாசத்திலே..."

அதற்குள் அவனது எண்ண அலைகள் எதிர்கால வாழ்வை நோக்கி விரைந்தன. 'இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் பாலூர் பண்ணையாரின் மகளை மணந்து கொண்டுவிடலாம். பிறகு இந்த மூந்நூறு ரூபாய் லட்சியமா? மூந்நூறு ரூபாய்க்கு ஐந்நூறு ரூபாயாகக் கொடுத்துவிடலாம்' என்று தோன்றிற்று அவனுக்கு.

"இன்னும் ஆறு மாசத்திலே........." என்று தொடங்கியவள், "வட்டியும் முதலு மாகச் சேர்த்து ஐந்நூறு ரூபாயாகக் கொடுத் துடறேன்" என்று கூறி முடித்தாள்.

"ஆமா, உன்னை நம்பிக் கடன் கொடுத்துட முடியுமா? அப்புறம் திருப்பித் தருவது என்பது உன்னால் முடிகிற காரியமா? ஆனால்......"

"ஆனால் என்ன மாமா?"

"நீ எனக்குப் பணத்தைத் திருப்பித்தர வேண்டாம். அதற்குப் பதிலாக நான் சொல்லுவதைச் செய்வாயானால்........."

"நீங்க என்ன சொன்னாலும் செய்யத் தயாரா யிருக்கிறேன்."

"நீ பாலூர் பண்ணையாரின் மகனைக் கல்யாணம் செய்து கொள்ளலை என்று சத்தியம் செய்து கொடு, போதும். மூந்நூறு ரூபாய் தந்துடறேன்!" என்றான் சிங்காரம்.

நாராசம் போன்ற அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவள் அப்படியே மெய் மறந்து நின்று விட்டாள். அவளுடைய மனத்தில் பெரும் போராட்டம் நிகழ்ந்தது. காதலும், இரத்த பாசமும் ஒன்றையொன்று மோதின. கடைசியில் இரத்த பாசமே வென்றது.

"அப்படியே செய்கிறேனுங்க. நம்ம ஊர்க் காளியின் ஆணையாக நான் பாலூர் பண்ணையாரின் மகனைக் கட்டிக்கிறதில்லை" என்று சத்தியம் செய்து கொடுத்தாள் செங்கமலம்.

அடுத்த நிமிஷம் அவள் கையில் மூந்நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துப் போட்டு, "செங்கமலம், இந்த விசயத்தை நீ ரகசியமா வைச்சுக்கிடணும்!" என்றான் சிங்காரம்.

செங்கமலம் பணத்தைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தாள். "அண்ணே! கிணறு வெட்டணும்னையே, இந்தா மூந்நூறு ரூபாய்!" என்று கூறிப் பணத்தைத் தன் அண்ணனிடம் கொடுத்தாள். மாரி ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்று விட்டான். அவன் கண்கள் அவளுக்குத் தனது நன்றியறிதலைத் தெரிவித்தன.

• • •

அந்த வருஷம் காவடிப் பட்டியில் மாரியின் வயல்களைத் தவிர மற்றவையெல்லாம் தீய்ந்து போய்விட்டன. காவடிப் பட்டி மக்கள் அனைவரும் மாரியின் இடைவிடாத உழைப்பினால்தான் அவனுக்கு வெற்றி கிடைத்தது என்று கருதினர். ஆனால் அண்ணனின் வாழ்வுக்காகத் தன் வாழ்வையும் ஒரு பெண் பலியிட்டதனால்தான் அத்தகைய வெற்றி உண்டாயிற்று என்று அவர்களுக்குத் தெரியுமா?



தூண்டிற் புழுவினைப் போல்..



சோமாஸ்

சம்பந்தத்துக்கு இரண்டு நாட்களாகவே கோபம். முகத்தை 'உர்' என்று வைத்துக் கொண்டிருந்தான். யாருடனும் சரியாய்ப் பேசவில்லை.

சுசீலாவுக்கு இது ஆச்சரியமாயிருந்தது. சம்பந்தத்துக்கு யார்மீது என்ன கோபம் வந்தாலும் தங்கை சுசீலாவினிடம் மாத்திரம் கோபமே வராது. அவளிடம் அவன் உயிரையே வைத்திருந்தான் என்று சொன்னால் அது தவறில்லை. இன்று சுசீலா சங்கீத உலகில் நக்ஷத்திரமாக விளங்குகிறாள் என்றால் அது சம்பந்தத்தின் பெரு முயற்சியால்தான். அவளை பெரிய பாடகியாக்கி விடவேண்டும் என்னும் ஒரே ஆசையில் அவன் பட்ட சிரமம் கொஞ்சமல்ல. சம்பந்தத்துக்கும் சங்கீதத்துக்கும் யாதொரு விதமான சம்பந்தமும் கிடையாது. தன் அருமைத் தங்கை சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக அவளை அழைத்துக்கொண்டு அவன் எத்தனை கச்சேரிகளுக்குப் போயிருக்கிறான்! சங்கீதத்தில்—அழகு, பாணி, பாவப் பொழிவு, உதவுபடி, ஒரிக்கை கமக சாதகம் என்று இன்னும் என்னவெல்லாமோ சுசீலா அவனிடம் சொல்லுவாள். சம்பந்தம் முக மலர்ச்சியோடு அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பான். ஆனால் சங்கீதத்தைப் பொறுத்த வரையில்—பாவம், சம்பந்தம் ஒரு நிரபராதி! அவ்வளவுதான் சொல்லலாம். தங்கை சுசீலாவின் சங்கீதம் இணையற்றது என்பதில் அவனுக்குத் துளிக்கூட சந்தேகம் கிடையாது. அவள் சங்கீதத்துக்கு மேலும் மேலும் மெருகு ஏற்ற வேண்டும் என்பதற்காகச் சிறந்த வித்வான்களைக் கொண்டு அவளுக்குச் சங்கீதம் சொல்லி வைத்தான்.

ஒரு சமயம் ஒரு பிரபல சங்கீத வித்வான் சம்பந்தத்தின் வீட்டுக்கு வந்திருந்தார். வழக்கம்போல் சம்பந்தம் சுசீலாவைப் பாடச் சொன்னான். "அவள் பாட்டைக் கேட்டுக்கொண்டே வந்த வித்வான், "ஆகா! சபாஷ்!" என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். சம்பந்தத்தின் சந்தோஷம் எல்லையைத் தாண்டி விட்டது.

பாட்டு முடிந்தது. சம்பந்தம் அந்த வித்வானைப் பார்த்து, "பாட்டு எப்படி?" என்று ஆவல் பொங்கக் கேட்டான்.

"ஆகா! பாட்டு ரொம்பப் பிரமாதம்தான். ஆனால்..." என்று வித்வான் மேலே கூறுமுன் சம்பந்தம் அவரை இடைமறித்து, "ஆனால் என்ன?" என்று கடுமையாகக் கேட்டான்.

"ஒன்றுமில்லை. இன்னும் கொஞ்சம் சாதகம் வேண்டும். அவ்வளவுதான்!" என்றார் வித்வான்.

அடுத்த கணம் சம்பந்தம் ஓங்கிய கையோடு அவர்மீது பாய்ந்து, "உமக்கு என்ன ஐயா தெரியும் சங்கீதத்தைப் பற்றி?" என்று கேட்டுவிட்டான். அப்புறம் அந்தச் சங்கீத வித்வானைத் தப்ப வைக்கப் பட்ட பாடு ரொம்ப சிரமமாகப் போய்விட்டது.

இந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்த சுசீலாவுக்குத் தன்மேல் அத்தனை பிரியம் வைத்திருக்கும் அண்ணாவுக்கு இரண்டு நாட்களாக என்ன வந்தது என்று வருத்தமாகப் போய்விட்டது.

அன்று சுசீலாவின் கச்சேரிக்கு நல்ல கூட்டம் வந்திருந்தது. சம்பந்தத்தின் உற்சாகத்துக்குக் கேட்க வேண்டுமா?

சுசீலா அன்று பிரமாதமாகப் பாடினாள். கல கலவென்று சங்கதிகளை உதிர்த்துச் சபையோரை ஆனந்தத்தில் ஆழ்த்தினாள். படபடவென்று கைதட்டிச் சபையோர் சுசீலாவை உற்சாகப் படுத்தினார்கள்.

கச்சேரி முடியும் தருணத்தில் சுசீலா சில துக்கடாக்கள் பாடினாள். சபையில் அப்போது நல்ல கலகலப்பு. வழக்கம் போல் சுசீலாவின் கச்சேரி யென்றால் தவறாமல் ஆஜராகும் அந்த ஸில்க் ஜிப்பா அணிந்த நவ நாகரிக வாலிபன் அன்றைக்கு ஆனந்த பரவசமானான். ஒரு சின்னக் காகிதத்தில் எதையோ எழுதி அந்த வாலிபன் ஒரு பையனிடம் கொடுத்து அதைப் பாடகியிடம் சேர்க்கச் சொன்னான். அதைப் பெற்றுக்கொண்ட சுசீலா கவனித்துப் படித்து அந்தக் கடிதத்தை ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டாள். பிறகு, அவள் அந்த வாலிபனைப் பார்த்து ஒரு மோகனப் புன்னகையை வீசினாள். அவனும் அதே பாஷையில் சுசீலாவுக்குப் பதில் அளித்தான். இதைக் கவனித்த சம்பந்தத்துக்கு ஆத்

கொடுத்து விட்டால்? — தன்னைவிடப் பெரிய மனிதன் இந்தச் சுற்று வட்டாரத்திலேயே கிடையாது என்று பெயரெடுத்து விடலாம் என்று கருதினான். அதற்குப் போட்டியாக ஏழை மாரி தோன்றினால் அது நடக்கக்கூடிய காரியமா?

2

செங்கமலம் ஒரு நாள் தன் அண்ணன் மாரிக்குக் கஞ்சி கொடுக்கச் சென்று கொண்டிருந்தாள். வழியில் ஒரு வில் வண்டி பள்ளத்தில் சிக்கித் திக்கு முக்காடிக் கொண்டிருந்தது. வாயில்லா ஜீவன்கள் படும் பாட்டைப் பார்த்ததும் அவளுக்கு மனதை என்னவோ செய்தது.



"வண்டிக்கார அண்ணே! மாட்டை அடிச்சு என்ன பிரயோசனம்? வண்டிக்குள்ளே இருக்கிறவரு கீழே இறங்கிச் சக்கரத்தைத் தள்ளினால்ல வண்டி நகரும்?" என்றாள்.

வண்டியில் உட்கார்ந்திருந்த வாலிபனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. வண்டியை விட்டுக் கீழே இறங்கிச் சக்கரத்தைத் தள்ளினான். அடுத்த நிமிஷம் வண்டி நகர்ந்தது. அதோடுமட்டுமல்ல; அக் கட்டழகனின் மனத்திலுள்ள ஆசை என்னும் சக்கரமும் அவனை விட்டு நகர்ந்து அவளிடம் சென்றுவிட்டது.

வண்டியின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அப் பெண்ணின் திவ்ய சௌந்தர்யம் ஒரு கணநேரம் அவனைத் திகைப்படையும்படிச் செய்துவிட்டது. தன்னை ஒருஇளம் வாலிபன் நோக்குவதைக் கண்ட செங்கமலமும் அவனை நோக்கினாள். இருவர் கண்களும் ஒருமுறை சந்தித்தன. கண்கள் வெட்கத்தால் குழிந்து தேகம் நூறு கோணலாக வளைந்தது. வெட்கம் ஒரு பக்கமும், சந்தோஷம் ஒருபுறமும் அவளைப் பிடுங்கித் தின்றன. அவ்வளவுதான்; விறு விறுவென்று நடைபோட்டுக் கொண்டு சென்றுவிட்டாள் செங்கமலம்.

இவ்வாறு ஒரு கண நேரத்தில் ஏழைப் பெண் செங்கமலத்துக்கும், பாலூர் பண்ணையாரின் மகன் பரமசிவத்துக்கும் ஏற்பட்ட அபூர்வசக்தியில் காதல் தீ வளர்ந்தது. ஆனால் அந் தீ விரைவில் அணைந்து இருவர் மனத்தையும் சஞ்சலத்தில் ஆழ்த்தும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

அன்று மாலை சோர்ந்த முகத்துடன் வீட்டுக்கு வந்தான் மாரி. செங்கமலம் கஞ்சி காய்ச்சி இறக்கி வைத்து விட்டுக் குடிசைக்கு வெளியே வந்தாள். மாரியின் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்ததும் அவளுக்குப் பகீரென்றது. "அண்ணே! என்ன விசயம்? உடம்பு சரியாயில்லையா?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லே, தங்கச்சி! நம்ம வயல்களிலெல்லாம் தண்ணி இல்லாமே கருகி வாடிப் போகுது. கிணறு வெட்டினால்தான் நமக்கு ஏதாவது வழியுண்டு. இல்லாட்டா இந்த வருசம் நம்ம வாயிலே மண்ணுதான்" என்றான் மாரி.

"அதற்கு ஏன் அண்ணே, கவலைப்படுறே? எங்கேயாவது கடன் வாங்கிட்டாப்போவுது. இதற்கெல்லாம் வருத்தப் பட்டா முடியுமா?" என்றாள் செங்கமலம்.

"நம்மை நம்பி எந்த மனுசன் கடன் கொடுப்பான்?"

"அண்ணே! உனக்குப் பணம் எவ்வளவு வேணும்? நான் வாங்கித் தாரேன்!"

இதைக் கேட்டதும் மாரிக்குத்தான் சிரிப்பு வந்தது. "நமக்கு எங்காவது புதையல் கிதையல் கிடைச்சால்தான் உண்டு. மூந்நூறு ரூபாய் எந்தப் பய நம்பிக் கடன் கொடுப்பான்?" என்று கூறி விட்டு, அவன் மேலும் பேச்சைத் தொடராமலிருப்பதற்காக அங்கிருந்து நகன்று விட்டான்.

அடுத்த நிமிஷம் செங்கமலம் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய்க் குடிசைக் கதவைச் சாத்திக்கொண்டு விறு விறு வென்று வெளியே நடந்தாள்.

• • •

சிங்காரம் அப்பொழுதுதான் சாப்பிட்டு விட்டு வந்து திண்ணையில் உட்கார்ந்து கவா

வெற்றியின் ரகசியம்

பி. எஸ். மணி

"செங்கமலம்! நம்ம கஷ்டம் இனி விடிஞ்சது. பாலூர் பண்ணையாரே நம் மகனுக்கு உன்னைக் கட்டிக்கிடச் சம்மதம்னு சொல்லிவிட்டாராம்!" என்று கூறிக் கொண்டே குடிசையினுள் நுழைந்தான் மாரி. என்றுமில்லாத ஆனந்தமும் எக் களிப்பும் அவன் முகத்தில் பிரதிபலித்தது.

"அவரு சம்மதிச்சுட்டாப் போதுமா? நான் சம்மதிக்க வேண்டாமா? எனக்குத் தான் அவரைப் பிடிக்கலையே!" என்றாள் செங்கமலம்.

செங்கமலத்தின் எதிர்பாராத நாக்கு நிலைக் கண்டதும் அதிர்ச்சி தாங்க முடியா மல் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றான் மாரி. பிறகு சமாளித்துக்கொண்டு, "என்ன தங்கச்சி! அவரைத்தான் கட்டிக்கிடப் போறேன், அவருமேலே ஆசை விழுந் திடுச்சி என்றெல்லாம் சொல்லிக்கிட்டிருந் தாயே, இப்போ என்ன வந்திடுச்சு? பைத்தியம், கிபித்தியம் பிடித்திடிச்சா?" என்றான் மாரி.

"அப்போ என்னவோ சிறுபிள்ளைத் தனமா உளறிக்கிட்டிருந்தேன். இப்போ அவரைப் பிடிக்கலே; அவ்வளவுதான்!" என்றாள் செங்கமலம்.

மாரியின் எதிர்காலக் கற்பனைக் கோட்டையெல்லாம் இடிந்து சுக்கு நூறு கித் தகர்ந்து விட்டது போல் தோன்றியது. அப்படியே சோர்ந்து போய்க் கட்டிலில் விழுந்தான் மாரி.

செங்கமலத்தின் கண்களிலிருந்து நீர் அருவியாகப் பொழிந்தது. அண்ணனின் வாழ்வுக்காகச் சிங்காரத்தின் சூழ்ச்சிக்குப் பலியாகித் தன்னுடைய வாழ்வையே பாழ் படுத்திக் கொண்ட பேதையல்லவா அவள்!

• • •

வயல் வெளிகளை யெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துகொண் டிருந்தான் சிங்காரம். "அண்ணே! தெரியுமா சேதி? நம்ம மாரிப்பயலுக்கு இனிமே அதிர்ஷ்டந்தான்!" என்று கூறிக் கொண்டே அவனுக்கு எதிரே வந்தான் குப்பன்.

"எய், என்னடா உளறுதே! விசயத்தைப் பூராச் சொல்லாமே புதிரு போடுதேயே!" என்றான் சிங்காரம்.

"நம்ம மாரி தங்கச்சி செங்கம லம் இருக்கால்ல, அவ அழ கைப் பார்த்துப் பாலூர் பண்ணை யாரு மகன் மயங்கிட்டாரு போலிருக்கு. அவளைத்தான் கட்டிக்கிடுவேன்னு சொல் விட்டாராம்!"

"கனவு கினவு கண்டாயா? தினம் ஒரு வேளைக் கஞ்சிக்குத் தாளம் போடுறாங்க, அவங்க. அவளையா பாலூரு பண்ணையாரு மகன் கட்டிக்கிடப் போறாரு?"

"நிசமாத்தான் அண்ணே! எங்க மாமன் தன் பெண்சாதியைப் பாலூருக்குக் கொண்டுவிடப் போயிருந்தாரு. அப்போ அங்கே பேசிக்கிட்டாங்களாம்" என்று தனது செய்தியை ஆதாரத்துடன் எடுத்துக் கூறினான் குப்பன்.

"உன் கிட்டே எவனோ கயிறு திரித்து விட்டுட்டான். இதைப் போய் நம்புறியே? உன் புத்தியை நீதான் மெச்சிக்கணும்" என்று ஏளனமாகப் பதிலளித்து விட்டு அவ் விருந்து நகர்ந்தான் சிங்காரம்.

ஆனால் உள்ளுக்குள் ஒருவித சந்தேகம் எழுந்தது. 'உண்மையாக இருந்தால்? நாம் சில நாட்களாகக் கட்டிய கோட்டை யெல்லாம் இடிந்து விடுமோ? பாழாய்ப் போன இந்த மாரிப்பயல் நமக்குப் போட்டி யாக வந்து விட்டானே? இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்' என்று எண்ண மிட்டது அவன் மனம். அவன் கால்கள் தாமாகவே வீட்டை நோக்கிச் செல்ல ஆரம்பித்தன.

சிங்காரம் காவடிப்பட்டிக் கிராமத்தி லுள்ள பெரும் பணம் படைத்தவர்களில் ஒருவன். அவனுக்குக் கிராமத்தில் மிகுந்த செல்வாக்கு இருந்தது. சிங்காரத்துக்கு ஒரே மகள். பெயர்தான் சுவர்ணமே தவிர, குணத்தில் சூர்ப்பணகையா யிருந்தாள். வாயாடுவதிலும் வம்பளப்பதிலும் அவளுக்கு நிகர் அவளேதான்!

சிங்காரத்துக்கு வெகு நாட்களாகப் பாலூர் பண்ணையாரின் மீது ஒரு கண். தன் மகள் சுவர்ணத்தை எப்படியாவது அவரு டைய மகனுக்குக் கல்யாணம் செய்து

தாம். மீதிப்பேர் சீக்கிரமே பெறப்போகிறீர்கள். நான் வெட்கத்தை விட்டுப் பேசுவதாக நீங்கள் எண்ணவும் மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். என் மனம் ஆனந்தக் கடலில் நீந்திக் கொண்டிருந்தது. ஆனால் அதே சமயத்தில் அங்கே அவர் துக்க சாகரத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தார். என்ன இருந்தாலும் அவர் கல்யாணம் நிச்சயமான சமயத்தில் சகோதரி பேசவில்லை என்றால்......?

ஒரு நாள் வெளியே சென்றவர் மழையில் நனைந்து 'தெப்பமாய்' வீடு திரும்பினார். சிறிது அசிரத்தையாக இருந்து விட்டதால் ஜலதோஷம் பிடித்து, பிறகு ஜுரமும் வந்துவிட்டது. டாக்டர் பார்த்துவிட்டு, "பயம் ஒன்றுமில்லை; ஆனாலும் ஜாக்கிரதையாக இருந்தால் நல்லது. முக்கியமாக அமைதி அவசியம்" என்று சொல்லிவிட்டுப் போனார். இச்சமயம் அவர் தங்கை அங்கேதான் இருந்தாள். ஓரிரண்டு நாள் ஏதோ சொல்ல விரும்புபவள்போல் அவரிடம் போனாள். ஆனால் ஒன்றும் சொல்லாமல் திரும்பினாள்.

ஜுரம் வந்த ஏழாவது நாள். அவருடைய உடம்பும் சற்றுக் குணமடைந்து வருவது போல் காணப்பட்டது. இரவு எட்டு மணி இருக்கும். ரமாவின் தாயார் கோவிலுக்குப் போயிருந்தாள். அவருடைய தாயார் சமையலறையில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள். வெளியே போன அவருடைய தகப்பனாரும் திரும்பிவரவில்லை. கூடத்தில் படுக்கையில் படுத்தபடி அவரும், சாய்வு நாற்காலியில் புத்தகத்துடன் உட்கார்ந்திருந்த ரமாவும் அங்கே இருந்தார்கள்.

அவள் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும் சத்தம் தவிர வேறு சத்தமில்லை. திடீரென்று "ரமா!" என்று அவளைப் பெயரிட்டு அவர் அழைத்தார். அது அவள் காதில் விழுந்ததற்கு அறிகுறியாக அவள் கை பக்கம் புரட்டுவதை நிறுத்தியது. ஆனால் உடனே அவர் அழைத்ததைக் கவனியாதவள் போல் அவள் மீண்டும் படிக்கத் தொடங்கினாள்.

இருமிக் கொண்டே அவர் மறுபடியும் "குடிக்கத் தண்ணீர் கொண்டுவா, அம்மா" என்று சொல்லும்போதே அவர் பேச்சு தடைப்பட்டது. அவள் அவரைப் பார்த்த போது அவர் தன்னையே பார்ப்பதைக் கண்டாள். ஒரு வேளை இதுவும் தன்னைப் பேசச் செய்ய அவர் செய்யும் சூழ்ச்சி என்று அவள் நினைத்தாளோ என்னவோ, இருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. அடுத்த நிமிஷம் அவர், "அம்மா! தீர்த்தம்!" என்று சொல்லிய குரலில் தோன்றிய நடுக்கம் அவளைத் திடுக்கிடச் செய்தது. அருகிலிருந்த கூஜாவிலிருந்து ஜலத்தை டம்ளரில் எடுத்துக்கொண்டு அவரருகே ஓடினாள். அவர் பார்வை எங்கோ அலைந்து கொண்டிருந்தது. ரமா தன்னையுமறியாமல், "ஐயோ, அம்மா!" என்று கூவினாள். அப்போதுதான் கோவிலிலிருந்து திரும்பிய அவள் தாயார் ஓடி வந்தாள். உள்ளே இருந்த அவரது அம்மாவும் மகனிடம் வந்து சேர்ந்தாள். அவள் குரல் அவருடைய பார்வையைக் கவர்ந்தது. ரமாவின் கையைத் தம் கையில் வைத்துக்கொண்டு "ரமா!" என்று அழைத்தார்.

ரமாவும், "அண்ணா!" என்று அலறினாள்.

அவர் முகத்தில் புன்னகை மலர்ந்தது; ஆனால் ஆவி பறந்து விட்டது.

"ஐயோ, அண்ணா! நான் பாவி" என்று ரமா கதறினாள். அவருடன் பேசவும் செய்தாள். ஆனால் அவர்தான் அவளுடன் இப்போது பேசவில்லை.

அன்றிலிருந்து 'ரமா' என்ற அந்தப் பெயரைக் கேட்கும்போதெல்லாம் என் மனம் சஞ்சலமடைகிறது. குரோதம், அசட்டை, நிர்த்தாட்சண்யம் முதலிய குணங்கள் எவ்வளவு கெடுதல் விளைவிக்கின்றன என்பதை அந்தப் பெயர் நினைவூட்டுகிறது. என்னை மன்னிக்க வேண்டும்.

* * *

இவ்வாறு சரோஜா தன் கதையைச் சொல்லி முடித்ததும், "இல்லை சரோ! நான்தான் உன்னிடம் மன்னிப்புக் கோர வேண்டும். ஏனெனில், என்னால்தானே இந்தக் கதையை நீ இப்பொழுது கூறும்படி நேர்ந்தது?" என்றாள் சசிலா.

"ஒருவரிடம் ஒருவர் ஏன் மன்னிப்புக் கோர வேண்டும்? எல்லாம் நல்லதுக்குத் தான்! சரோ சொன்னது நம் எல்லோருக்கும் ஒரு படிப்பினையாக இருக்கட்டும்" என்றாள் சசிலா.

இதற்குள் சரோஜாவின் அம்மா அங்கே வந்து, "வாங்கோ, அம்மா! தொட்டில் போட்டாகிவிட்டது" என்று அவர்களை உள்ளே அழைத்துச் சென்றாள். அடுத்த நிமிஷம் உள்ளேயிருந்து பாட்டுக் கிளம்பி வானில் பரவிற்று.

அவளுக்கே தெரியாது. அருகில் யாரோ நிற்பதுபோன்ற உணர்ச்சி தோன்றவே, அவள் தன் நினைவு கலைந்து பார்த்தாள். அதை ஊர்ஜிதம் செய்வதுபோல் சில சொற்கள் அவள் காதில் விழுந்தன.

"சகுந்தலை துஷ்யந்தனை எண்ணிக் கொண்டிருக்கிறாளா?"

ரமா அடிபட்ட சிங்கம்போல் எழுந்தாள். அவள் பெயர் சகுந்தலை இல்லைதான்; ஆனால் அவர் கூறியதன் உட்கருத்தை அவள் அறியாமலில்லை. ஏற்கெனவே மன அமைதி இழந்திருந்த அவளுக்கு இச் சொற்கள் மிகவும் வருத்தத்தை அளித்தன.

"என்னை ஓரேயடியாக எல்லோரும் சேர்ந்து கொன்றுவிடுவதுதானே?" என்று அவள் கூவினாள்.

அவள் குரலையும் அதில் தொனித்த கோபத்தையும் அருவருப்பையும் கேட்டு அவர் திடுக்கிட்டார். அவள் ஏன் அப்படி திடீரென்று கோபம் கொள்ள வேண்டும் என்று அவருக்குப் புரியவில்லை. இந்த குணத்தை அவர் அன்றுதான் அவளிடம் கண்டார். "என்ன அம்மா! என்ன சங்கதி?" என்று பரிவுடன் கேட்டார்.

"எனக்கு ஒரு கேடும் இல்லை; உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!" என்று ரமா மீண்டும் சீறினாள். அவர் மேலே ஒன்றும் பேசவில்லை.

3

அடுத்த நாள் காலை எல்லோரும் சாப்பிடும்போது அவர் எப்போதும் போல் வேடிக்கையாக, "மகாராணியின் கோபம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

பதில் ரமாவினிடமிருந்து வரவில்லை. அவருடைய சித்தி, "கோபத்திற்கென்ன குறைச்சல்? சொன்னதைக் கேட்பதுதான் சுபாவத்தில் இல்லையே! கோபம் மாத்திரம் மூக்குக்கு மேல் வந்துவிடும்" என்று கூறியபடியே பரிமாறிக் கொண்டிருந்தாள். அவர் தம் தங்கையைப் பார்த்தார். அவளுடைய விழிக்கடையில் இரு கண்ணீர்த் துளிகள் தேங்கி நின்றன.


இதன் விளைவு விபரீதமாகிவிட்டது. தனக்கு வேண்டுமென்றே வசவு வாங்கித் தரவே அண்ணா பேசியதாக ரமா எண்ணிவிட்டாள். அவர் கேலியாகக் கேட்டதனால்தானே அம்மா அப்படியெல்லாம் பேசினாள்? தன்மீது உண்மையான அன்பு இருந்தால், தன் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கிறது என்பதை அவர் அறிந்திருந்தால், அப்படிக் கேட்டிருப்பாரா?—தன் செயலை எண்ணிப் பார்க்க அவள் தயாராக இல்லை. அதிலிருந்து ரமா தன் அண்ணாவோடு பேசுவதையே நிறுத்தி விட்டாள்.

ரமாவின் கலியாணம் நெருங்கிவிட்டது. அவளுடைய அண்ணா பன்முறை அவளுடன் பேசி அவள் மனத்தை அறிய முயன்றார். ஆனால் அவள் அவருடன் பேசவே தயாராக இல்லை. அவர் தன்னை நோக்கி வரும்போதே ரமா வேறு பக்கம் ஓடிவிடுவாள். அவளுடைய போக்கைக் கண்டு அவர் மனம் சலித்தது. அவளையணுகிப் பேச முயற்சி செய்வதையே நிறுத்திக் கொண்டார். ரமாவுக்கு விவாகம் நடந்து அவள் புக்ககம் சென்ற பிறகும் நிலைமை மாறவில்லை.

இந்த நிலையில்தான் அவர் என்னைப் பார்க்க வந்தார். அன்று தாமாக ரமாவின் புக்ககத்துக்குச் சென்று அவளைத் தம்முடன் வரும்படி கேட்டுக் கொண்டாராம்; ரமா மறுத்து விட்டாளாம்.

அவர் என்னை வந்து பார்த்துவிட்டுப் போன பிறகு என் உள்ளம் ஒரு நிலையில் இல்லை. இதை உங்களிடம் கூறுவதில் என்ன வெட்கம்? உங்களில் முக்கால் வாசிப் பேர் இவ்வனுபவம் பெற்றவர்கள்

உபதேசம்!



பிழை திருத்தம்

டிசம்பர் 25உ "கல்கி"யில் வெளியான ஜாபிதாவில் பின்வரும் இரண்டு அன்பர்களின் விலாசத்தில் பிழை விழுந்திருக்கிறது. சரியான விலாசம் வருமாறு:—

ஸ்ரீ பி. கல்யாணசுந்தரம், ஆடிட்டர், வைத்தியராமய்யர் தெரு, தியாகராஜநகர்	25	0	0
ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணன், வைத்தியராமய்யர் தெரு, தியாகராஜநகர்	5	0	0

மிகவும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. நான் அவருடைய கடைசி நாட்களைப் பற்றிய விவரங்களை என் அத்தை மூலமாக அறிந்தேன்.

அவருக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அவள் பெயர் ரமா. அவள் மீது அவருக்கு உயிர். சிறிய தந்தையின் புதல்வியாக இருந்த போதிலும் அவர் அவளைத் தன் உடன் பிறந்த சகோதரியாகவே பாவித்து வந்தார். எந்தச் சமாசாரத்தையும் உடனே விரைந்தோடிச் சென்று அவளிடம் சொல்லாமலிருக்க மாட்டார். தம் துயரங்களையும் அவளிடம் சொல்லி ஆறுதல் பெறுவார். வெளியே சென்று திரும்பி வரும்போது அவளைப் பெயர் கொண்டழைத்த வண்ணம் உள்ளே பிரவேசித்து அவள் கையில் புஷ்பமோ, தின்பண்டமோ ஏதாவது கொடுக்கத் தவற மாட்டார். அவள் முகம் மலருவதைக் காண அவர் உள்ளமும் மலரும்.

தன் சொந்த சகோதரனைவிட அதிகமாக நேசிக்கும் அவர்மேல் அவளுக்கு அன்பும் மதிப்பும் இருந்தது. அவரைத் தமையனாகப் பெற்ற தன்னைப் பாக்கியசாலி என்று அவளும் கருதி வந்தாள். சகோதர சகோதரிகள் உறவில் எத்தகைய அன்பும், ஆதரவும் அன்னியோன்ய பாவமும், இருக்கும் என்பதை இவ்விருவரிடமிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

அவளுக்கு விவாகம் செய்ய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. ஒருநாள் மாலையில் கோவிலுக்குப் போனவள் திரும்பி வருவதற்கு வழக்கத்தைவிட நேரமாகிவிட்டது. இருள் கவிந்துகொண்டு வந்தது. வீட்டில் அவளுடைய அம்மாவும், பெரியம்மாவும் அவளைப் பற்றியே நினைத்துக் கவலைப் பட்டுக்கொண் டிருந்தார்கள். அவர்கள் உள்ளத்தில் அச்சம் படிப்படியாக அதிகரித்துக்கொண்டே சென்றது. ரொம்ப நாழிகைக்குப் பிறகு அவள் வந்ததைக் கண்டதும் அவளுடைய அம்மாவின் அச்சம் கோபமாக மாறிவிட்டது. "எங்கே போய் விட்டாய்?" என்று அதட்டிக் கேட்டாள்.

"நான் கோவிலுக்குத்தானே அம்மா போனேன்? அங்கே கோமதியைப் பார்த்தேன்; பேசிக்கொண்டிருந்ததால்......"

"நீயும், உன் கோமதியும்! வயது ஆகிற்றே தவிரக் கொஞ்சங்கூடத் தெரிய வில்லை; சொன்னாலும் கேட்பதில்லை."

அவள் அம்மாவின் கோபக் குரல் அவளுடைய அமைதியைக் கெடுத்து விட்டது. அவளும் வெகுண்டு, "நான் என்ன அம்மா செய்து விட்டேன்? இனிமேல் கோவிலுக்கே போகிறதில்லை!" என்றாள்.

"ஆமாம், நல்லதைச் சொன்னால் கோபம் வராதா, என்ன? கல்யாணம் ஆகப்போகிறது; இப்படியெல்லாம் நடந்து கொண்டால் நாலு பேர் நாலுவிதமாகச் சொல்ல மாட்டார்களா? இதையெல்லாம் யோசனை செய்ய வேண்டாமா?......"

ரமா கோபத்துடன், "சொன்னால் சொல்லட்டுமே!" என்று முணு முணுத்துக் கொண்டே தன் அறையை நோக்கிச் சென்று விட்டாள்.

மகிழ்ச்சியோடு வீடு திரும்பிய ரமாவினால் இவ் வசைச் சொற்களைத் தாங்க முடியவில்லை. சின்ன சம்பவம்தான் இது. பெண்ணைக் கடிந்து கொள்ளத் தாயாருக்கு உரிமை யுண்டு. ஆனால் சஞ்சலத் திரை அறிவை மறைத்து விட்டது. உலகில் எல்லாரும் தனக்குச் சத்ரு என்று ரமாவின் மனத்தில் ஓர் எண்ணம் புகுந்துவிட்டது. வியாகுலம் நிறைந்த மனத்தோடு உட்கார்ந்திருந்த அவள் காதில் அவர் வரும் காலடியோசை கேட்டது. அவரிடம் தன் துயரைக் கூறிக் கொள்ளலாம் என்று அவள் எண்ணினாள். ஆனால் அவள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை.

காரியாலயத்திலிருந்து திரும்பி வந்தவுடனே அவர் அவளைக் கூப்பிடாமல் தம் அறைக்குச் செல்லமாட்டார். அன்று அவருக்கு வேலைத் தொந்தரவு அதிகம். வீட்டிற்குத் திரும்பும்போதே தலைவலி அதிகமாயிருந்ததால் வழக்கத்திற்கு மாறாக அவர் தம் அறைக்குச் சென்று கண்களை மூடிய வண்ணம் படுத்துக் கொண்டார். தன் அறையில் அவரை எதிர்பார்த்திருந்த ரமாவின் மனம் துணுக்குற்றது. ஒரு மணி நேரமாகியும் அவர் வராமற் போகவே அவளது சஞ்சலமும், மனச் சலிப்பும் இன்னும் அதிகமாயிற்று. எவ்வளவு நேரம் அவள் அப்படித் தன் சிந்தனைப் போர்வையில் புகுந்து கொண்டிருந்தாளோ, அது

உணர்ச்சியைக் கண்டேன். வளர்ந்து செல்லும் சிறு எறும்பின் அசைவிலும், குதித்தோடி விளையாடும் அணில் போன்ற பிராணிகளின் வாழ்க்கையிலும் நான் அன்று வரையில் காணாததைக் கண்டேன். என்றும் போல் அன்று மாலையும் என் அறையில் பாடிக் கொண்டிருந்தேன். அப்பா ரொம்ப வேகமாக வீட்டிற்குள் பிரவேசித்தார். அவர் கையில் ஏதோ ஒரு கடிதம் இருந்தது.

அம்மா ஆவலுடன் "சம்பந்தி அகத்திலிருந்துதானே கடிதம்?" என்று கேட்டாள்.

அப்பா கொஞ்சம் இழுத்தாற்போல் "ஆமாம்" என்றார்.

அப்பாவின் முகத் தோற்றத்தைக் கவனிக்காமலே "என்ன விஷயம்?" என்று



கேட்டாள் அம்மா. அதையே நோக்கிக் கொண்டிருந்த எனக்கு ஏதோ ஒரு சொல்ல முடியாத உணர்ச்சி தோன்றி நெஞ்சை அடைப்பது போலிருந்தது. அப்பாவின் மௌனம் என் கவலையை இன்னும் அதிகரிக்கச் செய்தது. அப்பா ஒன்றும் பேசாமல் கடிதத்தை என்னிடம் நீட்டினார். ஒன்றும் புரியாமல் அதைக் கையில் வாங்கிப் படித்தேன்; எல்லாம் புரிந்து விட்டது. கடிதம் அங்கிருந்து வந்ததுதான்; முக்கியமான செய்தியே. ஆனால் நாங்கள் எதிர்பார்த்த விதமானதல்ல. இச்செய்தி தெரிந்ததும் இடி விழுந்தமாதிரி இருந்தது எங்களுக்கு. ஆம், 'அவர்', எனக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், ஒருவார ஜுரத்தில் இறந்து விட்டதாக எழுதப்பட்டிருந்தது அத் தந்தியில்.

என் வாழ்க்கைச் சூரியன் உதிப்பதற்குள் அஸ்தமித்து விட்டதாகவே நான் எண்ணினேன். விதி செய்த வஞ்சகத்தை என்னால் பல நாட்களாகியும் மறக்க முடியவில்லை. என் துரதிருஷ்டம்தான் 'அவ'ரைத் தொலைத்து விட்டது என்ற எண்ணம் என் உள்ளத்தில் வேரூன்றி விட்டது. அப்பா என் கவலையை அறிந்தாரோ, அறியவில்லையோ, மறுபடியும் வரன் தேடப் புறப்பட்டு விட்டார். என் வாழ்க்கையில் நேர்ந்த இச் சம்பவத்தை அறிந்த பலர் என் தந்தையின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கவில்லை. எங்கே சென்ற போதிலும் என் அதிருஷ்டஹீனத்தைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. அன்று இட ஆரோக்கியத்துடன் இருந்தவர் திடீரென்று மரணமடையக் காரணம் என்னவென்று தெரியவில்லை. ஒரு மாதத்திற்குப் பிறகுதான் எனக்கு அது தெரிந்தது.

இன்று ஒரு குழந்தைக்குத் தாயாக இருக்கும் நான், என் கணவரையன்றி வேறொருவரைப் பற்றி இவ்விதம் பேசுவது உங்களுக்கு விசித்திரமாக இருக்கும். சிலர் இதைக் கேட்டால் விபரீதமாகவும் எண்ணக் கூடும். ஆனால் அன்று என் உள்ளத்தில் ஆழமாக இடம் பெற்ற நினைவுகளை அப்படியே சொன்னால்தான் உங்களுக்கு என் மனநிலை தெரியும். இன்று என் வாழ்க்கையில் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. ஆனால் அவரைப் பற்றி இன்று எண்ணும்போது என் மனத்தில் விவரிக்க இயலாத வருத்தம் உண்டாகிறது. நான் ஏதேதோ சொல்லிக் கொண்டு போகிறேன் என்று நினைக்க வேண்டாம். அவர் மரணத்திற்கும், நான் வெறுக்கும் பெயருக்கும்

என்னைப் பார்த்ததும் என் தகப்பனார் "வா அம்மா, சரோஜா! நாளைக் காலையில் உன்னைப் பார்ப்பதற்காக மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள். நீ 'டிரஸ்' பண்ணிக்கொண்டு தயாராயிரு!" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. நான் சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிவிட்டுக் கூடத்துக்கு வந்துவிட்டேன்.

அடுத்த நாள் வெகு சீக்கிரமாகவே அம்மா என்னை எழுப்பிவிட்டாள். என்றும் உதிக்கும் சூரியனின் ஒளி அன்று என் கண்களுக்கு அதிகப் பிரகாசமாக இருப்பதாகத் தோன்றியது. மனத்தில் பொங்கும் உவகை என் காரியங்களைத் துரிதமாகச் செய்ய என்னைத் தூண்டிற்று. பட்சண வகைகளின் வாசனை சமையலறையிலிருந்து 'கம்'மென்று வந்ததும் 'பெண் பார்க்க வருவதற்கா இவ்வளவு தடபுடல்! கடைசியில் வருகிறவர்கள் என்ன சொல்லப் போகிறார்களோ?' என்று எண்ணியது என் உள்ளம்.

மணி எட்டு அடித்தது. ஒரு நடுத்தர வயதான தம்பதிகளும், ஒரு யுவனும் வந்து விட்டார்கள். அச்சமயம் வரையில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த என் மனம் அந்த நிமிஷத்தில் பெட்டிப் பாம்புபோல் அடங்கி விட்டது. நான் இருந்த அறையிலிருந்து வெளியே கால் எடுத்து வைக்கவும் முடியவில்லை. அவ்வளவு நடுக்கமெடுத்தது எனக்கு.

அப்பா என்னை அழைத்ததும் எப்படியோ வெளியே சென்று, அங்கே உட்கார்ந்திருப்பவர்களுக்கு நமஸ்காரம் செய்தேன். நமஸ்கரிக்கும்போது 'அவ'ரைக் கடைக் கண்ணால் பார்த்தேன். நன்றாக வாரி விடப்பட்ட 'கிராப்'புடன் மூக்குக் கண்ணாடி அணிந்து, கழுத்தை விசிறி மடிப்பு அங்கவஸ்திரம் அலங்கரிக்க அமர்ந்திருக்கும் அவரை என் கண்கள் கண்டன. பிறகு அவர்கள் விருப்பப்படி வீணையுடன் ஒரு பாட்டுப் பாடினேன். உள்ளத்திலுள்ள ஆவலையும், மனத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்து என்னைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் சிறு அச்சத்தையும் என் பாடலின் மூலம் நான் வெளியிட்டேன்.

2

அன்றிரவு வெகு நேரமாகியும் எனக்கு உறக்கம் கொள்ளவில்லை. கண் மூடும்போதெல்லாம் எத்தனையோ எண்ணங்கள் தோன்றித் தூக்கத்தைக் கலைக்கும். 'அவ'ரைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தேன் என்பதல்ல; பொதுவாக மண வாழ்க்கையில் அனுபவிக்கப் போகும் இன்ப துன்பங்களைச் சுற்றியே சென்று கொண்டிருந்தது என் நினைவு. "இன்னும் மூன்று மாதங்களில் விவாகத்தை நடத்தி விடலாம்" என்று என் அப்பா கூறியது என் காதுகளில் விழுந்ததுதான், நான் தூங்காமல் மனத்தைப் பலவித எண்ணங்களால் குழப்பிக் கொண்டிருந்ததற்குக் காரணம்.

மூன்று மாதம்! நாளுக்கு நாள் நிமிஷத்திற்கு நிமிஷம் என் வாழ்க்கைப் படகு முன்னேறிக் கொண்டிருந்தது. தினமும் இன்ப எண்ணங்கள் என் சிந்தனைக் கோட்டையை இடை விடாமல் முற்றுகை யிட்டு வந்தன. என் காரியங்கள் எல்லாவற்றிலும் என்னுடைய இதய கீதம் பிரதிபலித்தது. மனம் மகிழும்படியான மலர்களிடத்தும் நான் ஆனந்த



அந்தப் பெயர்

வி. என். சதாசிவராவ்

அன்று விடியற்காலம் முதல் டாக்டர் ராமச்சந்திரன் வீட்டில் மங்கள வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. இரண்டு மூன்று நாட்களாகவே அவர் வீட்டுச் சமையலறையிலிருந்து பட்சணங்களின் நறுமணம் காற்றுடன் கலந்து வந்துகொண்டிருந்தது. அவருடைய பங்களாவைச் சேர்ந்த பெரிய தோட்டத்தில் பல மேஜைகளும், நாற்காலிகளும் போட்டு வைக்கப்பட்டிருந்தன. வீட்டிற்குள்ளும் பலவித ஆடம்பரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காலையிலிருந்தே விருந்தினரும், உறவினரும் வந்து கொண்டே இருந்தனர்.

டாக்டர் ராமச்சந்திரன் மிகவும் செல்வாக்குடையவர். வைத்தியத் தொழிலில் பிரசித்தி பெற்றவர். மிகவும் புகழ்பெற்ற வைத்தியர்கள்கூடத் தங்களுக்குச் சந்தேகம் தோன்றும்போதெல்லாம் அவரை ஆலோசனைக்கு அழைப்பது வழக்கம். அவருக்குப் புகழோடு பணமும் தடையின்றி வந்து குவிந்தது.

சரோஜா டாக்டர் ராமச்சந்திரனின் புதல்வி. நான்கு பிள்ளைகளிடையே பிறந்த ஒரே பெண். அவளுடைய தந்தை அவளைத் தம் கண்ணின் கருமணிக்கும் மேலாகக் காத்து வந்தார். அவளுடைய மனம் புண்படும்படியாக அவர் ஒரு நாளும் எக்காரியமும் செய்தது கிடையாது. தன் தந்தையின் அன்பைக் காணச் சரோஜாவுக்கே வியப்பாயிருந்தது. அவளுடைய சகோதரர்களும் சில சமயங்களில் அவளை "அப்பா பெண்" என்றும், "அப்பாவின் செல்வம்" என்றும் பரிகாசம் செய்தார்கள்.

அவளுக்குக் கலியாணமாகி மூன்று ஆண்டுகளாகியிருந்தன. பிறகுதான் அவளுடைய தாம்பத்ய வாழ்வை உய்விக்க ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தை நாமகரணத்தின் நிமித்தமாகவே அன்று அவள் வீட்டில் அவ்வளவு 'தடபுடல்'.

"வா, வசந்தா! வா, கமலா! கலா எங்கே?" என்று வந்தவர் ஒவ்வொருவரையும் வரவேற்று, வராதவர்களைப் பற்றி விசாரித்த வண்ணமாகவே இருந்தாள் சரோஜா. சிறிது நேரம் இளம் பெண்களுக்கே உரிய பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒருத்தி "குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப் போகிறாய், சரோ?" என்று கேட்டாள்.

"இதென்ன கேள்வி! பாட்டியின் பெயர் தான்!" என்று அப்போதுதான் வந்த சரோவின் அத்தை சொன்னாள்.

குழந்தைக்குப் பெயர் வைக்கும் பிரச்னை தான் அன்று காலையிலிருந்து சரோஜாவின் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தது. அத்தையும் தன் தீர்ப்புத்தான் முடிவானது என்று எல்லோரும் நினைக்கும்படி கூறி விட்டு அவ்விடம் விட்டகன்றாள். பிறகு சரோஜாவின் சிநேகிதி ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு பெயரைக் கூறத் தொடங்கினாள்.

"நிர்மலா" என்றாள் ஒருத்தி.

"சுசரிதா" என்றாள் இன்னொருத்தி.

இப்படி எத்தனையோ பெயர்களை எல்லோரும் சொன்னார்கள். அதுவரையில் பேசாமலிருந்த சுசீலா, "நான் ஒரு பெயர் சொல்லுகிறேன். பண்டை இலக்கியத்திற்கும் புராணத்திற்கும் தற்கால நாகரிகத்திற்கும் ஏற்ற பெயர் அது. அதுதான் ரமா!" என்றாள்.

"ஐயோ, வேண்டாம் சுசீலா! அந்தப் பெயர் மட்டும் வேண்டாம், சுசீலா!" என்று கூறினாள் சரோஜா.

அவள் ஆவேசம் வந்ததுபோல் அவ்வாறு சொன்னபோது அவள் முகம் இரத்தமிழந்து வெளிறிப் போனதைக் கண்டு அவளுடைய சிநேகிதிகள் பயந்துவிட்டார்கள். சில நிமிஷங்கள் வரையில் யாரும் ஒன்றும் பேசவில்லை.

"எல்லோரும் என்னை மன்னித்துவிடுங்கள், சுசீலா! அந்தப் பெயரைச் சொன்னதும் என் நினைவு பழைய நாட்களின் இருள் நிறைந்த ஒரு பகுதிக்குச் சென்று விட்டது. அதைச் சொன்னால்தான் என் மனநிலை உங்களுக்கெல்லாம் புரியும்" என்று கூறிவிட்டுச் சரோஜா சொல்லத் தொடங்கினாள்:

* * *

அப்பொழுது எனக்குப் பதினாறு வயது இருக்கும். வழக்கம்போல் கூடத்தில் உட்கார்ந்து வீணை வாசித்துக் கொண்டிருந்தேன்.

"அம்மா, சரோஜா!" என்று என் தகப்பனார் அன்போடு அழைக்கும் குரல் கேட்டு அவருடைய அறைக்குச் சென்றேன்.

கிறதா? அவளை எழுப்பிச் சாப்பிட எனக்கு விருப்பம் இல்லை. என்ன செய்வதென்று யோசித்தேன். ஒரு வழி தோன்றியது. எழுந்தேன். டார்ச் விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டேன். அடுத்த அறைக்குப் போனேன். ஒரு மூலையில் ஒரு மண் குடம் இருந்தது. அதில் தண்ணீர் நிறைய இருந்தது. காலியா யிருக்கும் வயிற்றை ஏதாவது ஒன்றைக்கொண்டு நிரப்ப வேண்டியதுதானே! ஒரு டம்ளரில் நீரை மொண்டு வாயருகே கொண்டு போனேன். திடீரென்று ஒரு மென் கரம் என் கையைப் பற்றியது. 'டார்ச்'சை அடித்துப் பார்த்தேன்—சாமளா!—வேறு யாருமல்ல.

என் அருகே உட்கார்ந்து, அன்புடன் என் கழுத்தைக் கட்டிய வண்ணம், "வேண்டாம், வைத்துவிடுங்கள்!" என்றாள். விளக்கு வெளிச்சத்தில் அவளுடைய முகத்தைப் பார்த்தேன். கன்னம் வீங்கிச் சிவந்திருந்தது. என் கை விரல் தழும்புகள் தெரிந்தன. நான் திடுக்கிட்டுப் போய், "அடாடா, இவ்வளவு பலமாகவா அடித்து விட்டோம்!" என்று பச்சாதாபப்பட்டேன்.

அவள் என் கையைப் பற்றிக்கொண்டு, "வாருங்கள், சாப்பிடுவோம்!" என்றாள்.

ஒரு நிமிஷத்தில் எல்லா வேதனைகளும் கவலைகளும் என்னை விட்டு அகன்றன. அவளுடைய இதமொழிகள் எனக்கு புதிதாக ஒருவகை உற்சாகத்தைக் கொடுத்தன. வாழ்க்கை என்னும் பாலைவனத்தைக் கடக்க அவளுடைய அன்பு ஒரு ஜீவ பூமியாகத் தோன்றியது.


"நீ சொன்னதில் உண்மை இருக்கிறது" என்றேன் நான் சாமளாவை நோக்கி.

சாமளா வியப்புடன் "எது உண்மை? நான் என்ன சொன்னேன்?" என்று கேட்டாள்.

"நம்முடைய பிழைப்பு கூலிப் பிழைப்பு அல்ல; அதைவிடக் கேடுகெட்ட பிழைப்பு. அதில் சந்தேகமே இல்லை" என்றேன் நான்.

சாமளா சிரித்துக்கொண்டே "நம்முடைய பிழைப்பு எப்படி இருந்தால் என்ன? நாம் இரண்டு பேரும் மனம் ஒத்து வாழ்ந்தால் அதுவே கோகுல்வாசப் பிழைப்பாகிவிடுமே!" என்றாள்.

ஓரளவு அது உண்மைதான்.



சென்ற மாதம் ஒன்பதாம் தேதி யன்று திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த கடையநல்லூர் பாரதி சங்கத்தார், ஒரு தமிழ் விழா சிறப்பாக நடத்தினார்கள். அந்த விழாவில் ரஸிகமணி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களைக் கொண்டு 'கல்கி' ஆசிரியரின் படத்தைத் திறந்துவைக்கச் செய்தார்கள். மேற்படி விழாவுக்குத் திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் திரு ஆதிமூலம் அவர்கள் தலைமை வகித்தார்கள். கவர்னர் ஜெனரல் ராஜாஜி, திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் முதலியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பி யிருந்தார்கள். விழாவுக்குத் தலைமை வகித்த திரு ஆதிமூலமும் ரஸிகமணி ஸ்ரீ டி. கே. சி. அவர்களும் பாரதி சங்கத்தார் புடைசூழ அமர்ந்திருப்பதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

அந்தக் கூலிக்காரன் ஒரு வாரம் வரை க்ஷவரம் செய்யாமல் முகத்தில் தாடி வளர்த்துக்கொண்டிருந்தாலும் கூட, அவனைப் பார்த்து, "ஏனப்பா, இப்படி இருக்கிறாய்? க்ஷவரம் செய்து கொள்ளக் கூடாதா?" என்று யாரும் கேட்கப்போவதில்லை. ஆனால், நானோ இரண்டு நாளைக்கொரு தடவை அவசியம் க்ஷவரம் செய்து கொண்டாக வேண்டும். இல்லாவிட்டால், எல்லோரும் என்னைப் பார்த்து, "ஸார், என்ன உங்களுக்கு உடம்பு?" என்று கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

அந்தக் கூலிக்காரன் வெட்ட வெளியிலே குடிசை போட்டுக் கொண்டு ஆனந்தமாக வாழ்கிறான். நானும் அம்மாதிரி வாழ ஆசைப்படுகிறேன். ஆனால் முடியுமா? முப்பத்தைந்து ரூபாய் கொட்டிக் கொடுத்து விட்டு, நாற்றம் பிடித்த ஒரு சந்து வீட்டில் நான் குடியிருந்தாக வேண்டியதாக இருக்கிறது. எதற்கு? என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு!

திடீரென்று ஏதாவது ஒரு சினிமாப் படம் வந்து தொலைகிறது. நண்பர்கள் எல்லோரும் பிரமாதமாக அதைப் பற்றிப் புகழ்கிறார்கள். "ஸார், 'காட்டிய மாதை'ப் பார்த்தீர்களா?" என்று கேட்கிறார் ஒருவர். "இல்லையே!" என்று சொல்லுகிறேன் குனிந்த தலையுடன். "அடாடா, அவசியம் பார்க்க வேண்டும் ஸார்! கட்டாயம் பார்க்க வேண்டும் ஸார்! ஊரெல்லாம் அதைப் பற்றியே பேச்சாக இருக்கிறது; இன்னுமா அதைப் பார்க்காமலிருக்கிறீர்கள்?" என்று கேட்கிறார். எனக்கு நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போல இருக்கும். உடனே எங்காவது கடனோ உடனோ வாங்கிக் கொண்டு போய் அதைப் பார்ப்பேன்.

ஆம், மற்றவர்களுக்காக நான் சினிமாவுக்குப் போகிறேன்; மற்றவர்களுக்காகக் க்ஷவரம் செய்து கொள்கிறேன்; மற்றவர்களுக்காக முப்பத்தைந்து ரூபாய் வாடகை கொடுத்து எலிப் பொந்தில் குடியிருக்கிறேன். என் கையில் பணம் இருக்கிறதோ இல்லையோ, வீட்டில் அரிசி இருக்கிறதோ இல்லையோ — இந்த டம்ப வாழ்க்கையை நடத்தியே ஆக வேண்டும் — என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக!

என் வாழ்க்கையில் உள்ள கோளாறு இதுதான்; கண்டுபிடித்துவிட்டேன்.

• • •

பசி வயிற்றைக் கிள்ளியது. மனதில் என்ன கவலை இருந்தாலும் வயிறு கேட்

சாலையில் உட்கார்ந்தேன். தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு வாழ்க்கையை மீண்டும் ஆராய்ந்தேன். என் வாழ்க்கையில் உள்ள கோளாறு என்ன வென்பதைச் சிந்தித்துப் பார்த்தேன்.

திடீரென்று எங்கிருந்தோ வேய்ங்குழல் நாதம் கேட்டது.

காற்றுக்கூட உள்ளே புகுந்து வரமுடியாத அந்த இருண்ட வீட்டுக்குள்ளே அந்தக் குழலோசை எப்படியோ புகுந்து வந்து என் செவியிலும் இதயத்திலும் அமுதத்தைக் கொட்டியது.

கட்டுண்ட நாகம்போல அதில் மெய்ம் மறந்து நின்றேன்.

“ஆஹா! என்ன இனிமை! என்ன வாசிப்பு!” என்று மனதுக்குள்ளாகப் புகழ்ந்தேன். பாலகோபாலனே வந்து வேணுகானம் செய்கிறானோ என்றுகூட எனக்குச் சந்தேகமா யிருந்தது. ஆனால் அவன் கோபாலன் அல்ல, கொத்து வேலைக்கார மூத்துக் கருப்பன்தான் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இந் நேரத்திலே எவ்வளவு ஆனந்தமாக அவன் குழல் வாசிக்கிறான்!

ஒரு கூலிக்காரன்!

ஆம், அவன் ஒரு கூலிக்காரன். தினம் கொத்து வேலை செய்து இரண்டோ இரண்டரையோ சம்பாதித்து வயிறு வளர்ப்பவன்.

நல்லெண்ணெய் விலையும் கத்தரிக்காய் விலையும் ஒன்றுக்கு நான்காகி என்னுடைய கண் விழிகள் பிதுங்கும்போது, அவன்—அந்தக் கூலிக்காரன்-ஆனந்தமாகப் புல்லாங் குழல் வாசிக்க எப்படி முடிகிறது? விளங் காத ஒரு புதிராக, அவிழ்க்க முடியாத ஒரு சிக்கலாக இருந்தது.

என் வீட்டுக்கு எதிர்த்தாற்போல் உள்ள ஒரு சிறு குடிசையில்தான் அவன் இருக் கிறான். எவ்வளவோ காலமாக அங்கே இருக்கிறான். ஆனால், அவனைப் பற்றியோ அவனுடைய வாழ்க்கையைப் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது—தெரிந்து கொள்ளவும் முயன்றதில்லை.

இப்போது நினைத்துப் பார்த்தேன். அவ னுடைய வாழ்க்கை முழுவதையும் தத்ரூப மாக என் கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தேன்.


ஒரு கூலி வேலைக்காரன் வாழ்க்கையில் அவ்வளவு சந்தோஷமாக இருக்கிறான். ஆனால், நூற்றைம்பது ரூபாய் சம்பளம் வாங்கும் ‘நான்கெஜட்டட் ஆபீஸ’ராகிய நான், வாழ்க்கையில் சதா கஷ்டத்தையே அனுபவிப்பதற்குக் காரணம் என்ன?

வெகு நேரம் யோசித்துப் பார்த்தேன். ஓ! விளங்குகிறது! விளங்குகிறது!

அவன் கூலிக்காரனாகப் பிறந்து விட்டான். ஆனால், நானோ ‘மீடில் கிளாஸ்’ என்று வெகு டம்பமாகச் சொல்லப்படும் நடுத்தர வகுப்பிலே பிறந்துவிட்டேன்!

எனக்கு இல்லாத பல சௌகரியங்கள் அவனுக்கு இருக்கின்றன.

ஆச்சரியம் இல்லை!



அவளுடைய பரிகாசம் என்னுடைய கோபத்தையும் ஆத்திரத்தையும் இன்னும் ஒரு மடங்கு அதிகமாக்கியது.

"என்ன? என்ன சொன்னாய்?" என்று அதட்டிக் கேட்டேன்.

அவள் தன் முகத்தை அந்தப் பக்கமாகத் திருப்பிக்கொண்டு "என்ன பிழைப்பு இது, கூலிப் பிழைப்பு!" என்றாள்.

அவ்வளவுதான்; 'பட்' டென்று அவளுடைய கன்னத்தில் அறைந்து விட்டு, திரும்பிக் கூடப் பார்க்காமல் வெளியே சென்றேன்.

• • •

கூலிப் பிழைப்பு!—எவ்வளவு கேவலம்! என் மனைவிகூட என்னை இப்படிக் கேலி செய்யும்படியாக அல்லவா ஆகிவிட்டது!

அவளுக்காகத்தானே இவ்வளவு பாடு படுகிறேன்? அவளைச் சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தானே இரவு பகலாகக் கஷ்டப்படுகிறேன்? இது ஏன் அவளுக்குத் தெரியவில்லை?

பெண்களைப்போல நன்றியறிதல் அற்றவர்களே கிடையாது. சந்தேகமே இல்லை!

ஹூம், அவளைச் சொல்லித்தான் என்ன பிரயோஜனம்? அவள்மீது குறை சொல்வதற்கு என்ன இருக்கிறது? என்னைக் கல்யாணம் செய்து அவள் கண்ட சுகம் என்ன? மற்ற பெண்களைப்போல அந்த நகை வேண்டும், இந்தப் புடவை வேண்டும், அந்த சினிமாவுக்குப் போகவேண்டும் என்று பிடிவாதம் செய்யக்கூடியவள் அல்ல. வீட்டுக்கு வேண்டிய சாமான்களையாவது நான் ஒழுங்காக வாங்கிக் கொடுக்க வேண்டாமா? அதற்குக்கூட என்னால் முடியவில்லையே!—இந்தப் பணத்திற்கு மந்திர சக்தி உண்டோ? இறகு முளைத்து எங்காவது போய்விடுமோ? மாதம் பிறந்ததும் கட்டுக்கட்டாக மொத்தம் நூற்றைம்பது ரூபாய் வாங்குகிறேன். தேதி பத்து ஆவதற்குள் ஒரு தம்பிடிகூடக் கையில் இருப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன? இந்த வாழ்க்கையில் ஏதோ ஒரு கோளாறு இருக்க வேண்டும். அது என்ன?

நடந்தேன், நடந்தேன், வேகமாக நடந்து போய்க் கொண்டே இருந்தேன்—வெறி பிடித்தவன்போல. இதயத்திலே வேதனை பொங்கிக் குமுறியது. நாற்புறமும் பார்த்தேன். கடைகளிலும், தெருக்களிலும், பஸ்களிலும் டிராம்களிலும் உள்ள மக்கள் எல்லோரும் என்னையே உற்று நோக்கு



வது போலவும் "உன் பிழைப்பு கூலிப் பிழைப்பு!", "உன் பிழைப்பு கூலிப் பிழைப்பு!" என்று என்னைக் கேலி செய்வது போலவும் இருந்தது.

வெகுநேரம் சுற்றிச் சுற்றி அலைந்தேன். கால் சலிக்க நடந்தேன்; நேரம் ஆகிக் கொண்டே வந்தது. வீட்டுக்குப் போக எனக்கு இஷ்டமே இல்லை. ஆனால் என்ன செய்வது? போய்த்தானே ஆகவேண்டும்?

திரும்பி வந்தேன். மணி பத்து இருக்கும். கதவு மூடியிருந்தது. தட்டினேன். அவளைக் காணோம். வேலைக்காரி வந்து கதவைத் திறந்துவிட்டாள். உள்ளே போய்ப் பார்த்தேன். அவள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். நானும் படுக்கையை எடுத்துப் போட்டுப் படுத்தேன்.

நானும் சாப்பிடவில்லை; அவளும் சாப்பிடவில்லை.

படுத்தேன். நன்றாகத் தூங்கிவிட்டேன். அடாடா! அப்படியே தூங்கி யிருக்கக் கூடாதா? ஏன் திடீரென்று எழுந்தேன்?

வயிறு காலியாக இருக்கும் போது தூக்கம் வருமா?

கடிகாரம் மணி பன்னிரண்டு அடித்தது. அடடா, பன்னிரண்டுதானா! இனி எங்கே தூக்கம் வரப்போகிறது? எழுந்து நாற்

கூலிப் பிழைப்பு

சபரி

அன்று மாலை நான் வீட்டுக்கு வந்த போது எனக்குக் கொஞ்சங்கூட உற்சாகமே இல்லை.

கோட்டை அவிழ்த்து ஒரு மூலையில் எறிந்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தேன்.

பதினைந்து நிமிஷம் கழிந்திருக்கும். அவளைக் காணோம்; காப்பியையும் காணோம்.

காப்பிக்குப் பதிலாக அடுப்பங்கரையிலிருந்து புகை மண்டலம் திரள் திரளாக வந்து என் கண்களில் நீர் பெருக்கியது.

ஒருவேளை அவள் சாத்விக சட்டமறுப்புச் செய்கிறாளோ?

"சாமளா!" என்று அதட்டிக் கூப்பிட்டேன்.

"ஏன்?" என்று அதற்கு இணையான அதட்டலுடன் பதில் வந்தது சமையல் அறையிலிருந்து.

"இன்னும் காப்பி போட்வில்லையா?"

"காப்பியா? காப்பி எங்கிருந்து வரும்?" என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

எனக்குக் கோபம் சண்டாளமாக வந்தது. ஆனால் அதை அடக்கிக் கொண்டேன்.

"என்ன அப்படிச் சொல்லுகிறாய்?" என்று கேட்டேன்.

"காப்பிப்பொடி கொஞ்சங்கூட இல்லை!"

இதைக் கேட்டு நான் அப்படியே திகைத்துப் போய்விட்டேன். மூர்ச்சை போட்டு விழாதது தான் பாக்கி. மாலை ஐந்து மணியானதும் எது எப்படிப் போனாலும் நான் அவசியம் காப்பி சாப்பிட்டாக வேண்டும். இல்லாவிட்டால் ஒரு வேலையும் ஓடாது.

"பக்கத்து வீட்டிலாவது கொஞ்சம் வாங்கிப் போடுகிறதுதானே?" என்று கேட்டேன்.

"பக்கத்து வீட்டில் எத்தனை தடவை தான் வாங்குவது?" என்றாள் அவள்.

'ஹூம்' என்று பெருமூச்சு விட்டு விட்டு, கன்னத்தில் கைவைத்துக் கொண்டு சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தேன். ஒரு யோசனையும் ஓடவில்லை. கடைசியில் எங்காவது வெளியே போய்விட்டு வரலாமென்று எழுந்தேன்.



செருப்பை மாட்டிக்கொண்டு இரண்டடிதான் எடுத்து வைத்திருப்பேன். அதற்குள், அவள் சமையலறையிலிருந்து 'சரே'லென்று பாய்ந்துவந்து, "எங்கே கிளம்பி விட்டீர்கள்?" என்று என்னை வழிமறித்துக் கேட்டாள்.

"ஏன்?" என்று கேட்டேன் நான் ஆத்திரத்துடன்.

"நாளைக் காலை சமைப்பதற்கு அரிசியே இல்லை"

இரண்டாவது இடி!


அதையும் நான் சமாளித்துக் கொண்டேன். — சமாளித்துத்தானே ஆகவேண்டும்!

"ஏன் நீ முன்னாலே சொல்லவில்லை?" என்று அவளை அதட்டிக் கேட்டேன்.

"முன்னாலே சொன்னாலும் பின்னாலே சொன்னாலும்—எல்லாம் ஒன்றுதானே?"

வித்து விட்டு என்னுடைய ஊர் போய்ச் சேர வேண்டும். என்னை தயவு செய்து உங்கள் தலைவியிடம் அழைத்துக் கொண்டு செல்லுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள்.

கிழவிக்கு ஒரு நொடிப் பொழுதில் எப்படி உடம்பு குணமாயிற்று என்று தோழிகள் ஆச்சரியமடைந்தனர். எப்படியாவது பானு வசிக்கும் குகைக்குள் நுழைவதற்காகத் தனக்கு நோய் என்று கிழவி பாசாங்கு செய்தாள் என்பது தோழிகளுக்குத் தெரிந்திருந்தால் அவர்கள் அப்படி ஆச்சரியப்பட்டிருக்க மாட்டார்கள்.




இது ஒரு சுவரின் ஒரு பகுதி. இதில் உள்ள செங்கல்களில் இரண்டைத் தவிர பாக்கி எல்லாம் ஒரே அளவானவை. அளவு வித்தியாசப்படும் அந்த இரண்டு செங்கல்களைக் கண்டு பிடிக்க முடியுமா?—விடை அடுத்த வாரம்.

சென்ற வாரக் கணக்குக்கு விடை 131.

தோழிகளாகிய தேவ மாதர்கள் கிழவியின் விருப்பப்படியே அவளை பானுவின் அரண்மனை மத்திய மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அந்த மணி மண்டபத்தின் மத்தியில் பானு ஒரு தங்கச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தாள். அந்தச் சிம்மாசனத்தின் எல்லாப் பக்கங்களிலும் வைரங்கள் முதலிய நவரத்தினங்களும், முத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன. ராணியைச் சுற்றிலும் இருந்த எண்ணிறந்த பல தோழிப் பெண்கள் தங்கள் தலைவிக்குச் சாமரம் வீசிக் கொண்டிருந்தனர். (தொடரும்)

அவன் கேள்வி

மகா வீரனாகிய நெப்போலியன் ஒரு சாதாரணச் சிப்பாயாக இருந்த போது, அவனுடைய பட்டாளம் ஒரு பட்டணத்து அருகே முகாம் போட்டிருந்தது. சிப்பாய்கள் வேடிக்கைகளிலும் களியாட்டங்களிலும் ஈடுபட்டு, பொழுதை உல்லாசமாகப் போக்கிக் கொண்டிருந்தார்கள். நெப்போலியன் மாத்திரம் தன் கூடாரத்தில் உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தான். அப்போது அந்தப் பட்டணத்தைச் சேர்ந்த ஒரு மாது அங்கே வந்தாள். நெப்போலியன் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பதை அவள் பார்த்தாள். அவளுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவள் நெப்போலியனை நோக்கி, "உன்னைப் போன்ற மற்ற சிப்பாய்கள் தமாஷாகப் பொழுதைப் போக்கிக்கொண்டிருக்கும் போது, நீ மாத்திரம் ஏன் இங்கே ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறாய்? நீ கோஷா ஸ்திரீயா?" என்று கேட்டாள். நெப்போலியன் பதில் ஏதுவும் சொல்லவில்லை.



பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. நெப்போலியன் இப்போது சாதாரணச் சிப்பாய் அல்ல; பிரெஞ்சு சக்கரவர்த்தி. முன்பு தங்கியிருந்த அதே பட்டணத்துக்கு அவன் வந்தான். அப்போது, முன்பு சந்தித்த அதே பெண்மணியைப் பார்க்க நேர்ந்தது. நெப்போலியன் அவளை நோக்கி, "அம்மா, என்னை ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"எப்போதோ பார்த்ததாக ஞாபகம்" என்றாள் அவள்.

"முன்பு இதே இடத்தில், ஒரு ராணுவக் கூடாரத்தில் ஒரு வாலிபன் புத்தகம் படித்துக் கொண்டிருந்தானே; தாங்கள் கூட 'நீ கோஷா ஸ்திரீயா?' என்று அவனைக் கேலி செய்தீர்களே;—அவன்தான் நான். இப்போது தெரிகிறதா?" என்றான் நெப்போலியன்.

அந்த மாது வியப்பினால் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டாள்.

நெப்போலியன் சொன்னான்: "அம்மணி, அன்று நானும் அவர்களைப் போல் பொழுது போக்கிலும் விளையாட்டிலும் ஈடுபட்டிருந்தேனானால் இப்போது இந்த நிலைமைக்கு வந்திருக்க முடியுமா?" — எம். எல். என்.

ஒரு இடத்தில் மறைவாக இருந்து இளவரசன் வருகைக்குக் காத்திருந்தாள்.

கிழவி அங்கு வந்து சேர்ந்ததற்கு மறுநாள் காலையில் இளவரசன் அறமதும், அவன் பரிவாரங்களும் இரும்புக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தனர். தன் இருப்பிடத்திற்கு அருகில் அறமத் வந்தவுடன், கிழவி ஏதோ வலி தாங்காமல் தவிப்பவள் போல் கூக்குரலிட்டாள். அந்த இடத்துக்கு யாரும் வந்ததில்லை. புதிதாக ஒரு கிழவி அங்கு இருப்பதைக் கண்ட அறமதிற்குக் கவலையும் ஆச்சரியமும் ஏற்பட்டது.




எனினும், ஒரு கிழவி கஷ்டப்படுவதைக் காண அவன் மனம் இளகிவிட்டது. அவளிடம் அனுதாபம் கொண்டான். உடனே அவளை அழைத்துக் கொண்டு தன் மனைவியிடம் சென்றான். பானு கிழவியைப் பார்த்து விட்டுத் தன் கணவனிடம் காதோடு காதாய்ச் சொன்னாள்: "அந்தக் கிழவி பாசாங்கு செய்கிறாள். அவளுக்கு எவ்வித நோய் நொடியும் இல்லை. உங்கள் இருப்பிடத்தை அறிந்து வேவு பார்ப்பதற்காக அவள் வந்திருக்கிறாள். ஆனால் அவள் செய்யும் சூழ்ச்சிகள் யாவற்றையும் தடுக்க என்னால் முடியும். அதைப்பற்றி நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். திட்டப்படி உங்கள் பிரயாணத்தைத் தொடங்குங்கள்."

மனைவியின் உறுதி மொழிகளைக் கேட்டுக் கவலை நீங்கிய அறமத் தன் தந்தையின் காட்டை நோக்கிச் சென்றான்.

அறமத் விடை பெற்றுச் சென்றவுடன் பானு அரண்மனைக்குள் வந்து தனது தோழிகளிடம் கிழவியை அன்பாக உபசரிக்கும்படி கட்டளையிட்டாள். பானுவின் தோழிகளும் தேவமாதர்கள். ஆகையால் பானு கவலையின்றிக் கிழவியை அவர்களிடம் ஒப்படைத்தாள். தோழிகள் கிழவியைப் படுக்கையில் படுக்க வைத்தனர். அவளுக்கு ஒரு மருந்தைக் கொடுத்து அதை உட்கொண்டால் எல்லாவித நோய்களும் தீர்ந்துவிடும் என்று கூறிவிட்டுச் சென்றனர். சற்று நேரம் கழித்துத் தோழிகள் கிழவியைப் பார்த்த பொழுது, அவள் "பெண்களே! என் நோய் பறந்து போய்விட்டது. இனி நான் உங்கள் ராணிக்கு நன்றி தெரி

சொன்னபடியே!



கிழவர் தலை எப்படியோ ஒரு வகையாகத் தப்பித்தது!

...அவர் திரும்பி வந்து கோபித்துக் கொண்டு...

"இனிமேல் பார்த்து ஜாக்கிரதையாக அடியுங்கள்" என்றார்.

பையன் பார்த்துத் தான் அடித்தான். அதன் பலன்???

யத்தை அறிய நான் ஆவல் கொள்ளக்கூடாது என்று என்னிடம் ஏன் வாக்குறுதி பெற வேண்டும்?''— இவ்வாறு சிந்தித்துப் பார்த்தான். கடைசியில் தனது மந்திரி கூறியது உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என முடிவு செய்தான். இந்தச் சந்தேகம் தோன்றியவுடன் அந்த மாந்திரீகக் கிழவிக்கு ரகசியமாகச் சொல்லி யனுப்பினான். மறுநாட் காலையில் அஹமத் வரவேண்டிய நாள். அவன் திரும்பிப் போகும் தினத்தன்று, அவன் திரும்ப எங்கே போய்ச் சேருகிறான் என்பதை மறைவாக இருந்து அறிந்து வரும்படி சுல்தான் அவனுக்குக் கட்டளையிட்டான்.

சுல்தானின் சொற்படி கிழவி அகமத் செல்லும் ரஸ்தாவின் ஒருபுறம் மறைவாக நின்று கவனித்தான். அகமதும் அவனுடைய குதிரைப் படையினரும் புறப்பட்டு தன்னைத் தாண்டிச் சென்ற பிறகு அவர்கள் செல்லும் திசையையே கவனித்துக் கொண்டிருந்தான். வெகு தூரத்திலே சில பாறைகளுக்கு அருகில் அவர்கள் மறைந்தது அவனுக்குக் தென்பட்டது. உடனே தள்ளாடிக் கொண்டு அந்தப் பாறையை நோக்கிச் சென்றான். அந்தப் பாறையில் ஏதாவது குகை இருக்க வேண்டுமென்றும், அதனுள் தேவமாதர்கள் இருக்க வேண்டுமென்றும் நினைத்தான். அந்தப் பாறையருகில் சென்று எவ்வளவோ தேடியும் அங்கே குகையோ, அதற்குள் செல்லும் வழியோ இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், அந்தக் குகைகள் உள்ள இரும்புக் கதவு பானு விரும்பும் ஆண்களுடைய கண்ணுக்குத் தென்படுமே யொழிய பெண்கள் கண்ணுக்குத் தெரியவே தெரியாது.

இளவரசனின் இருப்பிடத்தை அறிய வகை தெரியாமல் கிழவி மீண்டும் சுல்தானிடம் வந்தான். வந்ததும் வணக்கம் செலுத்திவிட்டு, "அரசே! எவ்வளவோ முயற்சித்தும் இளவரசர் மறைந்த இடம் தெரியவில்லை. அவர்கள் வெகு வேகமாய்ச் சென்று ஒரு பாறையின் அருகில் மறைந்து போயினர். நானும் அந்தப் பாறைக்குச் சென்றேன். அங்கே நாலாபுறமும் தேடிப் பார்த்தேன். ஆனால் எங்கும் ஒரு சிறிய இடைவெளி கூடத் தெரியவில்லை. தாங்கள் தயவு செய்து இன்னும் சற்று அவகாசம் அளித்தால் அந்தப் பாறைக்குள் நுழைவதற்கு வழி கண்டு பிடித்துவிடுகிறேன்'' என்று கூறினான்.

இதைக் கேட்ட சுல்தான், "கிழவி! உன் சாமர்த்தியத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆகையால் மறுபடியும் போய் வா. நீ போன காரியம் கைகூடினால் உனக்குத் தக்க வெகுமதி அளிக்கிறேன்'' என்று உற்சாகப்படுத்தி அவனை அனுப்பினான். அவன் இது வரையில் கஷ்டப்பட்டதற்கு ஒரு விலையுயர்ந்த வைரத்தைப் பரிசாக அளித்தான். மந்திரவாதிக் கிழவிக்கு அஹமத் இளவரசன் ஒவ்வொரு மாதமும் தன் தந்தையைப் பார்க்க வருகிறான் என்பது தெரியும். ஆகையினால், அவன் வருவதற்கு இரண்டு நாளைக்கு முன்னமே அவன் பாறை அருகில்



மாய மாளிகை



6. அது என்ன இரகசியம்?

அஹமத் தன் பரிவாரங்களுடன் பானுவின் இருப்பிடத்தை அடைந்தான். பானு அவனை அன்புடன் வரவேற்ருள். சொன்ன வாக்குத் தவருமல் சீக்கிரமாகத் தன் கணவன் திரும்பி வந்து விட்டது கண்டு அவளுக்கு அளவில்லாத சந்தோஷம். முன்னையும்விட அதிக அன்புடன் அவனை உபசரித்தாள்.

அஹமத் இவ்வாறு அடிக்கடி தன் தந்தையின் நாட்டிற்கு விஜயம் செய்து வந்தான். ஒவ்வொரு தடவையும் முன் தடவையைவிட அதிக ஆடம்பரமாகவும், இன்னும் பலத்த பரிவாரங்களுடனும் பிரயாணம் செய்தான்.

இளவரசன் அஹமத் மிகவும் பணக்காரனாக இருப்பதைக் கண்டு சுல்தானின் மந்திரிகளுக்கும், நண்பர்களுக்கும் அவன்மீது பொறாமை ஏற்பட்டது. சுல்தானும் தன் மகனைக் கண்டு பொறாமைப் படுவதற்கான சூழ்ச்சிகளை அவர்கள் செய்தனர். கொஞ்சம் கொஞ்சமாகச் சுல்தானின் மனதில் தன் மகனைப் பற்றி சந்தேகம் ஏற்படுவதற்கான முயற்சி செய்தனர். ஒரு நாள் சுல்தானிடம் அவன் மந்திரி ஒருவன் கூறினான்: "அரசே! தங்கள் மகனைப் பற்றித் தவருகக் கூறுவதாகத் தாங்கள் நினைக்கலாகாது. நமது நாட்டின் நன்மையைக் கருதி என் மனதில் தோன்றியதைச் சொல்லுகிறேன். நான் கூறுவதில் தவறு இருந்தால், என்னை மன்னிக்க வேண்டும். இளவரசர் அஹமத் அணிந்து வரும் உடைகளையும், அவருடன் வரும் பரிவாரங்களின் பலத்தையும் பார்த்தால் அவர் மிகவும் பணக்காரர் என்பது தெளிவாகத் தெரிகிறது. அடிக்கடி இவ்வளவு ஆடம்பரத்துடன் அவர் இங்கு வந்து உங்களைக் கண்டு போவதன் நோக்கமென்ன? தனது செல்வத்தையும் செல்வாக்கையும் கண்டு ஊர் ஜனங்கள் தம் மீது அபிமானம் கொள்ள வேண்டும் என்பது ஒரு நோக்கமாயிருக்க வேண்டும். தங்களைப் பார்க்க வருவதுபோல் பாசாங்கு செய்து விட்டு நம்முடைய படைபலத்தை அறிந்து கொள்ளுவது அவருடைய இரண்டாவது நோக்கமாயிருக்கலாம். அவருக்கு நமது ராஜ்யத்திலிருந்து பணம் கொடுப்பதில்லை. அப்படியிருக்க, அவருக்கு இவ்வளவு ஆடம்பரமும், ஆளும், படையும் எங்கிருந்து வந்தது? தாங்கள் நளிமை அவருக்குக் கலியாணம் செய்துகொடுக்காததால் தங்கள்மீது அவருக்குக் கோபம் இருக்கலாம். அதைத் தீர்த்துக் கொள்வதற்காகக் கடைசியில் பெரும் படையுடன் இங்கு வந்து உங்கள் சிம்மாசனத்தையே அவர் கைப்பற்ற முயற்சிக்கலாம். அவர்மீது சந்தேகங் கொள்ளாமல் இருப்பதற்காகத்தான், நம்முடன் சிநேகமாயிருப்பது போல் நடித்து தங்களை வந்து அடிக்கடி பார்த்துவிட்டுப் போகிருர்."

இதைக்கேட்ட சுல்தான் முதலில் சந்தேகம் கொள்ளவில்லை. தன்னுடைய ஆசை மகன் தன்னைக் கவிழ்க்க விரும்புவான் என்று அவன் நம்ப மறுத்துவிட்டான். ஆனால் "என் மகன் தன் இருப்பிடத்தை ஏன் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும்? தன்னுடைய இருப்பிடத்தைப் பற்றிய ரகசி

ரா.நா.

அழைக்கிறோம். காதலில் இறக்கம் ஏற்படுகிறது; வேட்கை உண்டாகிறது; தன்னை மறந்த நிலை ஏற்படுகிறது. காதலில் திருப்திக்குச் சிறிதும் இடமே கிடையாது. காதலில் தன்னலத் தியாகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம். ஆனால் அது ஒரு தரப்பில் மட்டும் செய்தால் போதாது. இரு தரப்பிலும் செய்யவேண்டும் என்று தோன்றியது. கிருஷ்ணாநித்தியனும் மறைந்தான். 'காதல் அமரத்துவம் வாய்ந்ததல்ல. புனிதமானதொரு கனவு காலா வட்டத்தில் தேய்ந்து மங்கி மறைந்துவிடவும் கூடும்' என்பதை இந்தத் தடவை சித்திரலேகா உணர்ந்தாள்.

அடுத்தபடியாக பீஜகுப்தன் சித்திரலேகாவின் வாழ்க்கையிலே பிரவேசித்தான். இந்தத் தடவை சித்திரலேகா காதலில் வேட்கை மேலோங்கி நிற்பதையும், எப்பொழுதாவது சிற்சில சமயங்களில் மட்டும் தன்னை மறந்த நிலை ஏற்படுவதையும் உணர்ந்தாள். அதில் தன்னலத் தியாகம் எதும் இல்லை என்பதையும் அவள் கண்டாள். இத் தடவை அவள் காதலில் மயக்கம் மேலோங்கி நிற்பதை அறிந்தாள். காதலுடன் கூடவே அவள் ஐசுவரியத்தின் பெருமையையும், இன்பக் கேளிக்கைகளின் மனோஹர உருவத்தையும் கூட இம்முறை கண்டாள். அத்துடன் கூடவே சித்திரலேகாவுக்கு இன்னொரு புதிய அனுபவமும் ஏற்பட்டது. வாழ்க்கையில் காதலுக்கு மட்டும் இடம் இல்லை. வாழ்க்கைக்கே ஆதாரம் காதல்தான் என்பதும் தவறு. காதலுடன் கூடவே இன்னும் எத்தனையோ விதமான மன எழுச்சிகளுக்கும் இடம் உண்டு என்பதுதான் அவளுக்கு ஏற்பட்ட அந்தப் புதிய அனுபவம். வெறும் காதல் சில தினங்களுக்கு வேண்டுமானால் சுகம் தரக்கூடும்; சுகத்துக்கு ஆதாரமாக இருக்கவும் முடியும். ஆனால் அந்தச் சுகத்தை நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டும் என்றால், தன்னை மறந்த நிலையை அடைய வேண்டியது அத்தியாவசியம் தன்னை மறந்த அந்த நிலை தானாகவே இயல்பாக உண்டாவது சிரமசாத்தியமான காரியம். ஆகவே, தன்னை மறந்த அந்த நிலையை வரவழைத்துக் கொள்ளுவதற்கு, மயக்கம் தரும் பான வகைகள் அத்தியாவசியம் என்பதையும் அவள் கண்கூடாகக் கண்டறிந்தாள்.

அதன் பின்னர், அவள் குமாரகிரியின்மீது நாட்டம் கொண்டாள். குமாரகிரி காளைப் பருவத்தினன், கட்டழகன், கலைபொருந்தியவன். இன்னும்......அதற்குமேல் சித்திரலேகாவுக்கு யோசனை ஓடவில்லை. இதயத்தில் இச்சை எழாமலேயே குமாரகிரியை, தான் நாடத் தொடங்கிவிட்டதாக அவள் எண்ணினாள். அப்படியானால் அவள் தன் இதயத்து இச்சையை ஒருவேளை அறியாதிருந்தாளோ?

சித்திரலேகா குமாரகிரியைக் காதலிக்கத் தொடங்கி விட்டாள். அதுவும் இந்தத் தடவை தன்னுடைய காதலுக்கு ஆதாரமான—பாத்திரமான பீஜகுப்தன் உயிர் வாழும்பொழுதே அவள் அப்படி செய்யத் தொடங்கி விட்டாள். ஆகவே குமாரகிரியிடம் போகச் சித்திரலேகாவுக்கு அவ்வளவாக நெஞ்சத் துணிவு உண்டாகவில்லை.

ஆனால் மிருத்யுஞ்ஜயரின் மாளிகையிலே நடந்த சம்பவம் அவளுக்கு அந்தத் துணிவை அளித்தது. அது துணிவை மட்டுமா அளித்தது? அவளுடைய மனிதத் தன்மையையே—தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுவதற்கு ஒரு சாக்கும் வேறல்லவா சொல்லிக் கொடுத்தது! 'பீஜகுப்தனுக்கு சுகத்தை அளிக்கவேண்டியது நம் கடமை. நாம் நம் பிடியிலிருந்து அவனை விடுவிப்பதே நாம் செய்யும் மகத்தான தியாகம் ஆகும். அப்பொழுதுதான் அவன் வாழ்க்கை சீர்திருந்தும்; பலனுள்ளதாகவும் ஆகும். ஆகவே நாம் பீஜகுப்தனின் நலனுக்காக பீஜகுப்தனையே தியாகம் செய்தாக வேண்டும். நிரந்தரமாக அவனுடைய தொடர்பை துண்டித்துக் கொள்ளத்தான் வேண்டும்' என்று அவள் தன் மனதுக்குள் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

அன்று இரவு முழுதும் சித்திரலேகாவுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அவள் இதே சிந்தனையில் இராப் பொழுதைப் போக்கிவிட்டாள். பொழுது விடியும் நேரத்தில்தான் அவளுடைய கண்ணிமைகள் மூடின. ஆகவே அவள் வெகுநேரம் கழித்துத்தான் விழித்தெழுந்தாள். அப்பொழுது கிட்டத்தட்ட நடுப்பகல் நேரம் ஆகிவிட்டது. அவள் பணிப் பெண்ணைக் கூப்பிட்டு "பீஜகுப்தனிடமிருந்து ஏதாவது சமாசாரம் வந்ததா?" என்று கேட்டாள்.

"இல்லை" என்று மிகவும் வினயமாக விடையளித்தாள் பணிப்பெண்.

சித்திரலேகா எழுந்து ஸ்நானம் செய்தாள். உணவு அருந்த அவள் மறுத்து விட்டாள். ரதம் கொண்டு வருமாறு பணிப்பெண்ணுக்கு உத்தரவு கொடுத்து விட்டு அவள் தன் சிங்கார விடுதிக்குச் சென்றுவிட்டாள். (தொடரும்)



வாடாமலர்

கவர்ச்சியான மூவர்ண அட்டைப் படத்தைத் தாங்கிக்கொண்டு "வாடா மலர்" என்ற பெயருடன் புதிதாக ஒரு மாதப் பத்திரிகை வெளிவந்திருக்கிறது. அட்டைப் படத்தின் கவர்ச்சியிலிருந்து விடுபட்டு, உள்ளே புரட்டிப் பார்க்கும்போது நம்முடைய பிரமிப்பு இன்னும் ஒரு மடங்கு அதிகமாகிறது. அப்பப்பா! பக்கத்துக்குப் பக்கம் எத்தனை படங்கள்! ஹாஸ்யத் துணுக்குகள் எத்தனை! பத்திரிகை யுலகத்தில் பல வருஷ காலம் தொண்டாற்றிப் போதிய அனுபவம் பெற்ற "சாவி" இதன் ஆசிரியராக இருக்கும்போது, பத்திரிகை இவ்வளவு சிறப்பாக விளங்குவதில் ஆச்சரியம் இல்லை. டாக்டர் மு. வரதராசனார், த. நா. குமாரஸ்வாமி, துஷ்யந்தன் முதலிய பிரபல எழுத்தாளர்கள் எழுதிய கதைகளும் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. கவியரசர் டாகூர் எழுதிய "மின்னல் கொடியாள்" என்ற தொடர் கதை மற்றொரு குறிப்பிடத் தக்க அம்சமாகும். வாஷிங்டன் நகரம் வளர்ந்த கதையைப் பற்றி "சாவி" எழுதிய கட்டுரை ரசமாக இருக்கிறது. "வாடா மலர்" என்றும் வாடாத மலராக விளங்கி தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்யுமாக. விலை அணா 6. விலாசம்: வாடாமலர், மாம்பலம். சென்னை. 17.

ஜிம்மியும் சீனுவும்

ஜிம்மி ஒரு நாய்க் குட்டி. சீனு அதன் தோழன். இந்த இருவரைப்பற்றிய கதை இது. ஒரு பக்கத்தில் சித்திரங்களும் மற்றொரு பக்கத்தில் அதன் விளக்கமும் அமைந்திருக்கிறது. சிறுவர்கள் விரும்பிப் படிக்கக்கூடிய புத்தகம்.

வனராணி

அடேயப்பா! அந்த வனராணியை அடைவதற்காக ராஜகுமாரன் என்னவெல்லாம் சிரமப்பட வேண்டி வந்தது! ஆனால் குழந்தைகள் இந்தப் புத்தகத்தைப் படிக்கக் கொஞ்சமும் சிரமப்பட வேண்டாம்.

முயல் வேட்டை

குழந்தைகளுக்கு ஏற்ற ஒன்பது கதைகள் இருக்கின்றன இப்புத்தகத்தில். எத்தனை தடவை வேண்டுமானாலும் படிக்கலாம். இம்மூன்று புத்தகங்களும் வாடா மலர்ப் பிரசுரங்கள். விலாசம்: வாடாமலர்ப் பதிப்பகம், மாம்பலம், சென்னை. விலை ஒவ்வொன்றும் அணா 4.

தென்னிந்திய வேளாண்மை

வேளாண்மையில் தேர்ச்சி பெற்ற மூன்று அறிஞர்கள், தங்கள் அனுபவத்தை அடிப்படையாக வைத்து இதை எழுதியிருக்கிறார்கள். உற்பத்தியை எப்படிப் பெருக்குவது, வேளாண்மை நன்றாக நடப்பதற்கு வழி என்ன? என்பதைப் பற்றித் தெளிவாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள்: ஜி. ராஜகோபால் பிள்ளை, என். எஸ். குழந்தைசாமி பிள்ளை, ச. கு. கணபதி ஐயர்; விலை ரூ. 1—12—0; பிரசுரம்: தென்னிந்திய வேளாண்மைக் கழகம், பிக்ஷாண்டார் கோவில், திருச்சிராப்பள்ளி ஜில்லா.

அழகாம்பிகை

"நான் காகிதப் பூவைக் கத்திரித்து வைத்துக் காட்ட விரும்பவில்லை. உண்மையான மலரை—உயிர் உணர்ச்சியும் மணமும் உள்ள மலரை—சிருஷ்டித்துக் காட்டவே விரும்புகிறேன். இச்சிருஷ்டி முயற்சியில் குறைபாடு காணப்படலாம். ஆண்டவன் படைப்பிலேயே அனந்தம் குறைபாடுகள் காணப்படுகின்றனவே!" என்று இந்தக் கதைத் தொகுதியின் ஆசிரியர் ஸ்ரீ நாரண துரைக்கண்ணன் கூறுகிறார். இத்தொகுதியில் காணப்படும் ஏழு கதைகளையும் படித்த பின்பு ஆசிரியர் உண்மையான மலரையே சிருஷ்டித்திருக்கிறார் என்பதில் ஐயம் ஏற்படுவதற்கில்லை. வேகமும் விறுவிறுப்பும் நிறைந்த இந்தக் கதைகள், மனித இயல்பை நன்றாய்ப் பார்க்கச் சாளரங்களாக உதவுகின்றன. சிந்தையைப் பிழிந்தெடுக்கும் கற்பனையும், பந்தயக் குதிரையின் கதியில் செல்லும் கதைகளும் இத்தொகுதியை மணமுள்ளதாகச் செய்திருக்கின்றன. விலை ரூ. 1—4—0.

சிறிதும் பிசகையாகாது. அவளுக்குக் கணவன்தான் உலகம்; அவளுக்குக் கணவன்தான் கண்கண்ட தெய்வம்; கணவன்தான் அவளுக்கு வாழ்வு, தாழ்வு; உயிர், உடல்; ஊன்றுகோல் அனைத்தும். ஆகா! கணவனுடைய காதலில்தான் அவளுக்கு என்ன இன்பம்! கணவனிடம் அவள் கொண்டிருந்த காதல் தன்னலத் தியாகத்துக்கு ஓர் எல்லைக்கோடாகத் திகழ்ந்தது. தன்னலத் தியாகத்தில் உள்ள இன்பத்தைத் தன்னலத் தியாகம் செய்பவனால்தான் நன்கு உணர முடியும்.

கணவன் காலம் ஆனதும் அவளுக்கு உலகமே கும்மிருட்டாகி விட்டது. அவளுக்குத் தன் சாதனை, தவம் அனைத்துமே வீணாகி விட்டதுபோலத் தோன்றியது. 'தற்கொலை செய்து கொண்டு விட்டால் என்ன?' என்ற எண்ணம் கூட அவள் உள்ளத்திலே அடிக்கடி எழுந்தது. ஆனால் அவள் தற்கொலை செய்து கொள்ளுவது மகா பாவம் என்பதை அறிந்திருந்தாள். 'வாழ்க்கையிலே மிகப் பிரதானமான அங்கம் வகிப்பது தவம். தவ வாழ்க்கையைக் காட்டிலும் மேலானதோர் வாழ்க்கை உலகத்திலேயே கிடையாது. புலனடக்கத்துடன் சாதனையில் ஈடுபடுவதுதான் விதவையின் கடமை' என்று அவளுக்குச் சொல்லியிருந்தார்கள். சித்திரலேகா அதை மேற்கொண்டாள். ஆனால் அதை அனுஷ்டிப்பது அவளுக்கு மிகவும் கடினமாகத் தோன்றியது. கணவன் உயிருடன் இருந்தவரை அவளால் பூஜை செய்ய முடிந்தது; தவ வாழ்க்கையை மேற்கொள்ள முடிந்தது; சாதனையில் ஈடுபட முடிந்தது. ஏனெனில் இவற்றுக்கெல்லாம் உறைவிடமான ஒரு பொருள் கண்ணெதிரே காட்சியளித்தது; உள்ளத்தை ஒருமைப்படுத்த ஊன்றுகோலாக உதவியது. அந்த உறைவிடம் உருக்குலைந்ததும், அவளுடைய ஒருமைப் பட்ட உள்ளமும் உருக்குலைந்தது. ஊன்று கோலாகத் திகழ்ந்த பொருள் ஒடிந்து விடவே, நம்பிக்கையும் நழுவி விட்டது.

அதற்குப்பின் அவள் கிருஷ்ணாநித்தியனைக் காதலித்தாள். இந்தத் தடவை ஏற்பட்ட காதல் தெய்விகமானதல்ல; இயற்கையானது. இந்தத் தடவை காதலில் பக்தியில்லை; தன்னை மறந்த நிலை ஒன்று மட்டுமேதான் தாண்டவமாடியது. இந்தத் தடவை காதலில் 'தான், தனி' என்னும் மனோபாவம் மறையவில்லை. தன்னையும் தன் காதலனையும் வேறு வேறாகப் பிரிக்காமல் ஒன்றாகப் பிணைக்க வேண்டும் என்ற முயற்சி மட்டும்தான் முக்கியமானதாகத் தெரிந்தது. கிருஷ்ணாநித்தியனுடன் கொண்ட காதலில் சித்திரலேகா முதன் முதலாக வேட்கையை உணர்ந்தாள். அந்த உணர்ச்சி அவளைத் திகைத்துத் துணுக்குறும்படி செய்து விட்டது. வேட்கையின் மகத்துவத்தை அவள் அதுவரை உணர்ந்தவள் அல்ல. கணவனுடன் கொண்ட காதலில் அவள் 'தான், தனி' என்னும் எண்ணத்துக்கே அதுகாறும் இடம் கொடுக்கவில்லை. அப்படியிருக்கும்பொழுது வேட்கை ஏற்பட இடம் ஏது? ஆனால் இந்தத் தடவை அவள் ஆசாபாசங்களை உணர்ந்தாள்; உள்ளத்து உணர்ச்சிகளின் உக்கிரமான உருவத்தைக் கண்டு முதலில் அவள் சற்றுப் பயந்தாள். ஆனால் பிறகு அதில் அவளுக்கு ஒரு வித இன்பம் துய்த்தது. இந்தத் தடவை அவள் தன்னிடமே வாழ்க்கை இன்பத்தை நுகர்ந்தாள். காதல் பக்தி ஆகாது. ஆகவே ஒரு தரப்பில் அது ஏற்படவே முடியாது. காதல் என்பது தொடர்புதான். இருதரப்பிலும் ஏற்படுவது தான் அதன் இயல்பு. ஆத்மாவின் புனிதமான தொடர்பைத்தான் காதல் என்று



முதல்வர் :—என்ன ஸார்! என்னவோபோல் இருக்கிறீர்களே, ஏன்?

இரண்டாமவர் :—ஒன்றும் இல்லை, ஸார்! என் பையன் ஒரு ரூபாய் நாணயத்தை விழுங்கிவிட்டான்...!

முதல்வர் :—பூ! இதுதானா பிரமாதம்! நீங்கள் ஐந்நூறும், அறுநூறும் சம்பாதிக்கிறீர்கள். உங்களுக்கு இந்த ஒரு ரூபாய் பிரமாதமா?

இந்த விவாகம் எப்படியும் நடந்தே ஆக வேண்டும். அதற்கான பிரயத்தனம் செய்யுங்கள்" என்றான்.

பிறகு சுவேதாங்கனை அழைத்துக் கொண்டு சித்திரலேகாவும் பீஜகுப்தனுக்குப் பின்னாலேயே சென்று விட்டாள். அவர்கள் வெளியேறிய பின்னர்தான் மிருத்யுஞ்ஜயருக்கு நிலைமையின் தன்மை நன்கு விளங்கியது. சிறிது நேரம்வரை அவர் மௌனமாயிருந்தார். பிறகு யோகி குமாரகிரியைப் பார்த்து, "யோகிராஜ்! எனக்கு ஒன்றுமே சரியாக விளங்கவில்லை. நடன ராணி சித்திரலேகா பீஜகுப்தனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்கிறாள் என்ற ஒரே ஒரு விஷயம்தான் எனக்குத் தெளிவாக விளங்குகிறது" என்றார்.

"தாங்கள் நினைப்பதில் தவறில்லை."

"அத்துடன் நடன ராணி சித்திரலேகாவின் உள்ளம் மிகவும் பரிசுத்தமானது என்றும் தோன்றுகிறது."

இதற்குக் குமாரகிரி ஒன்றும் பதில் சொல்லவில்லை; மௌனம் சாதித்தான். அவனுடைய கண்கள் அவனையறியாமல் விசாலதேவனை ஏன்தான் பார்த்தனவோ, தெரியவில்லை! அதைக் கண்ணுற்ற விசாலதேவன் மனதுக்குள்ளாகவே முறுவலித்துக் கொண்டான்.

மிருத்யுஞ்ஜயர் மறுபடியும், "யோகிராஜ்! பீஜகுப்தனை இதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக பலவந்தப் படுத்துவது உசிதமாகுமா? இதுதான் புரியாப் பிரசினையாக இருக்கிறது. சித்திரலேகா சொல்லி விட்டுப் போயிருக்கிறாள். அவள் சொன்ன சொல்லை நிறைவேற்றுவாள் என்றும் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் பீஜகுப்தனை விட்டு விடுவது தான் நல்லதோ என்றும் தோன்றுகிறது. ஏனென்றால் சித்திரலேகாவின் மனம் மிகவும் புண்படக்கூடும் அல்லவா?" என்றார்.

இதைக் கேட்டதும் குமாரகிரி, "சித்திரலேகாவின் மனம் மிகவும் புண்படக்கூடும் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. சித்திரலேகாவே பீஜகுப்தனை உதறித் தள்ளிவிட்டுப் போகத் தயாரா யிருக்கலாம் அல்லவா? அம்மாதிரி நிலைமை ஏற்பட்டால் பீஜகுப்தனின் வாழ்க்கை சீர்திருந்தி விடக் கூடும். என்னைக் கேட்டால், சித்திரலேகாவுக்கும் பீஜகுப்தனுக்கும் உள்ள தொடர்பு துண்டிக்கப்படுவதுதான் உசிதம் என்று கூடச் சொல்லுவேன்" என்றான்.

அடுத்த கணம் குமாரகிரியும் எழுந்து நின்றான். "மிருத்யுஞ்ஜயரே! யசோதாவுக்குப் பீஜகுப்தனைவிட வேறு நல்ல வரன் கிடைக்க முடியாது. நினைவிருக்கட்டும்—வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டான். அவனைப் பின் தொடர்ந்து விசாலதேவனும் சென்றான்.

பதினைந்தாம் அத்தியாயம்

காதல் பலவிதம்

சித்திரலேகா தன் வாழ்க்கையில் எத்தனை தடவை அன்பு ஆராய்ச்சியில் இறங்கினாளோ, தெரியாது. ஆனால் ஒவ்வொரு தடவையும் தான் செய்த முடிவு தவறான முடிவு என்பதை மட்டும் அவள் நன்கு உணர்ந்து வந்தாள்.

எல்லாவற்றுக்கும் முன்பாக—முதன் முதலாக ஏற்பட்ட காதல் சித்திரலேகாவுக்கு தெய்விகமானது. அவள் தன் கரம் பற்றிய கணவனைக் காதலித்தாள். அந்தக் காதலில் புனிதத் தன்மை தோய்ந்திருந்தது; பரிசுத்தம் நிறைந்திருந்தது. கணவன்மீது அளவற்ற பக்தி அவளுடைய உள்ளத்திலே குடிகொண்டிருந்தது. கணவனுடன் கொண்ட அந்தக் காதலில் சித்திரலேகா, 'தான் வேறு, கணவன் வேறு' என்னும் வித்தியாசம் சிறிதுமின்றி கணவனுடைய வாழ்க்கையுடனேயே ஓருயிர் ஈருடலாக ஒன்றி விட்டாள்; இரண்டறக் கலந்து விட்டாள். 'தான், தனி' என்னும் எண்ணத்துக்கே அவள் தன் இதயத்தில் இடம் கொடுக்கவில்லை; அதை அடியோடு, வேரோடு களைந்து எறிந்து விட்டாள். கணவனைக் களிப்புறச் செய்வதைத்தான் அவள் தன் ஒவ்வொரு காரியத்தின் குறிக்கோளாகவும் கருதி வந்தாள். கணவனைக் களிப்புறச் செய்வதற்காகவே அவள் சிரித்தாள். கணவனைக் களிப்புறச் செய்வதற்காகவேதான் அவள் பேசினாள். அது மட்டும் அல்ல; அவள் கணவனுக்காகவே தான் உயிரும் வாழ்ந்தாள். அவள் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் கணவனின் பொருட்டே அர்ப்பணம் செய்துவிட்டாள் என்று சொன்னால் கூடச்

நான் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளுகிறேன். அன்பு என்னும் நெறியிலே புனிதக் குறைவுக்கு இடமே கிடையாது; அதை அசுத்தம் அண்டவே அண்டாது. ஆனால் அம்மா! நீ காதலிக்கும் ஒருவன் சரியான வழியில் செல்லாமல் தவறான வழியில் சென்றால், அவனைச் சீர்திருத்தி நல்ல வழிக்குக் கொண்டு வர வேண்டியது உன்னுடைய கடமை அல்லவா? காதலில் தியாகம் வேண்டும். நீ பீஜகுப்தனின் பொருட்டுச் செய்யும் தியாகம் மகத்தானதாக இருக்கும்!” என்றார்.

அவர் விஷயத்தைச் சொன்ன முறை சித்திரலேகாவின் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டது. பீஜகுப்தன் இடைமறித்துப் பேசலானான்: “ஸ்வாமி! சித்திரலேகாவிடம் இதெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது வீண். கெடுவதோ, திருந்துவதோ எல்லாம் என் கையில் இருக்கிறது. எல்லாவற்றுக்கும் நான்தான் பொறுப்பாளி.



சித்திரலேகாவினால் என்னைக் கெடுக்கவும் முடியாது; திருத்தவும் முடியாது. சித்திரலேகாவுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு அமரத்துவம் வாய்ந்தது என்று என்னைப் பொறுத்தவரை நான் திட்டமாக உறுதி கூறமுடியும்.”

பீஜகுப்தன் அதைச் சொல்லி முடித்ததும் எழுந்துவிட்டான். ஆனால் சித்திரலேகா மட்டும் உட்கார்ந்தேயிருந்தாள். “மேன்மை தங்கிய மிருத்யுஞ்ஜயருக்கு ஒரு வார்த்தை! நீங்கள் சொல்லுவது போல, அது சரியாயிருந்தாலும் சரி, தவறாயிருந்தாலும் சரி, அவசியம் செய்கிறேன். நான் என் நன்மையை உத்தேசித்து இவ்வாறு சொல்லவில்லை. பீஜகுப்தனின் நன்மையை உத்தேசித்துத்தான் சொல்கிறேன். தாங்கள் என் சொல்லைத் தாராளமாக நம்பலாம்” என்று சொல்லிப் பக்கத்திலிருந்த யசோதராவை ஒருமுறை பார்த்தாள். பிறகு, “ஸ்வாமி! தங்கள் பெண்ணுக்கு பீஜகுப்தன்தான் நல்ல வரன். இந்த விவாகம் வெகு அழகாகவே அமையும்” என்றாள். அதன் பின்னர் பீஜகுப்தனைப் பார்த்து, “உங்களுக்கும் ஒரு வார்த்தை! யசோதராவைப் போல ஒரு மனைவி உங்களுக்குக் கிடைப்பது மிகவும் துர்லபம். ஆகவே இன்றைக்கே உங்களுக்கும் யசோதராவுக்கும் விவாகம் நிச்சயமாகி விட்டதாகத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்” என்றாள்.

பீஜகுப்தன் அப்பொழுது வாசற்படியண்டை நின்று கொண்டிருந்தான். “சித்திரலேகா! நீ சொல்வது சிறிதும் உசிதமில்லை. அது என்னைப் பொறுத்தவரை கனவிலும் நடக்காத காரியம். இந்த இடத்தில் இப்பொழுது இதற்குமேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. நல்லது, ஸ்வாமி! நான் வருகிறேன்” என்று சொல்லி விட்டு வெகு வேகமாக அவன் மிருத்யுஞ்ஜயரின் மாளிகையின் வாசற்புறம் சென்றுவிட்டான்.

சித்திரலேகாவும் எழுந்து நின்றாள். “ஸ்வாமி! தாங்கள் பீஜகுப்தனின் வார்த்தையைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். ஆத்திரத்தில் மனிதன் நல்லது எது, கெட்டது எது என்று பகுத்தறிந்து கொள்ளும் சக்தியையும் கூட இழந்து விடுகிறான். அம்மாதிரி சமயத்தில் ‘இவன் இப்படிப்பட்டவன்’ என்று ஒரு மனிதனைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவது சிறிதும் உசிதமாக ஆகாது. பீஜகுப்தனுக்கும் உங்கள் பெண்ணுக்கும் ஏற்படும் தொடர்பு மிகவும் சிலாக்யமானதாக அமையும் என்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன். ஆகவே

வரை ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டான். பிறகு சித்திரலேகாவைப் பார்த்து, “நடன ராணி! உனக்கு உபதேசம் அளிப்பதென்பது என்னால் முடியாத காரியம்” என்றான்.

இதைக் கேட்டதும் சித்திரலேகா ‘கலுக்’ கென்று சிரித்து விட்டாள். “வாயால் சொல்லி விடுவது ரொம்ப சுலபம். ஆனால் காரியத்தில் செய்து காட்டுவதுதான் கஷ்டம். யோகி! தங்களுக்கு வைராக்கியம் என்றால் தண்ணீர்பட்ட பாடாயிருக்கலாம். ஆனால் என் போன்றோருக்கு — அதுவும் குறிப்பாக எனக்கு அது மிகவும் சிரமசாத்தியமான காரியம். தன்னந் தனியாக வைராக்கிய மார்க்கத்தில் செல்லுவது என்றால் முடியாத காரியம் என்றே தோன்றுகிறது. இன்று வரை நான் அன்பு மார்க்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதையே கடைப்பிடித்து வந்திருக்கிறேன். அதை உலகம் புனிதமானதென்று நினைக்காவிட்டாலும், கடவுளுக்கும் சரி, எனக்கும் சரி, அது பரிசுத்தமான மார்க்கமே யாகும். அந்தப் புனிதமான மார்க்கத்தை விட்டு விலகிச் செல்லுவது விபரீதமாக முடிந்தாலும் முடியலாம் அல்லவா? ராஜபாட்டையைப் போன்ற பாதையை விட்டுச் சகதியில் விழ யாருக்குத்தான் மனம் வரும்? ஆகவே வீணில் நான் பாவப் படுகுழியில் போய் விழத் தயாராயில்லை” என்றாள்.

கைகூடிய காரியம் கெட்டுப் போனது போலத் தோன்றியது மிருத்யுஞ்ஜயருக்கு.

கெட்டுப்போன காரியம் கைகூடியது போலத் தோன்றியது பீஜகுப்தனுக்கு.

குமாரகிரி சித்திரலேகாவை நன்கு அறிந்திருந்தான். அதைப் போலவே சித்திரலேகாவும் குமாரகிரியை நன்கு அறிந்திருந்தாள். சுவேதாங்கனும் விசால தேவனும் அவர்களிடையே நடந்த அந்தச் சம்பாஷணையின் உட்கருத்தை நன்குணர்ந்தனர். ஆனால் யசோதரா ஒருத்திக்கு மட்டும்தான் அந்தச் சம்பாஷணை கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோலிருந்தது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை; தெரியவும் இல்லை; விளங்கவும் இல்லை. அவள் மிருத்யுஞ்ஜயரைப் பார்த்து, “அப்பா! இரவு வெகு நேரமாகிவிட்டதே!” என்றாள்.

வயது முதிர்ந்தவரான மிருத்யுஞ்ஜயர் தன் பெண்ணைப் பார்த்தார். பிறகு சித்திரலேகாவைப் பார்த்தார். இருவருக்குமிடையேதான் எவ்வளவு வித்தியாசம்? மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அல்லவா இருந்தது! ஒருத்தியைத் தெய்வம் என்று தொழவேண்டும். மற்றொருத்தியை அரக்கி என்று அழைக்கவேண்டும். ஒருத்தியோ சாந்த சுந்தரி; மற்றொருத்தியோ மோகினிப் பிசாசு! ஆமாம், அது சரி. பீஜகுப்தன் என்ன? அவன் காலச்சக்கரத்தின் இடுக்கிக்குள் சிக்கித் தவிக்கும் வாயில்லாப் பூச்சி! ஆனால் அத்துடன் கூடவே அவன் மனிதத் தன்மை நிறைந்த மனிதனுங்கூட.

மிருத்யுஞ்ஜயர் சித்திரலேகாவைப் பார்த்து, “நீ போகும் பாதை புனிதத் தன்மையற்றது என்று யார் சொல்லுகிறது? நீ உன் மனப் போக்குக்கு ஏற்றவாறுதான் ஒவ்வொரு காரியமும் செய்கிறாய். நீ அன்பு என்னும் அறநெறியில் செல்கிறாய் என்பதை



சித்திரலேகா



ஸ்ரீ பகவதி சரண் வர்மா ❖ மொழிபெயர்ப்பு: ரா வீ.

சிறிது நேரம் வரை மிருத்யுஞ்ஜயர், பீஜகுப்தன் ஏதாவது பதில் சொல்லுவான் என்று எண்ணி எதிர்பார்த்தார். ஆனால் அவன் வாய் திறக்காமல் யோசனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருப்பதைக் காணவே அவர் சித்திரலேகாவின் பக்கம் திரும்பி, "அம்மா, சித்திரலேகா! நீ அறிவிற் சிறந்தவள்; எல்லாம் தெரிந்தவள். உனக்கு அதிகமாக எடுத்துச் சொல்லத் தேவையில்லை. உனக்குப் பீஜகுப்தனுடைய நிலைமை நன்றாகத் தெரியும் என்று எண்ணுகிறேன்" என்றார்.

சித்திரலேகா அதுவரை மௌனமாகி இருந்தாள். அவள் மிருத்யுஞ்ஜயரைப் பார்த்து, "ஸ்வாமி! தாங்கள் சொல்லுவது ரொம்பவும் நியாயமான வார்த்தை! நானோ சமூக நெறி தவறிய நடனமாது. நான் பீஜகுப்தனுக்கு மனைவியாக ஆவது என்பது கனவிலும் நடக்கக்கூடாத காரியம்தான். நான் பீஜகுப்தனுக்கு நன்மை பயக்கக் கூடியதான காரியங்களை எப்பொழுதுமே செய்யச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் ஒரு விஷயம்; உங்களுக்கு அது தெரியாத சமாசாரமும் அல்ல. அதற்காக நான் எத்தனை பெரிய தியாகம் செய்ய வேண்டிவரும், தெரியுமா?" என்று கேட்டாள்.

"நடன ராணி! தியாகம் செய்யவேண்டி வருமா?" இதைக் கேட்ட குமாரகிரி இலேசாகச் சிரித்தான். "நீ சொல்லுவது ரொம்ப வேடிக்கையாக இருக்கிறதே! உன் மனப்போக்கை ஒரு வேளை நீயே மறந்து விட்டாயோ என்று தோன்றுகிறது. நான் வைராக்கிய வாழ்க்கையில் ஈடுபட விரும்புகிறேன் என்று நீ முன்னமொரு தடவை என்னிடம் சொன்னாயே, நினைவிருக்கிறதா? அதற்கு இதுதான் மிகமிகச் சரியான தருணம். இதைக்காட்டிலும் சரியான வேறு நல்ல தருணம் வாய்ப்பது அரிது. தெரிகிறதா?" என்றான்.

குமாரகிரி சொன்ன அந்தச் சொற்களைக் கேட்டுப் பீஜகுப்தன் திடுக்குற்றுத் திகைத்துப் போனான். "யோகி ராஜ்! வைராக்கிய வாழ்க்கையில் இவ்வளவு திட்டமான நம்பிக்கை கொண்டிருக்கும் தாங்கள்-பிறருக்கு வைராக்கியத்தைப் போதித்து உபதேசிக்க இவ்வளவு பாடுபடும் தாங்கள் என்னை மட்டும் கட்டுப்பாடுகள் நிறைந்த இந்த வாழ்க்கையில் கட்டுண்டு உழலுமாறு உபதேசிக்க முன் வருவானேன்? நான் என்ன பாவம் செய்தேன், தாங்கள் என்னை இப்படிக் கட்டாயப் படுத்துவதற்கு?" என்று கேட்டான்.

"நீ வைராக்கிய வாழ்வு வாழத் தகுந்தவன் அல்ல என்பதற்காகத்தான். அது மட்டும் அல்ல; நீ சமூகத்தின் சட்ட திட்டங்களை மீறி அதற்குப் புறம்பாகவும் நடக்கிறாய். முதன் முதலாகக் குறைந்த பக்ஷம் சமூகத்தின் சட்டதிட்டங்களை யாவது மீறாமலிருக்க நீ கற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் முதலில் நீ செய்ய வேண்டிய காரியம்" என்றான் குமாரகிரி.

சித்திரலேகா அவ்வளவு நேரமும் குமாரகிரி சொன்ன விஷயங்களில் மனதைச் செலுத்திச் சிந்தனை செய்து கொண்டிருந்தாள். அவள் சிறிது நேரத்துக்கெல்லாம் தலையை நிமிர்த்தி, "யோகி! உங்களை ஒரு விஷயம் கேட்க விரும்புகிறேன். தாங்கள் எனக்குக் குருவாகி உபதேசம் செய்யச் சித்தமாயிருக்கிறீர்களா, சொல்லுங்கள்? தாங்கள் சம்மதம் தெரிவித்தால் நான் இப்பொழுது இந்தக் கணமே தங்களுடைய சிஷ்யை ஆகிவிடத் தயாராயிருக்கிறேன்" என்றாள்.

குமாரகிரியின் கண்கள் தன்னை யறியாமலே விசாலதேவனின் பக்கம் திரும்பின. அப்பொழுது விசாலதேவன் வைத்த கண் வாங்காமல் தன் குருவையே பார்த்துக் கொண்டிருந்தான். குமாரகிரி சிறிது நேரம்

மகாத்மா காந்தி ஸ்தூபி நிதி

[காந்தியடிகளின் புனிதமான அஸ்தி கலசத்தை அஸ்தி வாரத்தில் வைத்துச் சென்னைக் கடற்கரையில் மகாத்மாவின் ஞாபகார்த்தமாக ஸ்தூபி ஒன்று கட்டப் போகிறார்கள். அந்த ஸ்தூபியின் அடியில் எட்டுப் பக்கங்களிலும் மகாத்மாவின் மணிவாசகங்கள் பொறிக்கப்படும். இந்தத் திருப்பணிக்கு உங்களாலியன்ற நன்கொடையை விரைவாக அனுப்பி வையுங்கள். கனம் ஜே. சிவசண்முகம் பிள்ளை, பொக்கிஷதார், மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபி நிதிக் கமிட்டி, நுங்கம் பாக்கம், சென்னை என்ற விலாசத்துக்காவது, மானேஜர், கல்கி, கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்துக்காவது உங்கள் நன்கொடையை அனுப்பலாம்.]

கோயமுத்தூர் ஸ்ரீ கே. சுப்பிரமணியம், எம். எல். ஏ. (கப்சி) மூலம் வசூல் :—

ஸ்ரீ முத்தய்யா, கோயமுத்தூர் 25 0 0

ஸ்ரீ ஏ. என். ராஜலிங்கம் செட்டியார் அண்டு கோ. ஆப்பணைக்கார வீதி, கோயமுத்தூர் 25 0 0

ஸ்ரீ எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டி, சுக்ரவாரப்பேட்டை, கோயமுத்தூர் 25 0 0

ரூ. 10—0—0 கொடுத்த அன்பர்கள் :—

ஸ்ரீ பி. வி. ராமவாரியர், ஆர்ய வைத்திய பார்மஸி, கோயமுத்தூர்; ஸ்ரீ ஏ. என். நாயக், ஸி. ஸி. டி., கோயமுத்தூர்; ஸ்ரீ எஸ். என். ராஸ் பிரதர்ஸ், கோயமுத்தூர்.

ஆக ரூ. 30 0 0

ரூ. 5—0—0 அளித்த அன்பர்கள் :—

ஸ்ரீ கிருஷ்ணா அண்டு கம்பெனி, சுப்பிரமணியம், ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்; ஸ்ரீ எஸ். வெங்கடாச்சாரி, 75, கப்ரி தெரு, கோயமுத்தூர்; ஸ்ரீ சேதுமாதவ செட்டியார், டி. பி. தெரு, கோயமுத்தூர்; ஸ்ரீ எஸ். ஆர். ஸ்ரீநிவாசன், 164, கப்ரி தெரு, கோயமுத்தூர்; ஸ்ரீ இ. தனஷா, பங்களூர்; ஸ்ரீ வி. எஸ். வி. ஐயர், கே. ஜி. தெரு, கோயமுத்தூர்; ஸ்ரீ டாக்டர் ஆர். ஒய். அய்யர், கே. ஜி. தெரு, கோயமுத்தூர்; ஸ்ரீ ஜி. என். சுந்தரம் ஐயர், கோயமுத்தூர்; ஸ்ரீ எம். எஸ். முத்துசாமி, ஈரோடு; ஜனாப் பாதன்கான், கோயமுத்தூர்; ஸ்ரீ ரமணி, கோயமுத்தூர்; ஸ்ரீ கே. கே. வாஸுதேவன், கோயமுத்தூர்; ஸ்ரீ பி. சுப்பையா, "வில்லா", கோயமுத்தூர்; ஸ்ரீ எஸ். கே. ஏ. ஷாகூர், கோயமுத்தூர்; ஸ்ரீ டாக்டர் டி. என். ஆபிரஹாம், கோயமுத்தூர்; ஸ்ரீ பி. வி. கோபாலகிருஷ்ணன், கோயமுத்தூர்; ஸ்ரீ முருகையா கவுடர் அண்டு ஸன்ஸ், கோயமுத்தூர்; ஸ்ரீ கோதண்டராம செட்டியார், ஸ்ரீ கமலேசன் செட்டியார், கோயமுத்தூர்; ஸ்ரீ ஏ. பி. டி. ராஸ், கோயமுத்தூர்; ஸ்ரீ ஏ. பி. டி. ராஸ், கோயமுத்தூர்; ஸ்ரீ மாதவன், மாடர்ன் இங்கிலீஷ் பேக்கரி, கோயமுத்தூர்; ஸ்ரீ வி. பத்மநாபன், 127, ராஜா தெரு, கோயமுத்தூர்; ஸ்ரீ டி. ராகவாச்சாரி, பி. ஏ. பி. எல்., சாலிவான் தெரு, கோயமுத்தூர்; ஸ்ரீ சாரதா, லேஸ் அண்டு எம்பிராய்டரி ஸ்டோர்ஸ், கோயமுத்தூர்; ஸ்ரீ டி. வி. சிரங்க செட்டியார், வியாபாரம், உதகை; ஸ்ரீ லிங்கம் நாயக்கர், வியாபாரம், கூடலூர் பஜார், பழைய புதூர்; ஸ்ரீ டி. என். நாதப்ப செட்டியார், வியாபாரம், கோவை; ஸ்ரீ என். ராகவன், ரேஷன் ஷாப், கோவை; ஸ்ரீ என். ஜெயராமகிருஷ்ணன், கோவை; ஸ்ரீ ஆர். ஆறுமுகம், வியாபாரம், கோவை; ஸ்ரீ கி. என். சித்தராஜ செட்டியார், கோவை; ஸ்ரீ வி. ராமனாதன், கோவை; ஸ்ரீ பொன்னன் குருக்கள், கோவை; ஸ்ரீ என். சுப்பையா கவுடர், கோவை; ஸ்ரீ வி. எம். எஸ். முத்துசாமி, கோவை; ஸ்ரீ என். அப்பையா கவுடர், கோவை; ஜனாப் கே. எம். முகம்மது இப்ராஹிம், கோவை; ஸ்ரீ பி. கிருஷ்ணசாமி நாயுடு, கோவை; ஸ்ரீ சாமிக் குருக்கள், கோவை; ஜனாப் டி. முகமது கனி ராவுத்தர், கோயமுத்தூர். ஆக ரூ. 200 0 0

ஆக மொத்தம் ரூ. 305 0 0

ஸ்ரீ வி. என். குமாரசாமி, யோககான பிரசாரக், தண்டையார்பேட்டை மூலம் வசூல்:—

ஸ்ரீ எம். கே. சுந்தரராமய்யர், 75, தங்கசாலைத் தெரு, சென்னை 101 0 0

ஸ்ரீ கே. ஆர். வெங்கடாசலபதி, 8, ஆறுமுக முதலி தெரு, வண்ணையம்பதி, சென்னை 25 0 0

ஸ்ரீ கஸ்தூரிபா காந்தி வாசகசாலை, ராமாபுரம் கிராமம், காவேரிப்பாக்கம், சர்பாக காரியதரிசி லோகநாதன் மூலம் நன்கொடை 20 0 0

ஸ்ரீ எஸ். பாலசுப்பிரமணிய முதலியார், ஸ்பிரிட் வேர் ஹவுஸ், பெரியமேட், சென்னை 20 0 0

ஸ்ரீ எஸ். குப்புசாமி அண்டு கம்பெனி, வெங்கடாசல முதலித் தெரு, பார்க் டவுன், சென்னை 20 0 0

ஸ்ரீ எம். எஸ். மஹாதேவய்யர், 75, தங்கசாலைத் தெரு, சென்னை 11 0 0

ரூ. 10—0—0 கொடுத்த அன்பர்கள் :—

ஸ்ரீ டபிள்யு. வி. வீரராகவ முதலியார், முனிசிபல் கௌன்ஸிலர், வண்ணாரப்பேட்டை; ஸ்ரீ கி. ராமலிங்கம், வெங்கடாசல முதலித் தெரு, பார்க் டவுன், சென்னை. ஆக ரூ. 20 0 0

ரூ. 5—0—0 அளித்த அன்பர்கள் :—

ஸ்ரீ என். ஏ. காமாக்ஷி சங்கரய்யர், 3, மாணிக்க செட்டித் தெரு, சூளை; ஸ்ரீ ஆர். ஆர். சுப்பையர் அண்டு ஸன்ஸ், 27, மதுரம் 4-வது தெரு, மதுரை; ஸ்ரீமதி செல்லம்மாள், புரொபஸர் காலனி, தாம்பரம்; ஸ்ரீமதி ஏ. அலமாம்பாள், நோச்சித்தாங்கல், தாம்பரம்; ஸ்ரீ

கே. சுப்பிரமணிய ஐயர், தியாகராஜ லஞ்ச் ஹோம், வாலாஜாபேட்டை; ஸ்ரீ கே. நரசிம்ம செட்டியார், ஸ்டாம்பு வெண்டர், வாலாஜா பேட்டை; ஸ்ரீ மண்டலம் வெங்கடபதி செட்டியார், மாஜி முனிசிபல் சேர்மன், வாலாஜா பேட்டை; ஸ்ரீ பி. வி. ராமச்சந்திரய்யர், காதி பிரசாரக், வேலூர்; ஸ்ரீ டி. முனுசாமி அய்யர், இன்ஸ்பெக்டர், நேஷனல் இண்டியன் இன்ஷூரன்ஸ் கம்பெனி, வாலாஜாபேட்டை; டாக்டர் டி. வேணுகோபாலய்யர், டிரங்கு ரோட், வாலாஜாபேட்டை; ஸ்ரீ கே. லோகநாத முதலியார், ராசப்ப செட்டித் தெரு, பார்க் டவுன், சென்னை; ஸ்ரீ எம். ஷண்முகம், 40, தங்கசாலை தெரு, சென்னை. ஆக ரூ. 60 0 0

ரூ. 1—0—0 கொடுத்த அன்பர்கள் :—

ஸ்ரீ என். ஆர். சுப்பையர் 3, மாணிக்கச் செட்டித் தெரு, சூளை; ஸ்ரீ என். சுப்பராம், உபாத்தியாயர், வேலூர்; ஸ்ரீ வி. திருமலை தாதாச்சாரியார், சென்னை; ஸ்ரீமதி வேதவல்லி தாதாச்சாரி, சென்னை; ஸ்ரீ வி. ர. ரங்கநாயகி அம்மாள், தாம்பரம்; ஸ்ரீ வி. ர. ரங்கநாயகி அம்மாள், தாம்பரம்; ஸ்ரீ பி. என். விசுவநாதய்யர், ரயில்வே காலனி, தாம்பரம்; ஸ்ரீமதி கமலா விசுவநாதன், ரயில்வே காலனி, தாம்பரம்; ஸ்ரீமதி சங்கரி அம்மாள், புரொபஸர் காலனி, தாம்பரம்; ஸ்ரீ டி. என். வெங்கட நாதாச்சாரி, புரொபஸர் காலனி, தாம்பரம்; ஸ்ரீமதி புஷ்பவல்லி அம்மாள், தாம்பரம்; ஸ்ரீமதி ரமணி பாஸ்கர், தாம்பரம்; ஸ்ரீ கே. ஜி. சுப்பிரமணிய செட்டியார், வாலாஜாபேட்டை; ஸ்ரீ எம். ராஜகோபால், வாலாஜாபேட்டை; ஸ்ரீ கே. ரங்கநாத ராவ், வாலாஜாபேட்டை; ஸ்ரீ த. நடேச முதலியார், 23—88, கொண்ணூர் ஹைரோட், சென்னை; ஸ்ரீ எம். ராமலிங்கம், சூளை, சென்னை; ஸ்ரீ ரா. சிட்டிபாபு, சூளை, சென்னை; ஸ்ரீ கே. என். பாலபய்ய லாலா, சூளை சென்னை; ஸ்ரீ பி. ஆர். சாமிநாத ஐயர், சூளை, சென்னை; ஸ்ரீ என். பக்தவத்ஸலு முதலியார், பார்க் டவுன் சென்னை.

ஆக ரூ. 21 0 0

ஆக மொத்தம் 298 0 0

ஸ்ரீ கே. திருவேங்கட முதலியார் மிராசுதார், நீடூ டவுன், தஞ்சை 201 0 0

ஸ்ரீ மு. கந்தசாமிச் செட்டியார், எட்டயபுரம் 51 0 0

ஸ்ரீ எஸ். ஆர்எம். எம்டி. ஆர்எம். எம்டி. பழனியப்பச் செட்டியார், செட்டிநாடு 25 0 0

ஸ்ரீ கே. ராமகிருஷ்ண பி. எஸ். ஸி. (சென்றிங்) கார்ட்டூனிஸ்ட், 'கல்கி' காரியாலயம், சென்னை 15 0 0

ஸ்ரீமதி எம். பாகீரதி, 63, பெரிய செட்டித் தெரு, திருச்சி ரூ. 11 0 0

ரூ. 10—0—6 கொடுத்த அன்பர்கள் :—

ஸ்ரீ மணியம், சைத்திரிகர், 'கல்கி' காரியாலயம், சென்னை; ஸ்ரீ ராகவன், சைத்திரிகர், 'கல்கி' காரியாலயம், சென்னை; ஸ்ரீ சாமா, கார்ட்டூனிஸ்ட், கல்கி காரியாலயம், சென்னை; ஸ்ரீ டி. கே. வைத்தியலிங்க பத்தர், தண்டலை வைத்தியசாலை, மயிலாப்பூர், சென்னை.

ஆக ரூ. 40 0 0

ரூ. 5—0—0 அளித்த அன்பர்கள் :—

ஸ்ரீ கோவிந்தன் (விந்தன்) தம்புச் செட்டித் தெரு, சென்னை; ஸ்ரீ ரா. வீழிநாதன், உதவி ஆசிரியர், 'கல்கி' காரியாலயம், சென்னை; ஸ்ரீ சரவணன், சைத்திரிகர், 'கல்கி' காரியாலயம், சென்னை; ஸ்ரீ கே. வி. கோபாலகிருஷ்ணன், சேலம்; ஸ்ரீ கே.கே. சுப்பராயச் செட்டியார், ஸ்ரீ ராமகிருஷ்ணா மில்ஸ், மலையாண்டிப் பட்டணம். ஆக ரூ. 25 0 0

ரூ. 3—0—0 கொடுத்த அன்பர்கள் :—

ஸ்ரீ மெ. வ. ராமாமிருதம் அய்யர், (3-8-0) சின்ன சேலம்; ஸ்ரீ என். பி. எஸ். மணி, பூவனூர்; தஞ்சாவூர் ஜில்லா; ஸ்ரீ டி. கே. பாலகிருஷ்ணன், வண்ணையம்பதி, சென்னை.

ஆக ரூ. 9 8 0

ரூ. 2—0—0 கொடுத்த அன்பர்கள் :—

ஸ்ரீ ஏ. என். மணி, சூளைமேடு, கோடம்பாக்கம்; ஸ்ரீ ராதாகிருஷ்ணன், மண்ணடி, சென்னை; ஸ்ரீ சென்னப்ப நாயுடு, அமைந்தகரை, சென்னை; ஸ்ரீ ஆதிசேஷன் ஆள்வார்பேட்டை, சென்னை; ஸ்ரீ ஆர். கோவிந்தசாமி, அமைந்தகரை, சென்னை; ஸ்ரீ என். சிங்காரம், ராயப்பேட்டை, சென்னை; ஸ்ரீ என். டி. முத்து, மண்ணடி, சென்னை; ஸ்ரீ வரதன், புளியந்தோப்பு, சென்னை; ஸ்ரீ சீனிவாசன், சைதாப்பேட்டை, சென்னை; ஸ்ரீ என். துரைசாமி, அமைந்தகரை, சென்னை; ஸ்ரீ என். சிவலிங்கம் சிந்தாதிரிப்பேட்டை, சென்னை; ஸ்ரீ பி. வரதராஜன், குப்பத்துப்பாளையம்; ஸ்ரீ டி. கே. ராமசாமி, அயன்புரம், சென்னை; ஸ்ரீ கே. வீரராகவன், ராயப்பேட்டை, சென்னை; ஸ்ரீ கன்னியப்பன், ராயப்பேட்டை, சென்னை; ஸ்ரீ நடராஜ அய்யர், புது வண்ணையம்பதி; ஸ்ரீ பினாகபாணி, புரசைவாக்கம், சென்னை; ஸ்ரீ குப்புசாமி, புதுப்பேட்டை, சென்னை; ஸ்ரீ ஆர். துரைசாமி, சேத்துப்பட்டு, சென்னை; ஸ்ரீ பி. பி. பார்த்தசாரதி, மேட்டூர் அணை; ஸ்ரீ கே. என். சேஷாத்திரி எம். கண்ணனூர், திருச்சி ஜில்லா; ஸ்ரீ பி. கோவிந்த செட்டியார், உடையூர், ஆண்டிமடம் போஸ்டு; ஸ்ரீ கே. எஸ். சங்கரன், திருநெல்வேலி ஜங்ஷன்.

ஆக ரூ. 46 0 0

ரூ. 1—0—0 வழங்கிய அன்பர்கள் :—

ஸ்ரீ வி. ராமமூர்த்தி ஐயர், சைதாப்பேட்டை; ஸ்ரீ ஆர். ராதாகிருஷ்ணன், மயிலாப்பூர்; ஸ்ரீ டபிள்யூ.எம். செங்கல்வராயன், வாலாஜா பேட்டை; ஸ்ரீ எம். சிவசாமி, சைதாப்பேட்டை; ஸ்ரீ சி.என். ஞானசிரோமணி சைதாப்பேட்டை; ஸ்ரீ ஜே. எத்திராஜன், சைதாப்பேட்டை; ஸ்ரீ செ. ந. ஜகந்நாதன், வண்ணையம்பதி, சென்னை; ஸ்ரீ பி. எம். என். ரங்கசாமி, கரூர்; ஸ்ரீ என். விஜயன், திருவாரூர்; ஸ்ரீ எம்.பி. நாராயணசாமி நாயகர், ராயபுரம், சென்னை; ஸ்ரீ க. முத்துசாமி, ஆயிரம்விளக்கு, சென்னை; ஸ்ரீ வி. என். ஆறுமுகம், பழைய வண்ணையம்பதி, சென்னை; ஸ்ரீ எம். பி. கணேசன், அமைந்தகரை, சென்னை; ஸ்ரீ முனுசாமி, அமைந்தகரை, சென்னை; ஸ்ரீ டி. அங்கமுத்து, அமைந்தகரை, சென்னை; ஸ்ரீ வி. ஆதிகேசவலு, சேத்துப்பட்டு, சென்னை; ஸ்ரீ வி. கணேசன், திருவள்ளுவர்புரம், சென்னை; ஸ்ரீ கே. முருகன், திருச்சூலை கிராமம், பல்லாவரம்; ஸ்ரீ வி. எஸ். ராமன், ஜாபர்பூர்; ஸ்ரீமதி ஆர். ஜெயம்மாள், கொன்னோகரம்; ஸ்ரீ கே. எஸ். வெள்ளைச்சாமி, கச்சைகட்டி, சோழவந்தான்; ஸ்ரீ வி. எஸ். எம். ரங்கசாமிச் செட்டியார், (1-4-0) மேட்டுப்பாளையம்; டி. சதானந்தம், ராபர்ட்ஸன் பேட்டை, அடையார், சென்னை; ஸ்ரீமதி கமலாபாய், மேலூர், மதுரை ஜில்லா; கிராஞ்சி "அம்பிப் பயல்" போஸ்டாலூர், திருநெல்வேலி ஜில்லா. ஆக ரூ. 25 4 0

ஜோசியத்தின் மீது தனக்குள்ள நம்பிக்கையின்மையை வெளியிட்டது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம். நல்ல நாள், நல்ல நக்ஷத்திரம், சகுனம், சுப வேளை, யோகம், காலம், சூலம் இதெல்லாம் பார்த்துச் செய்யும் காரியங்கள் எத்தனையோ நடக்காமல் போய்விடுகின்றன. அல்லது நற்பலனைத் தருவதில்லை. அது மட்டுமல்ல, எதிர்பார்த்ததற்கு மாறாகக் கூடப் பலன் ஏற்படுவதுண்டு. இதன் நிமித்தம் ஜோசியர்கள் கூட குற்றவாளிகளாகக் கருதப் படுகிறார்கள். சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். தாய்மை அங்கே தாழ்த்தப் படுகிறது. பெண்ணினமும் வீண் பழியுங்கூட ஏற்பட்டு, வாழ்வில் வேதனையும் விசனமும் நிறைந்து, வெட்டியாகிறது. ஒருவனுடைய முன்னேற்றமும், வீழ்ச்சியும் அவனவன் அறிவையும், திறமையையும், சந்தர்ப்பங்களையும் பொறுத்தவை. நாள் பார்த்துக் காரியம் செய்வதற்குள் நல்ல நல்ல சந்தர்ப்பங்களும், விலைமதிக்க முடியாத காலமும் நம் கையை விட்டு நழுவி விடுகின்றன.

இம்மாதிரியெல்லாம் எத்தனையோ இடையூறுகளுக்கும் இன்னல்களுக்கும் இடம் கொடுத்து மதியைக் கெடுத்து வாழ்வை இழக்கச் செய்யும் இந்த வம்பு வார்த்தைகளுக்குத் தங்கள் பத்திரிகையில் கண்டிப்பாய் இடம் கொடுக்கவே கூடாது.

மக்களும் அந்த ராசிபலனில் மனம் மயங்கி மதியை இழந்து மந்த புத்தியுடன் வேலை செய்து நாட்டின் முன்னேற்றம் தடைபெறாத தடை செய்யக் கூடாதல்லவா? அந்த ஒரு காரணத்திற்காகவாவது அந்தப் பகுதியை ஆரம்பிக்காமலிருக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தியாகராயநகர்
9—1—50

ச. கு. மணியம்

[ஸ்ரீ எம். என். மணியின் "உங்கள் ராசி பலன்" என்னும் கட்டுரை 'ஹாஸ்யக் கட்டுரை' என்று எண்ணியே வெளியிடப்பட்டது. எனினும் அதைப்பற்றி நேயர்களில் சிலருக்குச் சந்தேகம் உதிக்கலாம் என்று தோன்றி, "கோள் என்ன செய்யும்?" என்ற குறிப்பையும் அதே இதழில் பிரசுரித்தோம். நாம் சந்தேகித்தபடியே, கட்டுரையின் கருத்துரையைப் பற்றி நேயர்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது. இது எப்படியானாலும், வாரந்தோறும் "உங்கள் ராசி பலன்" வெளியிடும் உத்தேசம் நமக்கில்லை,–இல்லவே இல்லை,–என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.–ஆசிரியர்.]

உங்கள் ராசி பலன்

இன்று வந்த 'கல்கி'யில் 'கோள் என் செய்யும்?' என்கிற தலைப்பின் கீழ் அருமையான கருத்துக்களை எழுதியிருக்கிறீர்கள். கல்கி பத்திரிகை ஆரம்பமான நாள் முதற்கொண்டு சென்ற இதழ் வரையில் தாங்கள் மேற்கண்ட உயரிய கருத்துக்களுக்கேற்ற முறையிலேயே பத்திரிகை பிரசுரித்து வந்திருக்கிறீர்கள். இன்றைய இதழில் "நல்ல நாள், நல்ல வேளை பார்ப்பதிலும், சகுனம் பார்ப்பதிலும், ஜோசியம்—ஜாதகம் பார்ப்பதிலும், எத்தனைக் காலத்தை வீணுக்கு இழக்கிறோம் என்பதைக் கணக்குப் பார்த்தால், அதன் மொத்தக் கணக்கு நம்மைப் பயங்கரத்தில் ஆழ்த்தி விடும்" என்று எழுதியிருக்கிறீர்கள். ஆனால் இதே இதழில் முற்றும் முதல் தடவையாக, 'உங்கள் ராசி பலன்—இந்த வாரம்' என்கிற ஓர் புது அத்தியாயத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள். தங்கள் கருத்து எனக்கு விளங்கவில்லை...

மேட்டுப்பாளையம்
7-1 50

அல்லாபக்ஷ்

★

நான் டில்லிமா நகரில் வசிக்கும் ஒரு தென்னாட்டவன். நான் பத்திரிகைகளில் வரும் கால பலன்களை முதலில் படித்துவிட்டுப் பிறகு சாவகாசமாக மற்றவைகளைப் பார்ப்பேன்.

வழக்கம் போல் 'கல்கி'யை நான் நேற்று (7-1-50) காலை 10 மணிக்குப் பெற்றேன். 'கல்கி' வந்தபோது என் நண்பர்களுடன் இருந்தேன். முதலில் பொருளடக்கத்தைப் பிரித்துப் பார்த்தேன். என் கண்கள் ராசி பலனுக்குச் சென்றன! உடனே 23-ம் பக்கம் பார்த்தேன். என் கண்கள் என் ராசியான கன்யா ராசிக்குச் சென்றன. அதைப் பார்த்த நான் மனம் நொந்து, "கல்கியில் வார பலன் ஆரம்பிக்கும் போதே இப்படி இருக்கின்றதே நமக்கு" என்று நினைத்தேன்.

என் நண்பர்கள் உடனே புஸ்தகத்தைக் கையில் வாங்கிக் கொண்டு "எய், முதலில் இருந்து பாருடா!" என்றார்கள். படித்துப் பார்த்த பின் ஒரு மணி நேரம் நாங்கள் விழுந்து விழுந்து சிரித்தோம்! நன்றாய் எழுதினார், ஐயா, எம். எஸ். மணி!

என் நண்பர்களிடம் 'இனி நான் கால பலனோ, ஜோஸ்யமோ பார்ப்பதில்லை' என்று சங்கல்பம் எடுத்துக் கொண்டேன்.

என் காலபலன் பார்க்கும் ஆசையைக் கரையேற்றிய எம். எஸ். மணிக்கு எங்கள் நண்பர்கள் அனைவரின் சார்பாக வணக்கம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புது டில்லி
8-1-50

சாம்பு

★

சென்ற 8—1—50-ம் தேதி கல்கி இதழில் 'என்ன சேதி'யைப் படித்ததும், 'நாள், நக்ஷத்திரம் பார்த்து நாட்டின் அரசியலை நடத்த நாங்கள் தயாராயில்லை' என்று நமது பிரதமர் ஜவாஹர் அவர்கள் சொல்லியதைப் பாராட்டி எழுதியதைக் குறித்துச் சந்தோஷப்பட்டேன். நம் முன்னுள்ள பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் நம் சமூகத்தில் மூண்டு கிடக்கும் மூடப் பழக்க வழக்கங்களும் முட்டாள்தனமான கொள்கைகளும் அடியோடு ஒழிய வேண்டும் என்ற முற்போக்கான அபிப்பிராயத்திற்கு அந்த எழுத்துக்கள் ஆதரவு தருவது போலிருந்தது. ஆனால் பக்கங்கள் சிலவற்றைப் புரட்டிப் பார்த்ததும் தலைப்பு ஒன்றைக் கண்டு திடுக்கிட்டேன்.

அசந்தே போய்விட்டேன். படித்துப் பார்த்தேன். அப்பொழுதும் சந்தேகம் தீர்ந்தபாடில்லை. ஏனெனில் அது பரிகாசமாகத்தான் எழுதப்பட்டது என்பதைத் திட்டமாகத் தீர்மானிக்க முடியாத வகையில் எழுதப்பட்டிருந்ததுதான். அதுவும் படிக்கும்போது, ஹாஸ்ய உணர்ச்சியால் இடையிடையே ஏற்படும் சிரிப்பைக் கொண்டே அதையும் ஊகிக்க வேண்டியிருந்தது. அதனால் எதையும் நிச்சயமாகக் கூற முடியாத நிலை ஏற்பட்டது.


'ஏரோப்ளேனைக் காட்டிலும் வேகமாகச் செல்லக்கூடிய சாதனம் ஏதாவது உண்டா' என்ற ஆராய்ச்சி மிகுந்த இருபதாவது நூற்றாண்டில் இந்த நாடு இவ்வளவு கீழான நிலையில் இருப்பதற்கு, நம்மவர்கள் பார்க்கும் இந்த நாள், நட்சத்திரம்—எவ்வளவு தூரம் ஜவாப்தாரி ஆகிறது என்பது தாங்கள் அறியாததல்ல. இதனால் காலம் எவ்வளவு விரயம் ஆகிறது என்பதை நித்திய வாழ்வில் தரிசனமாகக் காண்கிறோம். இதைக் குறித்து மகாகவி பாரதியாரும் எழுதியிருக்கிறார். சமீபத்தில் கூட, நமது ஒப்பற்ற மாபெருந் தலைவர் ராஜாஜி அவர்கள்,

யொன்று செய்து வைத்தனர். பின்னர் அக்கோவிலில், தம் சகோதரியும் தாய் ஞான ஆரோக்கியசாமி முதலியார் மனைவியுமாகிய ஞானசுந்தரியம்மாள் பெயரால் பெரிய கண்டா மணி சீமையிலிருந்து வரவழைத்துக் கோபுரத்திலமைத்தனர். மஞ்சகுப்பம் மைதானத்தில் தம் பாட்டனார் பெயரால் பெரிய மணிக் கூடொன்றும் அதற்கெதிரில் காஸ்மோ பாலிட்டன் கிளப்பில் தம் பெயரால் டென்னிஸ் கிளப் ஒன்றும் கட்டித் தந்தனர். அன்றியும் புதுவை மிஷன் வீதியில் தம் கணவர் பெயரால் ஒரு பெண் பாடசாலை ஏற்படுத்தினர். 1941-ம் ஆண்டில் தம் ஸ்வீகார புத்திரராகிய சிரஞ்சீவி விக்டோர் ஜகந்நாத முதலியாருக்குப் புதுவையில் இதுவரை நடக்காத முறையில் சிறப்பாகத் திருமணம் நடத்தித் தம் முத்தார் உயில் படி வாவும் செய்து வைத்து அவருடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்தார். பின்னர் அச்சுவிகார புத்திரரை வியாபார விருத்திக்காக ஐரோப்பாச் சுற்றுப் பிரயாணம் செய்து வர அனுப்பி வைத்தனர். சமீபத்தில் தமது ஸ்வீகார புத்திரருடைய புதல்வருக்கும், தமது தௌஹித்திரனுகிய ஞானப்பிரகாச சின்னையா ஆரோக்கிய சாமிக்கு மிக்க சிறப்பாகக் கர்ணபூஷணச் சடங்கு செய்தனர்.

இவ்வளவு வைபவங்களையும் மகிழ்வுடன் நடத்தி மஹாராணியாய் விளங்கிப் பெருவாழ்வு வாழ்ந்த தரும தேவதையாகிய ஸ்ரீமதி சாரதாம்பாள் அம்மாள் அவர்கள் 1949-ம் ஆண்டில் டிசம்பர் மாதம் 27-ந் தேதி வழக்கம் போல் படுக்கைக்குப் போகுமுன் தெய்வப் பிரார்த்தனை செய்து விட்டு உறங்கினர். பின் இரவு 3 மணிக்கு மயக்கம் ஏற்பட்டது. என்ன விதச் சிகிச்சை செய்தும் பயனின்றித் தம் அருமை ஸ்வீகார புத்திரர் சிரஞ்சீவி விக்டோர் ஜகந்நாத முதலியாரையும் தம் அருமைச் சிறிய தகப்பனார் அ. கருணேந்திர முதலியாரவர்களையும் சிறிய தாயார், தங்கை முதலிய பந்து மித்திரர்களையும் மனம் பதறப் பரிதவிக்க விட்டு விட்டு 28-ந் தேதி இரவு 9-15 மணிக்கு இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகை எய்தினர். இச் செய்தி நகரெங்கும் பரவவே இவருடைய சிறந்த மாளிகையில் ஐரோப்பியர்களும் கத்தோலிக் குருமார்களும் கன்னிகா ஸ்திரீகளும், பந்துக்களும், நண்பர்களும் ஊர் ஜனங்களும் கூட்டம் கூட்டமாய் வந்து மனமுருகித் துக்கசாகரத்திலாழ்ந்து தங்கள் கடைசி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர். 29-ந் தேதி மாலை 5 மணிக்கு இவரது சடலத்தைப் புஷ்பப் பல்லக்கில் வைத்துக் கத்தோலிக் குருமார்கள் வேத பாராயணஞ் செய்ய, மிலிடரி பேண்டு வாசிக்க, பந்து மித்திரர்களும், கவர்னர், மந்திரிமார் முதலான உத்தியோகஸ்தர்களும், ஆயிரக்கணக்கான நகரவாசிகளும் புடைசூழ நகர் வலமாகக் கொண்டு போய்க் கல்லறையிலடக்கஞ் செய்தனர். இவர் கல்வியறிவு சான்றவர். மேனகை என்னும் நாவல் இயற்றியவர். மிக்க தெய்வ பக்தி யுடையவர்; மதசம்பிரதாயப்படி நடந்து கொள்பவர். ஏழைகட்கிரங்குபவர்; இல்லையென்பவர்க் கில்லையென்னுதவர். ஆலயங்களில் நடைபெறும் அரிய உற்சவங்கட்குப் பொருளீந்தவர். இவர் மரணத்தினல் புதுவைக்கே பெரிய நஷ்டம் ஏற்பட்டதென்று சொல்லத்தகும். எல்லாம் வல்ல இறைவன் இவருடைய ஆன்மாவிற்குச் சாந்தி புரிவாராக!



படங்களில் நடித்த ஆந்திர நடிகையரில் ஸ்ரீமதி பானுமதி தலை சிறந்து விளங்குகிறார். ஜெமினியின் "அபூர்வ சகோதரர்கள்" என்னும் படத்தில் அவர் நடிப்புக் கலையின் சிகரத்தை அடைந்திருக்கிறார். நிமிஷத்துக்கு ஒரு தோற்றமும் கணத்துக்கு ஒரு முக பாவமும் காட்டி, தளுக்கும் குலுக்கும் மினுக்கும் மிடுக்குமாக அந்தப் படத்தில் ஸ்ரீமதி பானுமதி நடித்திருப்பதைத் தென்னிந்தியாவிலே மட்டுமன்றி வடநாட்டிலும் ஹிந்தி 'நிஷான்' மூலம் ஸினிமா ரஸிகர்கள் வியந்து மகிழ்கிறார்கள். "அபூர்வ சகோதரர்"களில் ஸ்ரீமதி பானுமதியின் அபூர்வ தோற்றங்கள் சிலவற்றை இங்கே வெளியிட்டிருக்கிறோம். "அபூர்வ சகோதரர்கள்" தெலுங்கு பாஷையில் "அபூர்வ சகோதருலு" என்ற நாமதேயத்துடன் இந்தப் பொங்கலன்று வெளியாகப் போவதறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.



காலமானார்



ஸ்ரீமதி சாரதாம்பாள் அம்மாள்

(புதுவை லூய் ஞான சின்னைய முதலியார் மனைவியார்)

இவர், பிரெஞ்சிந்தியாவின் தலைநகராகிய புதுவையில் ரோமன் கத்தோலிக் வகுப்பில் தோன்றி, பிரபல தனவந்த ராய் விளங்கியதோடு அரசாங்கத்தில் பல பெரியபதவி களைப் பெற்று, கீர்த்தியோடு வாழ்ந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் லூய் சின்னையா ஞானப்பிரகாச முதலியார் அவர்க ளுக்குத் தௌத்திரியாயும் ஸ்ரீமான் திவ்வியசாமி முதலியார் ஸ்ரீமதி பொன்னுசுந்தரத்தம்மாள் இவர்களுக்கு ஜேஷ்ட புத்திரியாயும் 1902-ம் ஆண்டு டிசம்பர் 1-ந்தேதி ஜனனமானார். தம் பாட்டனாரால் இடப்பட்ட சாரதாம்பாள் என்னும் செல்லப் பெயராலேயே இவர் யாவராலும் அழைக்கப்பட்டு வந்தார்.

இவர் புதுவை ஜோசப்பிய கன்னிகாமாடக் கல்விச்சாலையில் பிரஞ்சு மொழியும், தமிழ் மொழியும் பயின்றார். 1916ம் வருஷம் இவருக்கும் இவர் தாயுடன் பிறந்த ஸ்ரீமான் லூய் ஞான சின்னைய முதலியாரவர்கட்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.... இவர்கள் இல்வாழ்வை மனமகிழ்வுடன் நடத்தி வருங்கால் 1927ம் ஆண்டில் நமது கணவர் விட்டுலக மெய்தினர். அப்பொழுது இவர் அடைந்த துன்பத்திற்க் களவேயில்லை. அச்சமயம் குடும்பத் தலைவராயும், பிரஞ்சிந்தியாவில் பல அரிய பெரிய பதவிகளைப் பெற்றவராயும் - தம் கணவர் தமையனாராயும் விளங்கிய ஷெவாலியே தெனா மெழிபோந் தோனேர், ஸ்ரீமான் லூய் ஞான ஆரோக்கியசாமி முதலியாரவர்கள் தேறுதல் கூறி தாளாண்மையின் மனவருத்தத்தை மாற்றினர். மறுபடியும் (பெரிய பூகம்பம் ஏற்பட்டதைப்போல்) தேறுதல் கூறிக்கொண்டு வந்த அவரும் இவ்வுலக வாழ்வை நீத்தனர். இச்சமயத்தில் குடும்பமே மிக்க துக்கசாகரத்திலாழ்ந்தது. அப்பொழுது... தைரியமாய் ஆதினத்தைக் கைவிடாமல் (மதுரையை ஆண்ட மங்கம்மாள் போல) தமது பிரிய தகப்பனார் ஸ்ரீமான் கருணேந்திர முதலியார் உதவியைக் கொண்டு ல்விகாரப் பிள்ளைகளைக் கண்காணித்து அவர்களை நல்வழிக்குக் கொண்டு வந்ததுடன் இந்திய பூமியையிலும், பிரஞ்சி பூமியையிலுமுள்ள ஆதீனச் சொத்துக்களையும், புதுவையிலுள்ள கன்னடி பங்களா முதலிய சிறந்த கட்டிடங்களையும் தம் முன்னோர் கண்காணித்ததைப்போலக் குறைவறமிகச் சிறப்பாகக் கண்காணித்து வந்தார்.

தம் மூத்தார் கருத்துப்படி புதுவைக் கோவிலில் விளங்கும் அர்ச் ஜென்மமிராக்கினி மாதாவிற்கு இலட்ச ரூபாய் பெறும்படியான வைர முடி



தமிழ்நாடும் ஆந்திர மாகாணமும் பிரிந்து போவதற்கு அரசியல்வாதிகள் தீவிர முயற்சி செய்து வருகிறார்கள். பிரிவினை விரைவில் நேர்ந்துவிடும் என்றும் தோன்றுகிறது. ஆனால் கலைத்துறையில் மட்டும் தமிழ் நாடும் ஆந்திர தேசமும் என்றைக்கும் ஒன்று பட்டு நிற்கும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய ஒருமைப்பாட்டின் அஸ்திவாரத்தை ஸ்ரீ தியாகராஜர் அசைக்க முடியாதபடி அமைத்துவிட்டுப் போனார். நம்முடைய நாட்களில் ஸினிமாக்கலை ஆந்திரர்களையும் தமிழர்களையும் ஒன்றுபடுத்தி வருகிறது. ஆந்திரநாட்டு நட்சத்திரங்கள் தமிழ் கற்று, தமிழ்ப் படங்களில் நடித்துப் புகழ் பெற்று வருகிறார்கள். தமிழ்ப் படங்களைத் தெலுங்கு பாஷையில் பெயர்த்து வெளியிடுவதின்மூலம் ஸினிமா முதலாளிகள் ஆந்திர-தமிழ் ஒற்றுமைக்கு உதவி செய்து வருகிறார்கள். தமிழ்ப்





உலகம் பலவிதம் - பானுமதியும் பலவிதம்!

ஸ்ரீ ராமச்சந்திரனின் ஹாஸ்ய நடிப்பு உயர்தரமான அமெரிக்க ஹாஸ்ய நடிகர்களின் நடிப்புக்கு இணையாக இருக்கிறது. தாம் சிரிக்காமல் மற்றவர்களைச் சிரிக்கச் செய்யும் சக்தியை அவர் பூரணமாக இந்தப் படத்தில் பிரயோகப்படுத்தியிருக்கிறார். குழந்தையின் அழுகையை நிறுத்த விளையாட்டுக் காட்டும் கட்டமும், தூங்கிக் கொண்டே தொட்டில் ஆட்டும் இடமும் அவருடைய ஹாஸ்ய நடிப்பின் சிகரங்கள்.

ஸ்ரீ சாரங்கபாணி 'அந்தக் காலத்திலே அவர் காலேஜிலே படித்துக் கொண்டிருந்த போது' என்ன நடந்தது என்பதைக் கடைசி வரையில் மர்மமாகவே வைத்திருந்து நம்மைத் திணற அடிக்கிறார். இதற்குத் தண்டனையாக அவரை 'இந்தக் காலத்திலே காலேஜில் படிப்பதற்கு அனுப்ப வேண்டும்' என்று தோன்றுகிறது. அதிலும் அண்ணாமலை சர்வகலாசாலைக்கு அனுப்பி வைப்பது மிகவும் பொருத்தமாயிருக்கும்.

பொல்லாத மூர்த்தியாக நடித்திருக்கும் ஸ்ரீ ஸகஸ்ரநாமம் ரொம்ப ரொம்பப் பொல்லாதவராக மிக நல்ல முறையில் நடித்திருக்கிறார். அபலைப் பெண் மீனாக்ஷியின் அவதியைப் பார்க்கும் போது மூர்த்திக்கு ஒரு ஸகஸ்ரநாம அர்ச்சனை செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. அவ்வளவு கல்நெஞ்சம் படைத்த வஞ்சகன் திடீரென்று ஒரு க்ஷணத்தில் மனம் மாறி விடுவது மட்டும் கொஞ்சம் நம்பத் தகாததாகவே இருக்கிறது. அவனுடைய மனமாற்றமும் ஒரு ஏமாற்றமோ என்று எண்ணுகிறோம். போகட்டும்; மீனாக்ஷியின் காலில் வந்து கடைசியில் சரணாகதி என்று விழுகிறானே, அதற்காக அவன் திடீரென்று மாறிய குற்றத்தையும் மன்னித்து விடலாம்.

ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு காட்சி ஜோடனை ஆகியவற்றைக் குறித்துக் கேட்டால், ஒரு தடவை படம் பார்த்தவர்கள் அபிப்பிராயம் ஒன்றும் சொல்ல முடியாது. இவற்றிலெல்லாம் நம்முடைய கவனம் செல்லவேயில்லை. ஒன்றன்பின் ஒன்றாக மோதி அடித்துக் கொண்டு வரும் நிகழ்ச்சிகள் நம்முடைய கவனத்தை முழுதும் கவர்ந்து விடுகின்றன. ஓரிடத்திலாவது கதை தடைப்பட்டு நிற்கவில்லை. படத்தில் வரும் பாட்டுக்களைப் பற்றிக் கேட்டால் கூட, ஒரே ஒரு பாட்டுத்தான் நம் நினைவுக்கு வருகிறது.

"உன் கண்கள் உன்னை ஏமாற்றினால், டடடா டடடா டடாடடா!"—இதுவும் கதாநாயகன் ஒரு தடவையும் கதாநாயகி ஒரு தடவையும் பாடியிருப்பதனால்தான் நம்முடைய ஞாபகத்தில் நிற்கிறது. கதை நிகழ்ச்சிகள் ஓடுகிற ஓட்டத்திலும் மேலே நடக்கப் போவதைப் பற்றி நமக்கு உண்டாகிற பரபரப்பிலும் ஆர்வத்திலும், டாட்டாவது, ராகமாவது? அந்தப் 'பாட்டாளி மவன்' கல் உடைத்துக் கொண்டே சோகம் ததும்பப் பாடியிருக்கிறானே, அவன் பாடியிருப்பது என்ன என்பது கூட நம் நினைவில் நிற்கவில்லை.

படத்தின் விறுவிறுப்பு காரணமாக, நம்முடைய கண்கள், நம்முடைய செவிகள், நம்முடைய உள்ளம்—எல்லாம் ஓரளவு ஏமாந்து போய்விடுகின்றன! இரண்டாந் தடவை படத்தைப் பார்த்த பின்னர்தான் ஏமாற்றம் தெளிய வேண்டும்.


ஆனால் ஒரு விஷயத்தைப் பற்றிய வரையில் நம்முடைய கண்களும் காதுகளும் நம்முடைய உள்ளமும் கூட நம்மை ஏமாற்றவில்லை; உண்மையை உள்ளபடி அறிந்து நமக்கு ஐயமறத் தெரிவித்திருக்கின்றன. அந்த உண்மை தமிழ் ஸினிமாவுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது என்பதுதான்! அதற்கு "வாழ்க்கை"ப் படம் ஒரு நிலை சிறந்த உதாரணமாய் அமைந்திருக்கிறது.



ஸ்டேஷன் மாஸ்டர்:—எந்த இடங்களில் எல்லாமோ எதிரெதிரே வந்து ரயில்கள் மோதிக்கொண்டன என்று படித்தீர்கள். ஆனால் நான் வந்த நாளாக இந்த லயனில் ஒரு ரயில் மற்றொரு ரயிலோடு மோதிக் கொண்டது என்ற பேச்சே கிடையாது!

மற்றவர்:—அவ்வளவு ஒழுங்காக நீங்கள் பார்த்துக் கொள்கிறீர்கள் போலிருக்கிறது!

ஸ்டேஷன் மாஸ்டர்:—அது இல்லை. இந்த லயனில் எப்பொழுதும் ஒரே ஒரு வண்டிதான் ஓடுகிறது!



மாக அந்த ஏழைப் பெண்ணின் தலையில் சுமந்து கொண்டே போகிறது.

பட்டணத்தில் பிறந்து வளர்ந்த மேனகா என்னும் நாகரிகப் பெண் ஆடலும் பாடலும், நடனமும் நடிப்பும், நாவலும் படிப்புமாகச் சந்தோஷ வாழ்க்கை நடத்தி வருகிறாள். மீனாக்ஷியைக் கெடுத்த அதே மூர்த்தி இந்தப் பணக்காரப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள முயற்சிக்கிறான். ஆனால் அந்தப் பெண்ணோ தன் உள்ளத்தை 'அசோகன்' என்னும் புனைபெயர் கொண்ட கதை ஆசிரியனுக்குப் பறி கொடுத்து விடுகிறாள். (கதை ஆசிரியர்கள் பாடு யோகந்தான்! இப்படி ஒரு ஸினிமாப் படத்திலாவது அவர்களை அதிர்ஷ்டம் தேடிக்கொண்டு வந்திருக்கிறதல்லவா?)

ஆகையால் மூர்த்தியின் நோக்கம் நிறைவேறுகிற வழியாக இல்லை.

அசோகன் மோட்டார் ஓட்டிக் கொண்டு போய் ஓரிடத்தில் நிறுத்தி யிருந்தபோது மீனாட்சி தன் குழந்தையை அந்த மோட்டாரின் பின்பக்கத்துப் பெட்டியில் வைத்து விட்டுக் கடலில் விழப் போகிறாள்.

குழந்தையை அசோகன் பார்த்ததும் "மோட்டார் வண்டி பிள்ளைபெற ஆரம்பித்து விட்டதா?" என்று ஆச்சரியப்படுகிறான்.

பிறகு நடக்கும் நிகழ்ச்சிகளை வெள்ளித் திரையில் பார்த்துத் தெரிந்து கொள்க. இது வரையில் படம் பாராதவர்களுக்குத் தான் சொல்கிறோம்; படம் நல்லவிதமாகவும் சுபமாகவும் முடிகிறது என்பதை மட்டும் இங்கே குறிப்பிட்டு வைக்கிறோம்.

• • •

பட்டணத்துப் பெண்ணாக நடிக்கும் குமாரி வைஜயந்திமாலா ஸினிமா வானத்தில் திடீரென்று உதயமாகிச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரமாக விளங்குகிறாள். அவள் நடித்திருப்பது இது முதல் படமாயிருந்தும் முதல்தரமாக நடித்துச் சிறந்த புகழுக்கு உரியவளாகியிருக்கிறாள். குமாரி வைஜயந்திமாலாவின் ஒயிலான நடையும் மயில்தோகை உடையும் உல்லாச நடிப்பும் சல்லாபப் பேச்சும் அவள் கண்ணால் சிரிப்பதும் பண்பாடிக் குதிப்பதும் சிங்காரம் கொட்டிக் கொம்மாளம் அடிப்பதும் "வாழ்க்கை"யை மிகக் கவர்ச்சிகரமான படமாக்கி, ஒரு தடவை பார்த்தவர்களை மறு தடவையும் பார்க்கும்படி தூண்டுகிற சாதனங்களாகின்றன. ஒரு படத்தில் கதாநாயகியாக நடிப்பதற்குரிய சகல அம்சங்களும் வைஜயந்திமாலாவிடம் பொருந்தியிருக்கின்றன. பேச்சில் சரளம் இருக்கிறது; குரலில் இனிமை இருக்கிறது; முகத்தில் களை இருக்கிறது; கண்ணில் ஒளி இருக்கிறது; நடிப்பில் இயற்கை இருக்கிறது.

இந்த நல்ல அம்சங்களையெல்லாம் நன்கு சோபிக்கும்படி செய்திருக்கும் ஸ்ரீ 'மேனா'வின் டைரக்ஷன் திறமையை மீண்டும் பாராட்டத் தோன்றுகிறது.

கிராமத்துப் பெண் மீனாட்சியாக நடிக்கும் ஸ்ரீமதி திரௌபதி வாழ்க்கையின் கஷ்டங்களைப் பொறுக்க முடியாமல் கடலில் மூழ்குகிறாள். அவளுடைய சோக நடிப்பினால் நம்மையும் துயரக் கடலில் ஆழ்த்தி விடுகிறாள். அவளுடைய துயரம் ததும்பும் முகபாவமே நம் உள்ளத்தை உருக்கிவிடுகிறது. அவளுடைய கனிவு ததும்பும் வார்த்தைகள் நம் கண்ணில் கண்ணீரை வருவித்து விடுகின்றன. ஆனால் அவள் அழுகிறபோது 'கேவுதல்' சத்தம் அளவுக்கு அதிகமாயிருக்கிறது. அந்தச் சத்தம் குறைவாக இருந்திருந்தால் படம் பார்ப்பவர்களின் உள்ளங்கள் உடைந்தே போகும். 'பார்ப்பது ஸினிமா' என்பதை அந்தக் 'கேவுதல்' சத்தம் சில இடங்களில் ஞாபகப் படுத்துகிறது.



உயர்தரமான படங்கள் கொண்டு வருவதையே இலட்சியமாக வைத்துக் கொண்டிருக்கிறார். "சபாபதி" என்னும் படத்தை நாம் மறக்கவே முடியாது. அதில் அத்தனை உயர்தர ஹாஸ்யமும், நடிப்புத் திறமையும் ததும்பி யிருந்தன. பட்டணங்களில் வசித்த படித்த வகுப்பைச் சேர்ந்த ரஸிகர்கள் அப்படத்தைப் பெரிதும் அநுபவித்தார்கள். கொஞ்சங்கூட ஆபாசக் கலப்பில்லாத உயர்தரமான முழு ஹாஸ்யப் படத்தைக்கொண்டு வந்ததற்காக ஸ்ரீ 'மேனா' வைப் பாராட்டினார்கள். ஆனால் ஆங்கிலம் படியாதவர்களும் கிராம வாசிகளும் அவ்வளவாக அந்தப் படத்தின் நகைச்சுவையை அறிந்து அநுபவிக்க முடியவில்லை. ஆகையால் படம் நல்ல படமாயிருந்தாலும் பணம் அதிகம் கிடைக்கவில்லை. எனவே, "உயர்தரமாய்ப் படம் கொண்டுவந்தால் 'மேனா' வுக்கு சேர்ந்த கதிதான்" என்று பட முதலாளிகள் சொல்லும்படியாயிற்று.

ஆனால் மற்றவர்கள் இப்படிப் பேசினார்களே தவிர, ஸ்ரீ மெய்யப்பச் செட்டியார் தமது இலட்சியத்தைக் கைவிட்டு விடவில்லை. "படமும் உயர்தரமா யிருக்க வேண்டும்; பார்ப்பவர்களும் அதிகமாக வரவேண்டும்" என்ற இருவகை நோக்கத்துடன் மேலும் மேலும் முயற்சிகளைச் செய்து வந்தார். சில படங்களில் அந்த நோக்கங்கள் நிறைவேறவில்லை; சில படங்களில் ஒருவாறு நிறைவேறின. கடைசியாக, இந்த "வாழ்க்கை"ப் படத்திலே ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரின் வாழ்க்கை நோக்கம் பரிபூரணமாக நிறைவேறி யிருக்கிறது.


"வாழ்க்கை" மிக உயர்தரமான படம்; குற்றமற்ற நகைச்சுவை ததும்பும் படம்; கொஞ்சங்கூட ஆபாசக் கலப்பில்லாத, விரஸமில்லாத, தூய்மையான படம்; விறுவிறுப்பான கதைப் போக்கு அமைந்த படம்; குதூகலமும் சோகமும் சகடக்கால் போல் மாறி மாறி வந்து உணர்ச்சி மயமாக உள்ள படம்; ஆடல் பாடல் நிறைந்த படம்; நடிப்புத் திறமையும் டைரக்ஷன் திறமையும் நன்கு வெளியாகும் படம்; உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட, சிறந்த போதனைகள் வாய்ந்த படம்; இவ்வளவு நல்ல அம்சங்களோடு, சகல ஜனங்களையும் திருப்தி செய்யக் கூடிய கவர்ச்சிகரமான படமாகவும் "வாழ்க்கை" அமைந்திருக்கிறது.

ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பர் படத்தொழிலில் தமது பழைய அநுபவங்களை யெல்லாம் படிப்பினையாகக் கொண்டு, சேர்க்க வேண்டியவைகளை யெல்லாம் சேர்த்து, தள்ள வேண்டியதை யெல்லாம் தள்ளி, ஒரு மோகனக் கதம்பப் படமாக "வாழ்க்கை"யைக் கொண்டு வந்து சிறப்பான வெற்றியும் அடைந்திருக்கிறார். அவருக்கு நம்முடைய மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

* * *

பட்டணத்தில் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணின் உல்லாச வாழ்க்கையும், கிராமத்தில் கடன்பட்ட ஏழைக்குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணின் துன்பமயமான வாழ்க்கையும் இந்தப் படத்தில் ஒன்றோடொன்று ஊடுருவிப் பின்னிக் கொண்டு செல்லுகின்றன.

கிராமத்தில் பிறந்து வளர்ந்த கள்ளங்கபடற்ற சாதுப்பெண் மீனாக்ஷி. அவளை வஞ்சித்துக் கெடுப்பதற்கு ஒரு பட்டணத்து வாலிபன் வந்து சேருகிறான். பத்தாயிரம் ரூபாய் பணத்துடன் வந்து அவள் தந்தையின் கடனைத் தீர்த்து அவளையும் கலியாணம் செய்து கொள்வதாக அந்த வாலிபன் கூறிய வார்த்தையை நம்பி அவள் மோசம் போகிறாள். வயிற்றிலே குழந்தையுடன் தன்னைக்கெடுத்த மூர்த்தியைத் தேடிப் பட்டணத்துக்குப் போகிறாள். ஆஸ்பத்திரியில் பிரசவம் ஆகிறது. கஷ்டத்துக்குமேல் கஷ்ட



"அந்தக் காலத்திலே நான் காலேஜில் படித்தபோது........"

"வாழ்க்கை" அபாரம்!

கர்நாடகம்

சென்ற போன 1949-ம் வருஷம் தமிழ்ப் படக் கலைக்கு மிகவும் அதிர்ஷ்டமான வருஷம் என்று சொல்லவேண்டும். "தமிழ் நாடு மற்றும் பல துறைகளில் மேன்மையடைந்திருக்கும்போது ஸினிமாத் துறையில் மட்டும் முன்னேற்றமின்றிப் பின் சென்று வருகிறதே!" என்று நம்மில் பலர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். அந்தக் கவலையை 1949-ம் வருஷம் ஏறக்குறையத் தீர்த்து விட்டது. பல நல்ல தமிழ் டாக்கிகள் சென்ற ஆண்டில் வெளியாகி நம்மை மகிழ்வித்திருக்கின்றன. சந்திரலேகா, நல்லதம்பி, வேலைக்காரி, அபூர்வ சகோதரர்கள் ஆகிய படங்கள் தமிழ் ஸினிமாக்களின் தரத்தையே உயர்த்தித் தமிழ் நாட்டுக்குப் பெருமை அளித்தன. கடைசியாக, அவை எல்லாவற்றையும் ஒருபடி மிஞ்சக்கூடியதாக, "வாழ்க்கை" என்னும் தமிழ்ப் படம் வெளியாகித் தமிழ் நாட்டு ரஸிகர்களைக் குதூகலத்தில் ஆழ்த்தி யிருக்கிறது.

இவ்வாறு 1949-ம் ஆண்டில் தமிழ் நாடு ஸினிமாத் துறையில் அடைந்த மேன்மை நெடுநாளும் நீடித்திருக்குமென்று நம்புவோம்.

* * *

"வாழ்க்கை" ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்களால் அவருடைய சொந்த ஏ. வி. எம். ஸ்டுடியோவில் எடுத்த படம். அவரே டைரக்ட் செய்த படம். இத்தகைய படம் மேலான படமாக அமைந்து வெற்றியும் அடைந்திருப்பதில் நாம் விசேஷத்திருப்தியடையக் காரணம் உண்டு.

ஸ்ரீ ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் ஸினிமா உலகில் பிரவேசித்ததிலிருந்து

அட்டைப்பட விளக்கம்

முத்து விளைவது ★ ★ ★
★ ★ ★ கொற்கையில் மட்டுமா?

கொற்கை என்கிற ஊர் இப்போதும் திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது.

திருச்செந்தூருக்குப் பக்கமாகக் கடற்கரை ஓரத்தில் இருக்கிறது. இன்றும் அதன் பக்கத்தில் உள்ள கடலில்தான் முத்துச் சலாபம் குழிக்க சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

இரண்டாயிரம் மூவாயிரம் வருஷத்துக்கு முன்னும் கொற்கையில் முத்தெடுத்தார்கள். ஏராளமாய் எடுத்தார்கள். குவியல் குவியலாக வைத்து வியாபாரிகள் விற்றுக் கொண்டிருந்தார்கள். வாங்குவதற்காகப் பல தேசத்து வியாபாரிகளும் வந்தார்கள். அரசர்களுமே வருவது வழக்கம்.

வந்தவர்கள் கப்பலில் ஏற்றியும் குதிரைகளில் ஏற்றியும் முத்துக்களை அவரவர்கள் தேசத்துக்குக் கொண்டு போனார்கள்.

கிழக்கே பர்மா, சைனா, ஜப்பான் முதலிய தேசங்களுக்குக் கொண்டுபோனார்கள். வடக்கே காசி காஷ்மீரம் வரைக்குமே கொண்டு போனார்கள். மேற்கே பாரசீகம், அரேபியா, ரோமாபுரி முதலான இடங்களுக்கும் கொண்டு போனார்கள்.

ஆகவே கொற்கை என்றால் முத்துத்தான், முத்து என்றால் கொற்கைதான் அந்தப் பூர்வமான பாண்டியர்களது காலத்தில்.

மதுரையைப் போலவே கொற்கையும் தலை நகரமாய் இருந்தது பாண்டியர்களுக்கு.

•   •   •

ஒரு காதல் நாடகத்தைப் பார்க்கலாம்:

கொற்கைக்குப் பக்கத்தில் ஒரு ஊர். பாண்டியன் அந்த ஊர்வழியாகக் குதிரை மேல் ஏறி மெள்ளச் செல்லுகிறான்.

அவனைப் பூந்தோட்டத்தில் பூக்கொய்து கொண்டிருந்த ஒரு சின்னஞ்சிறு பெண் பார்த்தாள். காதல் கொண்டு விட்டாள்.

பாண்டிய மன்னனை ஒரு பட்டிக்காட்டுப் பெண் காதலித்துக் கலியாணம் செய்து கொள்ள முடியுமா? நடக்கக் கூடிய காரியமா? அல்லதானே?

ஆகவே அப்பெண் வீட்டுக்குள்ப் போகிறாள்; ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு கண்ணீர் வடித்த வண்ணமாய் இருக்கிறாள்.

விஷயம் இன்னதென்று செவிலித் தாயர்கள் தெரிந்து கொண்டார்கள். ஆனால் அவர்கள் செய்யக்கூடிய காரியம் ஏதேனும் உண்டோ! இல்லை.

ஆனாலும் பெண்ணின் துயரத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. அத்தனை பரிதாபம் அவர்களுக்கு.

ஒரு செவிலி மற்றச் செவிலியர்களைப் பார்த்துப் பேசுகிறாள்:—

சிப்பியில் இருந்து (இப்பியில் இருந்து) முத்து பிறக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்த முத்துக்கள் கொற்கையில்தான் உண்டென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அப்படிச் சொல்லவேண்டியதாக இல்லை.

இப்பியீன்(று) இட்ட
  எறிகதிர் நித்திலம்,
கொற்கையே அல்ல
  படுவது,—கொற்கைக்
குருதிவேல் மாறன்
  குளிர்சாந்(து) அகலம்,—
கருதியார் கண்ணும்
  படும்.

— முத்தொள்ளாயிரம்

[இப்பி ஈன்று இட்ட எறிகதிர் நித்திலம்: சிப்பியில் இருந்து உண்டான நிலவுபோன்ற கிரணங்களை வீசும் முத்துக்கள்; கொற்கையே அல்ல படுவது: கொற்கையிலே மாத்திரம் உண்டென்று சொல்லக் கூடாது; கொற்கைக் குருதிவேல் மாறன்: கொற்கைக்கு அதிபதியான இரத்தம் தோய்ந்த வேல் ஏந்திய பாண்டியனது; குளிர் சாந்து அகலம்: குளிர்ந்த சந்தனம் பூசிய மார்பை; கருதியார் கண்ணும் படும்: கருதிக் காதல் நோயுற்ற பாண்டிய நாட்டுப் பெண்களது கண்களிலும் காணலாம்.]

வடித்த கண்ணீர்த் துளிகளே முத்துக்கள் என்று சொன்னதில் ஒரு சோக பாவம். இந்தச் சோகத்தில் ஹாஸ்யச் சாயலும் கலந்து கிடக்கிறது.

•   •   •

அட்டைப் படத்தில் கண்ணீர் வடிக்கும் பெண்ணைப் பார்க்கிறோம். கண்ணீரைத் துடைக்கக் கையில் எடுத்த முந்தானையையும் பார்க்கிறோம்.

புறப்படலமாக, கொற்கையில் உள்ள முத்துக் கடை வியாபாரி என்ன, வாங்க வந்திருக்கும் அரசர் என்ன, முத்தை ஏற்றுமதி செய்வதற்கான படகுகள் என்ன, எல்லாவற்றையும் பார்க்கிறோம்.

பாண்டிய நாட்டுப் பூர்வ சரித்திரம் நம்முடைய கண் முன்னால் வருகிறது.

ஒரு பரிசுத்த இயக்கமாகக் கருதி அதில் ஈடுபட்டிருக்கிறேன். அவி சகோதரர்களிடம் என்னைப் பூரணமாக ஒப்புவித்திருக்கிறேன். பம்பாயில் நடந்த இந்த இரண்டு நாள் இரத்தக் களரியில் முஸ்லிம்கள் அதிகப் பங்கு எடுத்திருப்பதாக அறிந்து என் மனம் வருந்துகிறது. ஒவ்வொரு முஸ்லிமையும் நான் மன்றாடி வேண்டிக் கொள்கிறேன். இந்த இரத்தக் களரியைத் தடுத்து நிறுத்த அவர்கள் முழு முயற்சியும் செய்யவேண்டும்.

கடவுள் நமக்கு நல்லறிவையும் நல்ல காரியத்தைச் செய்வதற்கு வேண்டிய தைரியத்தையும் அளிப்பாராக.

இங்ஙனம், உங்கள் ஊழியன்,
எம். கே. காந்தி"

மேற்கண்ட விண்ணப்பத்தை மகாத்மா காந்தி எழுதிக் கொடுத்தார். அதை இங்கிலீஷ், குஜராத்தி, மராத்தி, உருது ஆகிய நாலு பாஷைகளிலும் அச்சிட்டுப் பம்பாய் நகரம் முழுவதும் ஆயிரக்கணக்கான பிரதிகள் விநியோகித்தார்கள். இந்த முயற்சிக்கு ஒரு நாள் முழுதும் ஆகி விட்டது. பலன் இன்னும் தெரிந்த பாடில்லை. மகாத்மாவோ தண்ணீரைத் தவிர வேறொன்றும் அருந்தவில்லை. ஒரு நிமிஷங்கூடச் சும்மா இருக்கவும் இல்லை. ஊழியர்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தார்கள். தாங்கள் செய்த காரியங்களைச் சொல்லி விட்டு, செய்ய வேண்டியதற்கு யோசனை கேட்டுக் கொண்டு போனார்கள். "உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்ததிலிருந்து என் மனம் அமைதியடைந்திருக்கிறது. களைப்பே தெரியவில்லை!" என்று மகாத்மா அடிக்கடி தம் சகாக்களிடம் கூறினார்.

உண்ணாவிரதம் ஆரம்பித்ததோடு மகாத்மா நிற்கவில்லை. ஸ்ரீ தேவதாஸ் காந்திக்குத் தந்தி கொடுத்து வரவழைத்தார். தம்முடைய உண்ணாவிரதத்தினாலும் பம்பாய்க் கலகம் நிற்காமற் போனால் அஹிம்சையை நிலை நாட்டுவதற்காகத் தமது குமாரனைப் பலியாக அனுப்பப் போவதாகச் சொன்னார்.

இதைக் கேட்ட மகாத்மாவின் சகாக்கள் பெரிதும் வருத்தமடைந்தார்கள். அமைதியை நிலை நாட்டுவதற்காகப் பிரம்மப் பிரயத்தனம் செய்தார்கள். ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, மௌலானா ஆஸாத் ஸோபானி, ஸ்ரீ சங்கர்லால் பாங்கர், ஸ்ரீ பரூச்சா ஆகியவர்கள் பம்பாய் நகரமெல்லாம் பம்பரம் போலச் சுழன்றார்கள். ஜனங்களின் பலாத்காரம் காரணமாக மகாத்மா பட்டினி கிடப்பதை எடுத்துரைத்தார்கள். எங்கேயாவது கலகம் நடக்கும் போலிருப்பதாகச் செய்தி வந்தால் அந்த இடத்துக்குப் பறந்து ஓடினார்கள். ஜனங்களிடம் பேசிக் கலகம் நேராமல் தடுத்து அமைதியை நிலை நாட்டினார்கள்.

மறுநாள் 20-ந் தேதி மகாத்மாவின் ஜாகையில் பம்பாய்ப் பிரமுகர்களின் கூட்டம் ஒன்று நடந்தது. ஹிந்து, முஸ்லிம், பார்ஸி பிரமுகர்கள் வந்திருந்தார்கள். அமைதி நிலைநாட்டும் வழிகளைப் பற்றி விவாதங்கள் நடந்தன. பார்ஸிகள் சிறுபான்மையோரான படியாலும், முதலில் தாக்கப்பட்டவர்களான படியாலும், சமாதானத்துக்குப் பார்ஸிகள் சொல்லும் நிபந்தனைகளை மற்ற வகுப்பார் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று காந்திஜி சொன்னார். அதை முதலில் மற்றவர்கள் மறுத்தார்கள். மகாத்மா வற்புறுத்தியதால் இணங்கினார்கள். பார்ஸிகளிடம் சமாதானம் ஏற்படுத்தும் பொறுப்பை ஒப்புவித்ததும் அவர்களும் நியாயமான நிபந்தனைகளையே சொன்னார்கள். மற்றவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

அன்று சாயங்காலம் மோட்டார் லாரிகளில் ஹிந்து-முஸ்லிம்-பார்ஸி பிரமுகர்கள் கோஷ்டி கோஷ்டியாக ஏறிக் கொண்டு நகரெங்கும் சுற்றினார்கள். சமூகங்களுக்குள் நல்லபடியான சமாதானம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிவித்துக் கொண்டே போனார்கள்.

இவ்விதம் எல்லாப் பிரமுகர்களும் தீவிர முயற்சி செய்ததின் பயனாக, இரண்டு நாளில் பம்பாய் நகரமெங்கும் பூரண அமைதி ஏற்பட்டு விட்டது.


21-ந் தேதி இரவு பம்பாயில் பலாத்கார நிகழ்ச்சி ஒன்று கூட நடைபெறவில்லை என்று தெரியவந்தது.

22-ந்தேதி காலையில் மகாத்மாவின் ஜாகையில் மறுபடியும் எல்லா சமூகப் பிரதிநிதிகளும்கூடி மகாத்மாவை உணவு அருந்தும்படி கேட்டுக் கொண்டார்கள்.

"இந்த அமைதி நீடித்திருப்பதற்குப் பிரயத்தனம் செய்வதாக நீங்கள் அனைவரும் சேர்ந்து வாக்குறுதி கொடுத்தால் என் விரதத்தை முடிவு செய்கிறேன்" என்று மகாத்மா கூறினார்.

அவ்வாறே பிரமுகர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அதன் பேரில் சில திராட்சைப் பழங்களையும் ஒரு ஆரஞ்சுப் பழத்தையும் அருந்தி மகாத்மா காந்தி உண்ணாவிரதத்தை முடிவு செய்தார்!

பம்பாய் மக்கள் அனைவரும் அந்தச் சந்தோஷச் செய்தியைக் கேட்டுப் பெருமூச்சு விட்டு மகிழ்ந்தார்கள்.



ஜனவரி மாதம் 14-ந் தேதி பொங்கல் புது நாள் அன்று சைதாப்பேட்டையில் "திருமகள் டாக்கீஸ்" என்னும் இந்தப் புதிய சினிமாக் கொட்டகையைக் கனம் பக்தவத்ஸலம் திறந்து வைக்கிறார். அன்று ஆரம்பமாகும் "வாழ்க்கை"ப் படத்தின் இரண்டு ஆட்டத்திலும் கிடைக்கும் வசூல் தொகை உள்பட ஒரு நிதி முடிப்பு மகாத்மா காந்தி ஸ்தூபி நிதிக்காகக் கனம் ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களிடம் அளிக்கப்படும்.

பார்ஸிகளைப் பற்றி நான் என்ன சொல்ல? பார்ஸிகளின் கௌரவத்தையும் உயிர்களையும் ஹிந்து-முஸ்லிம்கள் பாதுகாக்கா விடில், சுதந்திரத்துக்குச் சிறிதும் தகுதியற்றவர்களாவோம். சமீபத்திலேதான் அவர்கள் தங்களுடைய தாராள குணத்தையும் சிநேகப் பான்மையையும் நிரூபித்தார்கள். பார்ஸிகளுக்கு முஸ்லிம்கள் முக்கியமாயக் கடமைப் பட்டிருக்கிறார்கள். கிலாபத் நிதிக்குப் பார்ஸிகள் ஏராளமாய்ப் பணம் உதவியிருக்கிறார்கள். ஆகையால் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு பூரண பச்சாதாபம் காட்டினாலன்றி பார்ஸிகளின் முகத்தில் என்னால் விழிக்க முடியாது. இந்தியக் கிறிஸ்துவர்கள் அடைந்த கஷ்டங்களுக்குப் பரிகாரம் செய்தாலன்றி கிழக்காப் பிரிக்காவிலிருந்து திரும்பி வரும் ஸ்ரீ ஆண்ட்ரூஸின் முகத்தை என்னால் பார்க்க முடியாது. கிறிஸ்துவர்களும் பார்ஸிகளும் தற்காப்புக்காகவோ, பழிவாங்குவதற்காகவோ செய்திருக்கும் காரியங்களை நாம் பொருட்படுத்தக் கூடாது.

என் நிமித்தமாகவே பம்பாயிலுள்ள இந்தச் சிறுபான்மைச் சகோதர சகோதரிகளுக்கு இப்படிப் பட்ட கஷ்டங்கள் நேர்ந்து விட்டன. அவர்களுக்குப் பூரண பரிகாரம் செய்து கொடுப்பது என் கடமை. ஒவ்வொரு ஹிந்து முஸ்லிமின் கடமையும் ஆகும். ஆனால் என்னைப் பின்பற்றி வேறு யாரும் பட்டினி விரதம் தொடங்க வேண்டாம். இதய பூர்வமான பிரார்த்தனையின் காரணமாக உபவாசம் இருக்கத் தோன்றினால்தான் உபவாசம் இருக்கலாம். அதற்கு அந்தராத்மாவின் தூண்டுதல் அவசியம். ஆகையால் ஹிந்து முஸ்லிம்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம். அவரவர்கள் வீட்டிலிருந்து கடவுளிடம் மன்னிப்புக் கேட்கட்டும்.

என்னுடைய சகாக்கள் என்பேரில் அநுதாபப் படவேண்டிய அவசியமில்லை. அது வீண்வேலை. அதற்குப் பதிலாக நகரெங்கும் சென்று கலகம் செய்பவர்களைக் கட்டுக்குள் கொண்டுவர முயல வேண்டும். நம்முடைய போராட்டத்தில் நாம் முன்னேறி வெற்றி பெற வேண்டுமானால் முதலில் நம்முடைய இருதயங்களைச் சுத்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

என் முஸ்லிம் சகோதரர்களுக்கு விசேஷமாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பரிபூரணமாகப் பாடுபட்டு வருகிறேன். கிலாபத் இயக்கத்தை

கோயிலில் புகுந்து அணையா நெருப்பை அணைத்து விட்டார்கள். இதுதான் பார்ஸி சமூகத்தினருக்கு என்றுமில்லாத ஆத்திரத்தை மூட்டிவிட்டது. தங்கள் மத சுதந்திரத்துக்குப் பங்கம் நேரிடுவதைப் பொறுப்பதைக் காட்டிலும், பம்பாயிலுள்ள பார்ஸிகள் அனைவரும் உயிரை இழக்கத் தயாராகக் கிளம்பிவிட்டார்கள். இந்த விவரங்களை அறிந்த காந்திஜி பார்ஸிகள் மீது குற்றம் இருப்பதாக எண்ணவில்லை. இந்த நிலைமைக்குக் காரணம் ஹிந்து—முஸ்லிம்கள் என்றே கருதினார்.

அன்று இரவு வெகு நேரம் வரையில் பம்பாய்ப் பிரமுகர்கள் அடிக்கடி வந்து மகாத்மாவிடம் கலவர நிலைமையைப் பற்றிச் சொல்லி வந்தார்கள். இரவு வந்த பிறகும் கலவரங்கள் அடங்கினவென்று தெரியவில்லை. பார்ஸி-கிறிஸ்துவ சமூகத்தினரிடமிருந்து மகாத்மாவுக்குக் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. அவரால் தங்கள் சமூகத்துக்கு நேர்ந்த இன்னல்களைப் பற்றி அக்கடிதங்களில் எழுதியிருந்ததுடன் மகாத்மாவை வெகுவாக நொந்திருந்தார்கள். சிலர் வசை மாரியும் பொழிந்திருந்தார்கள். சொத்துக்களைப் பறி கொடுத்தவர்களும் அடிபட்டவர்களும் உறவினர்களை இழந்தவர்களும் வேதனைப்பட்டு எழுதியிருந்தார்கள். இதெல்லாம் மகாத்மாவின் மனவேதனையை அதிகமாக்கி விட்டன.

அன்றிரவு கடைசியாக வந்த ஸ்ரீ ஜம்னாதாஸ் துவாரகாதாஸ் காந்திஜியிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனார். இரவு பத்தரை மணிக்கு மகாத்மா படுத்தார். ஆனால் அவர் தூங்கவில்லை. தூக்கம் எப்படி வரும்? அதே அறையில் மகாத்மாவின் காரியதரிசியான ஸ்ரீ கிருஷ்ணதாஸ் என்பவரும் படுத்திருந்தார். அவர் சற்று நேரத்துக்கெல்லாம் தூங்கிப் போனார்.

இரவு மணி 3—30 இருக்கும். மகாத்மா எழுந்து மின்சார விளக்கைப் போட்டார். உடனே ஸ்ரீ கிருஷ்ணதாஸும் விழித்துக் கொண்டார். "பென்ஸிலும் காகிதமும் கொண்டு வாரும்!" என்றார் மகாத்மா. உடனே ஸ்ரீ கிருஷ்ணதாஸ் கொண்டு வந்தார். மகாத்மா விரைவாக ஏதோ எழுதினார். பிறகு ஸ்ரீ கிருஷ்ணதாஸிடம் கொடுத்து அதன் பிரதிகள் மூன்று எடுக்கச் சொன்னார். மகாத்மா எழுதியது பம்பாய் வாசிகளுக்கு ஒரு விண்ணப்பம். அதில் ஒரு மிகக் கடுமையான விரதத்தைத் தாம் எடுத்துக் கொண்டிருப்பதாக எழுதியிருந்தார். பம்பாயில் கலவரம் நிற்கும் வரையில் தாம் உணவருந்தா விரதம் எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார். விண்ணப்பத்தின் முழு விவரம் பின்வருமாறு:—

"பம்பாய் நகரின் ஆடவர்களே! பெண்மணிகளே! சென்ற இரண்டு தினங்களாக என் மனம் படும் வேதனையை நான் வார்த்தைகளால் உங்களுக்கு விவரிக்க முடியாது. இரவு 3-30-க்கு அமைதியான மன நிலையில் நான் இதை எழுதுகிறேன். இரண்டு மணி நேரம் தியானமும் பிரார்த்தனையும் செய்த பிறகு நான் ஒரு முக்கியமான முடிவுக்கு வந்திருக்கிறேன். அதை உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

பம்பாயில் உள்ள ஹிந்து-முஸ்லிம்கள் பார்ஸிகளுடனும் கிறிஸ்துவர்களுடனும் சமாதானம் செய்து கொள்ளுகிற வரையில் நான் தண்ணீரைத் தவிர வேறு எதுவும் உட்கொள்ளப் போவதில்லை.

சென்ற இரண்டு தினங்களில் பம்பாயில் நான் பார்த்த சுயராஜ்யம் நாற்றம் எடுத்து என் மூக்கைத் தொளைக்கிறது. பம்பாயில் கிறிஸ்துவர்கள், பார்ஸிகள்—யூதர்கள் சிறு தொகையினர். பெரும்பாலோரான ஹிந்து முஸ்லிம்களின் ஒற்றுமை மேற் கண்டவர்களுக்குப் பெரும் அபாயமாய் முடிந்திருக்கிறது. ஒத்துழையாதாரின் அஹிம்சை மற்றவர்களின் ஹிம்சையைவிட மோசமாகி விட்டது. அஹிம்சை என்று வாயால் சொல்லிக் கொண்டு நம்முடன் மாறுபட்டவர்களை நாம் துன்புறுத்தி யிருக்கிறோம். இது கடவுளுக்குத் துரோகமாகும். கடவுள் ஒருவரே. சிலர் வேதத்தின் வாயிலாகவும் சிலர் கொர்ஆன் மூலமாகவும் வேறு சிலர் (பார்ஸிகள்) ஸெண்டவஸ்தா மூலமாகவும் கடவுளை அறியப் பார்க்கிறார்கள். ஆனால் எல்லாரும் அறியப் பார்க்கும் கடவுள் ஒருவரேதான். அவர் சத்தியத்தின் வடிவம்; அன்பின் உருவம். இந்த நம்பிக்கையை மெய்ப்பிக்கவே நான் உயிர் வாழ்கிறேன். இல்லாவிட்டால் உயிர் வாழ்வதிலேயே எனக்கு விருப்பமில்லை. நான் எந்த இங்கிலீஷ்காரனையும் வெறுக்க முடியாது; வேறு எந்த மனிதனையும் வெறுக்க முடியாது. இங்கிலீஷ்காரன் இந்தியாவில் அமைத்திருக்கும் ஸ்தாபனங்களை எதிர்த்து நான் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். ஆனால் அமைப்பை நான் கண்டிக்கும்போது அந்த அமைப்பை நடத்தும் மனிதர்களை வெறுக்கிறேனென்று தப்பாக நீங்கள் உணரக்கூடாது. நான் என்னை நேசிப்பது போலவே இங்கிலீஷ்காரனையும் நேசிக்கிறேன். இதுதான் என் மதம். இதை நான் இந்தச் சமயத்தில் நிரூபிக்கா விட்டால் கடவுளுக்குத் துரோகம் செய்தவனாவேன்.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

29. "என் மதம்"

மகாத்மா காந்தி "எங் இந்தியா"வுக்குக் கட்டுரை எழுதி முடித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் மௌலானா ஆஸாத் ஸோபானி திரும்பி வந்து சேர்ந்தார். தாம் காந்தி குல்லா அணியாததால் விபத்து ஒன்றுமில்லாமல் தப்பிப் பிழைத்து வந்ததாக அவர் சொன்னார். பார்ஸிகளும் கிறிஸ்துவர்களும் காந்தி குல்லா அணிந்தவர்களைக் குறிப்பிட்டுத் தாக்கி அடிப்பதாகத் தெரிவித்தார்.

மற்றொரு பக்கத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு பார்ஸிகளையும் கிறிஸ்துவர்களையும் தாக்குவதாகச் செய்திகள் வந்துகொண்டிருந்தன.

கிறிஸ்துவர்களும் பார்ஸிகளும் சர்க்காருடைய அநுமதி பெற்றுத் துப்பாக்கிகளும் ரிவால்வர்களும் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள்.

ஹிந்துக்கள்-முஸ்லிம்களிடம் தடிகள்தான் ஆயுதங்களாக இருந்தன. ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் அதிகமாயிருந்தனர்.

இவ்விதமாக இரு தரப்பிலும் பலாத்காரச் செயல்கள் போட்டி போட்டுக்கொண்டு அதிகமாகி வந்தன.

சில பார்ஸி இளைஞர்கள் துப்பாக்கி சகிதமாக ஸ்ரீ கோவிந்த வஸந்த் என்னும் மிட்டாய்க் கடைக்காரரின் வீட்டுக்குள் பலாத்காரமாகப் புகுந்து அவரை அடித்துக் குற்றுயிராக விட்டு விட்டுச் சென்றார்கள். இந்தச் செய்தி மகாத்மாவின் ஜாகையை எட்டியபோது அந்த ஜாகையில் வசித்த மகாத்மாவின் சகாக்கள் பெருங் கவலையில் ஆழ்ந்தார்கள். அந்த மாதிரி முரட்டுப் பார்ஸி இளைஞர்கள் சிலர் மகாத்மாவின் ஜாகைக்குள்ளும் புகுந்து அவரைத் துன்புறுத்த முற்பட்டால் என்ன செய்கிறது? மகாத்மாவுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் பிறகு பம்பாயில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் என்பதில் சந்தேகமில்லை. ஹிந்து—முஸ்லிம்கள் அப்போது பார்ஸிகளின் மீது பழி வாங்கத் தொடங்குவதை யாராலும் நிறுத்த முடியாது.

இப்படிக் காந்திஜியின் சகாக்கள் கவலைப் பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் மகாத்மாவோ தன்னைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. இந்தப் பலாத்காரப் பிசாசின் தாண்டவத்தை நிறுத்துவது எப்படி என்பதைப் பற்றியே சிந்தனை செய்தார். அவர் வெளியேறிச் சென்று ஜனங்களுக்கு நற்போதனை செய்வதால் பலன் ஏற்படும் என்று அவருக்குத் தோன்றவில்லை. முதல் நாள் அவ்விதம் செய்து பார்த்ததில் பலன் ஏற்படவில்லையல்லவா?

மகாத்மாவின் அநுதாபமெல்லாம் பார்ஸிகள் பக்கத்திலேயே இருந்தது. ஏனெனில் முதலில் அவர்களைப் பலாத்காரமாகத் தாக்கத் தொடங்கியவர்கள் ஹிந்து-முஸ்லிம்கள்தான். முதலில் தாக்கியது மட்டும் அல்ல; செய்யத் தகாத மதத் துவேஷக் காரியம் ஒன்றையும் செய்து விட்டார்கள். பார்ஸிகள் தங்களுடைய மதத்தைத் தொந்தரவின்றிக் கடைப்பிடிப்பதற்காக ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் இந்தியாவைத் தேடி வந்தவர்கள். அராபிய முஸ்லிம்கள் பாரஸீகத்தை வென்றபோது, முஸ்லிம் ஆட்சியில் மத சுதந்திரம் இராது என்று இந்தியாவுக்கு அவர்கள் வந்தார்கள். இந்தியாவில் அவர்கள் கோரிய மத சுதந்திரம் கிடைத்தது. பார்ஸிகள் அக்னி தேவனைக் கடவுள் என்று பூஜிப்பவர்கள். ஆகையால் என்றும் அணையாத தீயை அவர்கள் தங்கள் கோயிலில் வைத்து வளர்த்துப் பூஜித்து வந்தார்கள். வேல்ஸ் இளவரசர் விஜயத்தன்று நடந்த களேபரத்தில் ஹிந்து முஸ்லிம்கள் அந்தப் பார்ஸிக்

அறிந்து கொண்ட பாரபட்சமற்ற ஒரு சில பார்வையாளர்கள், பாகிஸ்தானின் சூழ்ச்சிகளையும் சர்வதேசக் கமிஷனர்களின் நேர்மையற்ற போக்கையும் அம்பலப்படுத்தி வருகிறார்கள்.

உதாரணமாக, "நியூ ஸ்டேட்ஸ்மென் அண்ட் நேஷன்" என்ற பிரபல ஐரோப்பியப் பத்திரிகையில் ஒரு பிரமுகர் குறிப்பிட்டிருப்பதைப் பார்ப்போம். ஷேக் அப்துல்லா சர்க்காரின் படைகளையும் இப்ராகிம் தலைமையிலுள்ள ஆஸாத் படைகளையும் சம நிலையில் வைப்பது பகலையும் இரவையும் ஒன்று என்று சொல்வது போலாகும் என்கிறார் அந்தப் பார்வையாளர்!

"காஷ்மீர் மகாராஜாவின் கொடுங்கோன்மையை எதிர்த்துக் கலகம் செய்பவரும் ஆஸாத் படைகளுக்கும் காஷ்மீர் சர்க்கார் படைகளுக்குச் சமமான அந்தஸ்து உண்டு என்று பாகிஸ்தான் கூறுகிறது. அந்தக் கூற்று எவ்விதத்திலும் ஒத்துக்கொள்ள முடியாதது. உண்மையிலே மகாராஜாவின் ஆட்சியைச் சென்ற பதினேழு வருஷங்களாக எதிர்த்துச் சிறைக்கும் சென்று கஷ்டப்பட்டுத் தலை நரைத்துப்போன காஷ்மீர் தேசிய மகாநாட்டின் தலைவர் ஷேக் அப்துல்லாவுக்கும், 1947-ம் வருஷத்தில் நடந்த பாகிஸ்தானால் சிருஷ்டிக்கப்பட்ட இளைஞர் இப்ராகிமுக்கும் வேற்றுமை எதுவும் இல்லை என்று கூறமுடியுமா?"

காஷ்மீர் மக்களின் சுதந்திரத்துக்காகப் பல ஆண்டுகள் போராடிச் சிறை சென்ற தியாகி ஷேக் அப்துல்லாவையும், யாருக்கும் தெரியாமல் திடீரென தோன்றி முளைத்துப் பாகிஸ்தானின் பொம்மையாக விளங்கும் இப்ராகிமையும் ஒரே நிலையில் வைப்பது அறியாமையல்ல, பெரிய அக்கிரமம் என்பதற்கு நேரில் சென்று உண்மையைக் கண்டறிந்த பார்வையாளரின் மேற்படி தீர்ப்பைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

பாகிஸ்தானின் வெறியைத் தணித்து அதனுடன் உறவு கொள்வதற்காக இதுவரையில் இந்தியா எத்தனையோ சலுகைகள் அளித்தது.

இந்தியா கொடுத்த ஐம்பது கோடி ரூபாயையும் இராணுவச் சாதனங்களையும் பாகிஸ்தான் காஷ்மீர்மீது அக்கிரமமாகப் படையெடுப்பதற்கு உபயோகப் படுத்தியது.

அதிலிருந்து இதுவரையில் இந்தியா காட்டிய ஒவ்வொரு சலுகையையும் பாகிஸ்தான் இந்தியாவுக்கு விரோதமாக துஷ்பிரயோகம் செய்து வந்திருக்கிறதேயன்றி, நேர்மையாக நடந்து கொள்ளவில்லை.

எனவே, பாகிஸ்தானின் அக்கிரமத்தை இனியும் பொறுத்துக்கொண்டு மேலும் மேலும் சலுகை அளிக்க இந்தியா விரும்பவில்லை.

ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட திருடர்கள், திருடர்களிடம் பணத்தைப் பறிகொடுத்தவர், போலீஸார் எல்லோரையும் அழைத்து "உங்களுக்குள் சமரசம் ஏற்படும்படி செய்வதற்காக ஒரு மத்தியஸ்தரை நியமிக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்று நீதிபதி கூறினால், எப்படி இருக்கும்?

அது, இதுவரையில் யாரும் கண்டும் கேட்டும் அறியாத ஒரு புதிய 'நீதி'யாகத் தோன்றும் அல்லவா?

ஆனால் ஐ. நா. சபையைச் சேர்ந்த பிரமுகர்கள் காஷ்மீர் பிரச்னையையொட்டி அத்தகைய 'நீதி' வழங்கவே துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

காஷ்மீர் மக்களைப் பலியிட்டு, காஷ்மீர் நகரங்களைக் கொள்ளையிட்டு, காஷ்மீர் கிராமங்களைக் கொளுத்திய கொள்ளைக் காரர்களையும், அந்தப் பேராபத்தில் சிக்கிய காஷ்மீர் ஜனங்களுக்கு உதவிபுரிந்து அவர்களைக் காப்பாற்றிய இந்தியப் படைகளையும் சம நிலையில் வைத்து மத்தியஸ்தம் செய்வது எவ்வளவு அநீதி என்பதை அறியும் ஆற்றல், ஐ. நா. சபையைச் சேர்ந்த சர்வதேச நீதி நிபுணர்களுக்குச் சூன்யமாகி விட்டது போலும்!

"தனிப்பட்ட மனிதர், அவர் எவ்வளவு பெரியவராயினும் நாற்பது லட்சம் ஜனங்களின் விதியை நிர்ணயிக்க முற்படுவது தகாத காரியம்" என்று ஜவாஹர்லால்ஜி கூறுகிறார்.

காஷ்மீரத்தின், காஷ்மீர மக்களின் எதிர்கால விதியை நிர்ணயிக்கும் உரிமை அந்த மக்களைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்பதை இந்திய சர்க்கார், பாகிஸ்தான் சர்க்கார், ஐ. நா. சபையினர் எல்லாரும் ஆட்சேபனையின்றி ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருக்க, காஷ்மீரிலுள்ள நாற்பது லட்சம் ஜனங்களின் விதியை நிர்ணயிக்க உலக மகா சபையைச் சேர்ந்த பிரமுகர்கள் ஒரு புதிய பிரும்மாவைச் சிருஷ்டிக்கப் போவதாகப் பயமுறுத்துவதன் நோக்கம் என்ன?

ஆனால், அவர்கள் சிருஷ்டிக்கும் புதிய நீதியையோ, புதிய பிரும்மாவையோ இந்தியாவும் காஷ்மீரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

புதிய நீதி! புதிய பிரும்மா!

ஒருவருக்குத் தம்முடைய மகன் நீதி சாஸ்திரத்தில் நிபுணனாக விளங்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

எனவே தகுந்த குருவாகக் கண்டு பிடித்து அவரிடம் தம்முடைய பையனை ஒப்புவித்தார்.

பையன் வருஷக் கணக்கில் பாடு பட்டான். குருவும் பலனை எதிர் பாராமலே அவனுக்குச் சொல்லிக் கொடுத்து வந்தார்!

பையனுடைய குருகுல வாசம் ஒரு வழியாக முடிவடைந்தது.

நீதி சாஸ்திரத்தைக் 'கரை கண்டு' திரும்பி வந்த அருமை மகனைப் பார்த்து "இத்தனை வருஷ காலம் நீதி சாஸ்திரத்தை ஆராய்ச்சி' செய்ததன் பயனாக நீ என்ன முடிவு கண்டாய்?" என்று ஆவலாகக் கேட்டார் தகப்பனார்.

"நீதி சாஸ்திரம் மிக மிகக் கடின மானது என்பதும், அதற்கும் எனக்கும் அணுவளவும் பொருத்தமில்லை என்பதும் தான் நான் கண்டு கொண்ட முடிவு" என்று பிள்ளையாண்டான் பளிச்சென்று பதில் அளித்தான்!

நீதி சாஸ்திரத்தில் தன் பிள்ளை மகா பண்டிதனாக விளங்கப் போகிறான் என்று எண்ணிப் பரவசம் அடைந்து கொண்டிருந்த அவருக்குத் தன்னுடைய மகனின் மேற்படி பதில் எப்படி இருந்திருக்கும்?

•   •   •

காஷ்மீர் பிரச்னையை விசாரித்து நீதி வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபை அனுப்பிய கமிஷனர்கள் காஷ்மீருக்கு வந்தார்கள். பிறகு பாகிஸ்தானுக்குச் சென்றார்கள். பாகிஸ்தானிலிருந்து காஷ்மீருக்கும் காஷ்மீரத்திலிருந்து இந்தியாவுக்கும் ஓய்ச்சல் ஒழிவின்றி விமான யாத்திரை செய்த வண்ணமாக இருந்தார்கள்.

மேலும் அந்தக் கமிஷனர்கள் காஷ்மீர் மந்திரிகளைக் கண்டு பேசினார்கள். பாகிஸ்தான் மந்திரிகளுடன் கலந்தாலோசித்தார்கள். இந்திய சர்க்கார் மந்திரிகளுடன் விவாதித்தார்கள். பிறகு தங்களுக்குள்ளேயே பரஸ்பரம் கலந்து ஆலோசனை செய்தார்கள்.

மேற்படி சடங்குகள் எல்லாம் பல மாதங்கள் வரையில் நடந்தன.

கடைசியாக அவர்கள் ஐரோப்பாவுக்குச் சென்று தங்களுடைய அறிக்கையை எழுத ஆரம்பித்தார்கள். அதனையைக் குழப்பிக் கொண்டு பல நாட்கள் வரையில் எழுதினார்கள்.

அதோ வரப்போகிறது, இதோ வரப் போகிறது என்று எல்லோராலும் எதிர் பார்க்கப்பட்ட அவர்களுடைய அறிக்கை கடைசியாக வெளியாயிற்று.

"பல மாதங்களாக ஆராய்ச்சி செய்ததன் பலனாகக் காஷ்மீர் பிரச்னை மெத்தக் கடினமானது என்ற விஷயத்தைத் தெரிந்து கொண்டோம். எனவே, அதைத் தீர்த்து வைக்க எங்களால் முடியவில்லை."

இதுதான் அந்தக் கமிஷனர்களுடைய அறிக்கையின் சாரம்!

அவர்கள் அந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாததுடன், இனி யாரும் அதைச் சுலபமாகத் தீர்க்க முடியாமல் செய்வதற்கான விபரீத யோசனைகளையும் கூறியிருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேறிய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்ட காஷ்மீர் ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம், ஆஸாத் காஷ்மீர் படைகள் என்ற கொள்ளைக்காரர் படைகள் தாமதமின்றிக் கலைக்கப்பட வேண்டும் என்பதுதான்.

ஆனால், இன்றளவும் அந்தப் படைகள் கலைக்கப்படவில்லை. அது மாத்திரமல்ல, அந்தப் படைகள் இப்போது பன்மடங்கு அதிகமாக்கப் பட்டிருக்கின்றன என்பதை மேற்படி கமிஷனர்கள் உள்பட எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும், அந்த அநீதியைக் கண்டிக்கும் நேர்மையோ, தைரியமோ கமிஷனர்களுக்கு ஏற்படவில்லை.


•   •   •

பாகிஸ்தானின் அக்கிரமச் செயல்களைக் கமிஷனர்கள் மழுப்ப முயற்சித்திருப்பதன் மூலம், தெரிந்தோ தெரியாமலோ, உலகத்திலே அமைதியின்மைக்கும் மதவெறிக்கும் போர் வெறிக்கும் உடந்தையாகி இருக்கிறார்கள்.


எனினும், அந்த அக்கிரமங்களை உலகம் அறிந்துகொள்ளாமல் மறைத்து விட அவர்களால் முடியவில்லை.

ஏனெனில், காஷ்மீருக்கு நேரில் விஜயம் செய்து உண்மை நிலையை

நிகழ்ச்சிச் சித்திரம் -சாஸ்திரி



நமது கல்வி முன்னேற்றத்துக்கான அற்புதமான திட்டங்கள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றப் போதிய பண வசதிதான் இல்லை. —மௌலானா ஆஸாத்.



ஆந்திர மாகாணம் ஏற்படுவதற்கு முன் செய்து முடிக்க வேண்டிய பரிசீலனைகளும் காரியங்களும் ஏராளமாக இருக்கின்றன.— பண்டித நேரு.

மலர் 9

கல்கி

தமிழ்த் திருநாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

இதழ் 24

என்ன சேதி?


எல்லை வகுப்போம்

தமிழ்நாட்டுடன் ஐக்கியம் அடைய வேண்டும் என்ற தங்களுடைய கோரிக்கையை அதிகாரிகள் மறந்து விடாமல் இருப்பதற்காகத் திருவாங்கூர்த் தமிழ் மகாஜனங்கள் அடிக்கடி அவர்களுக்கு ஞாபகப் படுத்தி வருகிறார்கள். சென்ற வாரம் கன்னியா குமரியிலே ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பாரதியின் தலைமையில் நடந்த தமிழ்நாடு எல்லை மகா நாட்டிலும் அவர்கள் அந்தக் கோரிக்கையை மீண்டும் வற்புறுத்தினார்கள். மகா நாட்டை ஆரம்பித்து வைத்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தமிழர்களின் கோரிக்கை தர்ம நியாயமானது என்பதை அசைக்க முடியாத ஆதாரங்களுடனும் இலக்கியச் சான்றுகளுடனும் எடுத்துக் காட்டினார். குப்பிக்குள் தண்ணீரும் எண்ணெயும் சேர்ந்து இருப்பது போலத் திருவாங்கூரில் மலையாளிகளும் தமிழர்களும் இருந்து வருகிறார்கள் என்றும், எனவே மலையாளிகள் வசிக்கும் பிரதேசங்களையும் தமிழர்கள் வசிக்கும் பிரதேசங்களையும் பிரிக்க வேண்டியது அவசியம் என்றும் கவிமணி குறிப்பிட்டார்.

"வட வேங்கடத்திலிருந்து கன்னியா குமரி வரையில்—மைசூர், கொச்சி, திருவாங்கூர் முதலியவற்றில் பெருவாரியான தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளையும் காரைக்கால் புதுச்சேரி முதலியவற்றையும் கொண்ட தமிழ் மாகாணத்தை ஸ்தாபிக்க ஓர் எல்லைக் கமிஷனை நியமிக்குமாறு இந்த மகாநாடு இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது" என்று மகாநாட்டில் ஒரு தீர்மானமும் நிறைவேறியது. கவி மணியின் ஆசியையும் தமிழ் நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களின் ஆதரவையும் பெற்ற மேற்படி தீர்மானம் நடை முறையில் அமுலுக்கு வரும் நன்னாள் அதிக தூரத்தில் இல்லை என்று நம்புவோமாக!

கவலைகள் தீருமா?

“இலங்கைக்கு வருவதில் எனக்கு எப்போதுமே ஒரு தனி ஆனந்தம். இங்கு வந்தால், உலகத்தின் கவலைகள் எல்லாம் பறந்தோடி விடுவது போல் தோன்றுகிறது. இங்கு நடக்கப் போகும் காமன்வெல்த் மகாநாடு இந்தத் தலைமுறையிலுள்ள உலக ஜனங்களின் கவலைகளை அகற்ற உதவி புரியும் என்று நம்புகிறேன்" என பண்டித ஜவாஹர்லால் நேரு விமானத்திலிருந்து இலங்கையில் இறங்கிய உடனே கூறினார். இலங்கையில் நடக்கும் காமன்வெல்த் மகாநாட்டின் பலனாக உலக ஜனங்களின் கவலை தீருமா என்பதைக் காட்டிலும், பண்டித நேரு இலங்கைக்கு விஜயம் செய்ததன் பலனாக அங்குள்ள இந்தியர்களின் கவலைகள் தீருமா என்பதில்தான் இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள இந்திய மகா ஜனங்கள் அதிகச் சிரத்தை கொண்டிருப்பார்கள். ஏனெனில் உலக ஜனங்களின் கவலைகளைத் தீர்க்கும் சக்தி காமன்வெல்த் மகாநாட்டுக்கு இருக்குமா என்பதில் பலருக்கும் சந்தேகம் ஏற்பட இடம் உண்டு. ஆனால், இலங்கையிலுள்ள இந்தியர்களின் கவலைகளைத் தீர்க்கும் சக்தி பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கு உண்டு என்பதில் யாரும் சந்தேகம் கொள்ள மாட்டார்கள். அற்பத் தொகை அனுப்புவது முதல் பிரஜா உரிமை வரையில் பல விஷயங்களை பொட்டியும் அங்குள்ள இந்தியர்கள் கஷ்டத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளும் இந்திய சர்க்காரின் முயற்சியும் இதுவரையில் யாதொரு பலனையும் அளித்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, நாளுக்கு நாள் மாதத்துக்கு மாதம் நிலைமை மோசமாகி வருகிறது. ஜவாஹர்லால்ஜியின் விஜயத்தினாலாவது அங்குள்ள இந்தியர்களின் கஷ்டங்களும் கவலைகளும் தீர வழி பிறக்குமா?



கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 24 | ஜனவரி 15 | விரோதி௵ தை 2உ.



JUPITER PICTURES CIRCUIT
ஜூபிடரின்
கிருஷ்ண
விஜயம்
பத்தாண்டின் பொற்புடமாய்
பொலிவது ஏன்?
மகோன்னதமான கதை!
மகத்தான தயாரிப்பு!!
மகாவிசித்திரமான மாயாஜாலங்கள்!!!
எதிரொலிக்கும் இன்னிசை!!!!
எல்லாவற்றிற்கும் மேலாக
இணையற்ற கவர்ச்சிகரம்!!!!!
இவைகளே காரணங்கள்!
...சித்திரம்...
ஜனவரி 14-ல் வெளிவருகிறது
சென்னை
கெயிட்டி &
கிரவுன்



சென்னை: பிராட்வே - சன் - சரஸ்வதி

மதுரை: சந்திரா டாக்கீஸ்

மற்றும் முக்கிய நகரங்களிலும் நடைபெறுகிறது



ஒவ்வொரு வேளை உணவுடனும் ஆரோக்கியம் தரும் பானம்

குடும்பத்தின் ஒவ்வொரு நபரும் விரும்பக்கூடிய நறுமணம் உள்ள "ஒவல்டின்" விஷயமறிந்த தாய்மார்கள், காலையிலும் இரவிலும் மட்டுமின்றி ஒவ்வொரு வேளை உணவின் போதும் இந்த உணவு பானத்தைக் கொடுப்பதன் பயனை நன்குணர்வர்.

'ஒவல்டின்' மதிப்புவாய்ந்த அதிகப்படி உணவாக இருந்து விசேஷ வலுவும் ஜீவ சக்தியுமளிக்கும். சாதாரண உணவின் இது எப்பொழுதும் இடைக்காது. குழந்தைகள் போஷாக்குடன் வளரவும், இரவில் நன்றாகத் தூங்கவும் உதவுகின்றது.

'ஒவல்டினில்' பழுத்த பார்லி மால்டின் புஷ்டியும், ஜீவ சக்தியும் அளிக்கும் குணங்களும், சுத்தமான ஏட்டுப்பாலும், விசேஷமாகத் தயாரித்த கொக்கோவும், மதிப்பு வாய்ந்த இயற்கை பாஸ்பேட்டுகளும், விட்டமின்களும் நிறைந்த அளவில் அடங்கியுள்ளன.

இளையோர், நடுத்தர வயதினர், முதியோர் யாவருக்கும் வேண்டியது இது ஒன்றுதான்.

'OVALTINE'

ஒ வ ல் டி ன்



உலகில் மிகப் பிரசித்தி பெற்ற உணவு பானம்

விநியோகஸ்தர்கள்: ஜெஹாப்ஸ் ட்ரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்.

OV. 303.

வாழ்க்கை · வாழ்க்கை · வாழ்க்கை

எங்கும்

வாழ்க்கை

என்பதே பேச்சு

இதுபோன்ற சமூகச்சித்திரத்தை நீங்கள் இதுவரைபார்த்ததில்லை

உணர்ச்சி மிகுந்த கதை

மறக்க முடியாத இசை

கண் நிறைந்த நாட்டியங்கள்

ஏவி எம் புரொடக்‌ஷன்ஸ்

வாழ்க்கை

AVM புரொடக்‌ஷன்ஸ்

சென்னை.. பாரகன் · மஹாராணி · லக்ஷ்மி

பெங்களூர்

..சூபர் · நியூ ஆரோரா · மினர்வா

மதுரை...சென்ட்ரல் · கோவை...வெரைட்டி · கர்நாடிக்

மற்றும்

தமிழ் நாட்டிலும், மலபாரிலும், மைசூரிலும்

50 நகரங்களில்